வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்




Email : news@eelanadu.lk மலர் : 04 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 135 பக்கங்கள் : 20



07 சனத்தொகையில் சீனாவை விஞ்சுவது இந்தியாவுக்கு நன்மையா?



08 செய்திகளை ஆக்கிரமிக்கும் குரங்குக் கூட்டம்



09 தென்னிலங்கை குரங்குகளும் யாழ்ப்பாண தெருநாய்களும்!



10 தலைவர் அமிர்தலிங்கமும் இந்திய இலங்கை ஒப்பந்தமும்!

# நெடுந்தீவில் 5 முதியோர்கள் கொடூரமாக வெட்டி கொலை!

## 98 வயது மூதாட்டி படுகாயங்களுடன் வைத்தியசாலையில் இறங்குதுறைக்கு அருகே உள்ள வீடு ஒன்றில் பயங்கரம்!

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 23**

**நெடுந்தீவில் ஐந்து வயோதிபர்கள் கொடூரமான முறையில் சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். வெட்டுக் காயங்களுக்கு உள்ளான மற்றொரு 98 வயதுப் பெண் ஒருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**



நெடுந்தீவு இறங்குதுறையை அண்டி உள்ள வீட்டில் தங்கியிருந்தவர்களில் ஐவரே கொல்லப்பட்டுள்ளனர். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

நேற்று அதிகாலைவேளை இந்தக் கொலைகள் இடம்பெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்ற போதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

வீட்டில் அதன் உரிமையாளரான வயோதிபப் பெண், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் மற்றும் வெளிநாட்டில் இருந்து வருகை தந்த மூவர் என ஆறு

19



## கொல்லப்பட்டோரின் சடலங்கள் போதனா வைத்தியசாலைக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 23

நெடுந்தீவில் நேற்று அதிகாலை படுகொலை செய்யப்பட்ட ஐவரின் உடல்களையும் ஊர்காவற்துறை நீதவான் கஜநிதிபாலன் நேற்று பிற்பகல் நேரில் சென்று பார்வையிட்டதோடு உடல்களைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா

19

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச்சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 23

நெடுந்தீவு குறிக்காட்டுவான் இடையேயான படகுச் சேவை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இடம்பெற்ற படுகொலையை தொடர்ந்து குற்றவாளிகள் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில் இந்த படகுச் சேவை இடை

19

## கொலைகாரர்களை உடனே கைது செய்!

### நீதிவான் முன் அதிகாரிகளை முற்றுகையிட்ட மக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 23

நெடுந்தீவில் நேற்று நடைபெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் நேர்மையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தி மக்கள் அங்கு நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நெடுந்தீவு இறங்குதுறையில் ஒன்றுகூடிய

19

## பொலிஸ் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 23

நெடுந்தீவு இறங்கு துறைக்கு அருகே வீடொன்றில் படுகொலை செய்யப்பட்ட 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த 5 சடலங்களும் நீதிவான் பார்வையிட்டபின் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக நெடுந்தீவு பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலங்களாக மீட்கப்பட்ட ஐவரும் உறவினர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவில் இருந்து நேற்று

19

## பெரமுன புதிய தலைவராக உத்துராவல தம்மரத்ன தேரர்



கொழும்பு, ஏப். 23

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய தலைவராக பேராசிரியர் வணக்கத்துக்குரிய உத்துராவல தம்மரதன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் அவரது நியமனம் ஏகமனதாக வழங்கப்பட்டதாக

19

## வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் 25ஆம் திகதி பொது கடையடைப்பு

### ஏழு தமிழ்க்கட்சிகள் இணைந்து அழைப்பு



யாழ்ப்பாணம், ஏப். 23

வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் 25ஆம் திகதி பொது கடையடைப்புப் போராட்டத்துக்கு 7 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

நேற்று தனியார் விடுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இந்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு -கிழக்கில் பௌத்த, சிங்கள இராணுவமயமாக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும், புதிய

19

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகைகளை இலங்கை இழக்கும் அபாயம்!

### புதிய பயங்கரவாதச் சட்டமூலத்தால்

கொழும்பு, ஏப். 23

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில், அமெரிக்காவும், பிரிட்டனும், ஐரோப்பிய ஒன்றியமும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில், இலங்கை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளை இழக்கும் அபாயம் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தின் ஐரோப்பிய வெளிவிவகார நடவடிக்கை பிரிவின் உதவி நிர்வாக இயக்குநர் பவ்லா பம்பலோனி, புதிய யோசனைக்கு அதிருப்தியை வெளிப்படுத்தி, இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய சட்டமூலத்தின் உள்ளடக்கம் தொடர்பில் அமெரிக்கா தமது அதிருப்தியை வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க ஊடாகத் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் மாற்றப்படாவிட்டால், முன்னுரிமை வர்த்தகம் மூலம் வர்த்தக உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று, இலங்கை வெளியுறவுச் செயலாளர் அருணி

19

## இப்படியும் நடக்கிறது...!

அரசாங்கம் - சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுக்கு இடையிலான ஒப்பந்தம் குறித்த பாராளுமன்ற விவாதத்தை தமிழ் கட்சிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் புறக்கணிக்கலாம் என்று செய்தி ஒன்று வெளிவந்திருந்தது.

சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில், அரசாங்கம் மொழி உரிமையை மீறியுள்ளதாகத்தெரிவித்து, இதைக் கண்டித்தும் அனைத்து மக்களின் மொழி உரிமையை பாதுகாக்கும் நோக்கிலும் எதிர்க்கட்சிகள் இந்த விவாதத்தை தவிர்க்கலாமெனக் கூறப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசு கட்சி என்பன கோரின. இதேபோன்று, சிங்கள மொழிபெயர்ப்பை ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில கட்சிகள் கோரியிருந்தன.

ஆனால், அரசாங்கத்துக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பான ஆவணத்தின் ஆங்கில வடிவமே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஆங்கிலத்திலேயே தயாரிக்கப்பட்டு கையெழுத்திடப்பட்டிருக்கும் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே. ஆனால் அதனை பாராளுமன்றில் முன்வைக்கும்போது அதன் மொழிபெயர்ப்பையும் சேர்த்து தாக்கல்செய்திருக்க வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளக்கூடியது தான்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை சாதாரண மக்கள் அறிந்து விடக்கூடாது என்ற நோக்கத்துடன் அரசு சூழ்ச்சிகரமாக இவ்வாறு செயல்படுகிறது என்றும் இதன்போது எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியிருந்தன.

ஆனால் இதனை காரணம் காட்டி பாராளுமன்றத்தில் நடக்கும் விவாதத்தை புறக்கணிப்பது இதிலுள்ள கடுமையான நிபந்தனைகளை மட்டுமல்ல அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் மக்கள் அறிந்துகொள்ள முடியாமல் அல்லவா போய்விடும். பாராளுமன்றில் அது சிங்களமொழியில் முன்வைக்கப்பட்டிருந்தாலும், அது பாராளுமன்ற பதிவேட்டில் (கன்சாட்) வெளியாகியிருக்கும். அப்படி வெளியாகியிருந்தால் அது சாதாரண மக்களைச் சென்றடையப் போவதில்லை. மாறாக அதுபற்றிய விவாதத்தில் எதிர்க்கட்சிகள் கலந்துகொண்டு, அந்த ஒப்பந்தத்தில் உள்ள தீமைகளை சுட்டிக்காட்டி பேசினால் அது சாதாரண மக்கள் மத்தியிலும் போய்ச் சேர்ந்து, அவர்களின் விவாதப் பொருளாகியிருக்கும்.

இப்படி ஒரு மொழி பெயர்ப்புக்காக முன்னரும் ஒருதடவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு (அப்போது தமிழரசும் அதில் இருந்தது) எதிர்ப்பு வெளியிட்டு, பாராளுமன்றத்தில் விவாதத்தையே நடக்க முடியாமல் செய்தது இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

மத்திய வங்கியில் நடைபெற்ற ஊழல் தொடர்பான விசாரணை அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, விவாதத்திற்கு எடுக்கப்படவிருந்தபோது, அதன் தமிழ் மொழிபெயர்ப்பை காரணம்காட்டி விவாதத்தையே நடத்தவிடாமல் தடுத்த கைங்கரியத்தை கூட்டமைப்பு செய்தது. அது எதற்காக என்பதற்கு ஆய்வு தேவையில்லை. அந்த ஊழல் குற்றச்சாட்டு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எதிரானது. அவருக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதை தவிர்க்க கூட்டமைப்பு அப்போது மொழியுரிமையை பாவித்து அரசுக்கு உதவியது இரகசியமானதல்ல.

இப்போது, சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்தின் பின்னர் நடைபெறும் வாக்கெடுப்பில் ரணில் அரசிற்கு அதரவு வழங்கவிருக்கும் எதிரணியினர் அதற்கு ஆதரவாகவே வாக்களிப்பர் என்பது தெரிந்ததுதான். அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசுக்கான அழைப்பை விடுப்பார் என்றும் நம்பப்படுகின்றது. அவ்வாறு ஒரு சந்தர்ப்பத்தை தவிர்ப்பதற்காகவே இப்போது மொழிப்பிரச்னையை காரணம்காட்டி எதிரணிக்கு உதவ முயல்கின்றனரோ என்று எண்ணாமலும் இருக்க முடியவில்லை.!

- ஊர்க்குருவி

# இலங்கை அரசியல்வாதிகள் முட்டாள்களாக நடக்கிறார்கள்

## ஜனக ரத்நாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 23

இலங்கையின் அரசியல்வாதிகளை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கடுமையாக விமர்சித்துள்ளார்.

அரசியல்வாதிகள் முட்டாள்களாகச் செயற்படுகிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மின் கட்டண உயர்வை ஆதரிக்க மறுத்த தம்மைப் பதவி நீக்கம் செய்ய எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அழுத்தம் கொடுத்து வருகிறார்.

எனினும், தன்னை நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் தேவைப்படும் 113 பெரும்பான்மையை பெற முடியாது என்று ரத்நாயக்க சவால் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சாரத்தின் தேவை வெகுவாகக் குறைந்துள்ளது. எனினும் தேவை குறைவது நட்டத்தில் இருக்கும் இலங்கைக்கு உதவாது.

இந்த நிலையில் மின்கட்டண உயர்வு மூலம் இழப்பை ஈடுகட்ட மின்சார சபை முயற்சித்து வருகிறது.

அரசியல்வாதிகளுக்கு புரியாத அடிப்படை விஷயங்கள் இவையாகும். அவர்களுக்கு பொருளாதாரம் புரியவில்லை.

அவர்களுக்கு அரசியல் மட்டுமே தெரியும்.

நாட்டில் மின்சாரக் கட்டணத்தில் இன்னுமொரு சீர்திருத்தம் சாத்தியம். அது மற்றொரு கட்டண உயர்வாகக் கூட இருக்கலாம் - என்றார்.

இதேவேளை, ஜனாதிபதி பதவிக்கு வருவதற்காக கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்த ஜனக ரத்நாயக்க, தற்போது இந்த தீர்மானத்திற்கு வருந்துவதாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய வுக்கு பொது அறிவு இல்லை என்றும் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ)

# தாதியர்கள் 15 பேருக்கு இஸ்ரேலில் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஏப். 23

இலங்கையர்கள் 15 பேருக்கு இஸ்ரேலில் தாதியர்களுக்கான வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இஸ்ரேலிய சனத்தொகை மற்றும் குடிவரவு அதிகார சபைக்கு இடையே 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய இந்த வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தாதியர் சேவைக்கான 51 ஆவது குழுவாக இந்த 15 இலங்கையர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

அத்துடன், 2022 ஏப்ரல் 28 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 302 இலங்கையர்கள் தாதியர் வேலைவாய்ப்பு பிற்காக இஸ்ரேலுக்கு சென்றுள்ளனர்.

இதேவேளை, இந்த வேலைவாய்ப்பானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாத்திரமே வழங்கப்படும் எனவும், இஸ்ரேலில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக எந்தவொரு வெளிநபருக்கும் பணம் அல்லது கடவுச்சீட்டை வழங்குவதைத் தவிர்க்கவேண்டும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# கடும்வெப்பமான வானிலையில் இருந்து கால்நடைகளைப் பாதுகாக்கவேண்டும்!

கொழும்பு, ஏப். 23

வெப்பமான வானிலையில் இருந்து கால்நடைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

வெளியில் நடமாடும் ஆடுகள், மாடுகள் போன்ற விலங்குகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

இது தொடர்பில் மாகாண சுகாதார பணிப்பாளர்கள் ஊடாக கால்நடை பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் விலங்குகளுக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலமாக, விலங்குகளை வெப்பத்திலிருந்து பாதுகாக்க முடியும் என்பதுடன், முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதவிடத்து, விலங்குகளுக்கு நோய்கள் ஏற்படுவது மாத்திரமன்றி அவை உயிரிழக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

வெப்பமான வானிலை அடுத்த மாத முற்பகுதி வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கடும் குளிர் காரணமாக கடந்த டிசெம்பர் மாதம் நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மார்ச்சில் பணவீக்கம் குறைவு

கொழும்பு, ஏப். 23

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில், மார்ச் மாதத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு அல்லது பணவீக்கம் கணிசமாகக் குறைவடைந்துள்ளது.

பெப்ரவரியில் 53.06 வீதமாக காணப்பட்ட பணவீக்கம், மார்ச் மாதத்தில் 49.2 வீதமாக குறைவடைந்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின் படி, மார்ச் மாதத்தின் உணவுப் பணவீக்கம் 42.3 மூன்று வீதமாகக் குறைவடைந்துள்ளது.

இருப்பினும், உணவு அல்லாத பணவீக்கம் தொடர்ந்தும் 54.9 வீதமாகக் காணப்படுகின்றது. (அ)

# இரு மாகாணகளுக்கு புதிதாக பிரதம செயலாளர்கள் நியமனம்

கொழும்பு, ஏப். 23

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு புதிய மாகாண பிரதம செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, மத்திய மாகாண செயலாளராக அஜித் பிரேமசிங்கவும், ஊவா மாகாண செயலாளராக தமயந்தி பரணகமவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


குறித்த பதவியிலுள்ள அதிகாரிகள் ஓய்வு பெறுவதால், புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ஆட்சியாளர் பகிரங்கமாக பொதுநிதியை திருடும் ஒரே ஒரு நாடு இலங்கை மட்டுமே!

## ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 23

**தாக்குதல் நடந்து 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும், உயிர்த்தஞாயிறு தாக்குதலுக்குப் பொறுப்பேற்க எவரும் இல்லாதது துரதிர்ஷ்டவசமானது என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**



உலகில் ஆட்சியாளர்கள் பகிரங்கமாக பொது நிதியை திருடும் ஒரே நாடு இலங்கை மட்டுமே என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் 4ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் காரணமானவர்களைக் கண்டறியத் தவறியது பௌத்த மதத்தை மீறும் செயலாகும் என்று குறிப்பிட்டார்.

நீதி வழங்கப்படுவதே ஆட்சியாளர்களின் பொறுப்பு என்று புத்தரின் போதனையையும் அவர் நினைவூட்டினார்.

உலகில் ஆட்சியாளர்கள் பகிரங்கமாக பொது நிதியை திருடும் ஒரே நாடு இலங்கை மட்டுமே.

எக்ஸ்பிரஸ் பேர்ல் சம்பவம் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் பொது நிதியை வெளிப்படையாக திருடுவதை நிரூபித்துள்ளது என்றும் ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்தார்.

மௌலவி அப்துல் ரஹ்மான் ஹாஷிம் தனது உரையில், காலி முகத்திடலில் இப்தார் தொழுகையில் பங்கேற்கச் சென்ற சில பக்தர்கள், நீர்கொழும்பிலிருந்து கொழும்புக்கு ஊர்வலமாகச் சென்ற கத்தோலிக்கர்கள் கூட தடுக்கப்பட்டதாக குற்றம் சுமத்தினார்.

இந்த நாட்டில் பௌத்தர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் உட்பட மக்கள் வன்முறையாளர்கள் என்று அதிகாரிகள் நினைப்பது போல் தெரிகிறது என்றும் அவர் கூறினார்.

அதனால்தான் அவர்கள் உரிமைகளை நசுக்குவதற்கு கொடூரமான சட்டங்களைக் கொண்டு வர முயல்கிறார்கள் என்றும் மௌலவி அப்துல் ரஹ்மான் ஹாஷிம் தெரிவித்தார். (அ)

# முட்டையால் பிரச்னைகளை எதிர்நோக்கும் வர்த்தகர்கள்!

கொழும்பு, ஏப். 23

நிறை அடிப்படையில், முட்டைகள் விற்பனை செய்யப்படுவதன் மூலம், நடைமுறை ரீதியான பல பிரச்னைகளுக்கு முகக்கொடுப்பதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

சில வர்த்தகர்கள் பயன்படுத்தும் தராசுகள் உரிய தரத்தில் இல்லாமையால், கட்டுப்பாட்டு விலையை விடவும், அதிக விலைக்கு முட்டையைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலை நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ளதாக, அந்த அமைப்பின் தலைவர் ரஞ்சித் வித்தானகே தெரிவித்தார்.

முட்டையை நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ள மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

முட்டை மாபியாவினைக் கட்டுப்படுத்தி, நுகர்வோருக்கு நன்மையைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ)

# முட்டை விலை மேலும் குறையும்

கொழும்பு, ஏப். 23

எதிர்வரும் இரண்டு வாரங்களில், முட்டைகளின் விலைகளை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன்படி, கட்டுப்பாட்டு விலையை மீறி முட்டையை விற்பனை செய்வோருக்கு இடமளிக்க போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு முட்டைகள் விற்பனை செய்யப்படுமாயின் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ கூறினார்.

எனினும், முட்டை ஒன்றின் உற்பத்தி செலவு 30 ரூபாவுக்கும் குறைவாக உள்ளதாக முட்டை விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் அன்ரன் நிஷாந்த அப்புஹாமி குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, எதிர்காலத்தில் முட்டையின் விலையை குறைக்க முடியும் என அவர் தெரிவித்தார். (அ)

# பொருளாதார முகாமைத்துவக் கொள்கை தயாரிப்பு பணிகள் விரைவில் நிறைவுறும்

## கூறுகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஏப். 23

இலங்கையின் பொருளாதாரத்தை வலுவாக்குவதற்கான பொருளாதார முகாமைத்துவக் கொள்கை தயாரிப்புப் பணிகள் எதிர்வரும் மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தப் பொருளாதார முகாமைத்துவக் கொள்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அவர்இதனை கூறினார்.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின்போது கடன் வழங்குநர்களுக்கு நாமும் பங்களிப்புக்களை வழங்கவேண்டியது அவசியமாகும்.

கடன் மறுசீரமைப்புக்களை செய்ய தவறும் பட்சத்தில் நாம் கடுமையான நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும்.

எவ்வாறாயினும் இந்தச் செயற்பாட்டிற்கான மாற்று வழிகள் மக்களுக்கு நெருக்கடியாக அமைந்திருக்காது என்ற உறுதியை வழங்குவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதற்காக இம்மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்திற்கு பாராளுமன்ற அனுமதியைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ள அதே நேரம், மே மாத இறுதிக்குள் பொருளாதார முகாமைத்துவக் கொள்கை தயாரிப்புப் பணிகளை நிறைவு செய்யவும் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடுமென 118 இற்கு அழைப்பு எடுத்தவர் சி.ஐ.டியினரால் கைது!

கொழும்பு, ஏப். 23

அக்குரணையில் உள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது, தாக்குதல் நடத்தப்படக்கூடும் என 118 என்ற உடனடி அழைப்பு இலக்கத்துக்கு, தகவல் வழங்கிய நபர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை, ஹரிஸ்பத்துவ பகுதியில் வைத்து, அவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், குறித்த தகவலை வழங்கியதை அடுத்து, அக்குரணை பகுதியில் உள்ள பள்ளிவாசல்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# நாடெங்கும் குதூகல நோன்புப் பெருநாள்







நிந்தவூர், ஏப். 23

நாட்டில் ஷவ்வால் மாத தலைப்பிறை வெள்ளிக்கிழமை தென்பட்டதால் நேற்று சனிக்கிழமை முஸ்லிம் மக்கள் புனித நோன்புப் பெருநாளை பெரும் குதூகலத்துடன் விமரிசையாக் கொண்டாடினர்.

கடந்த மூன்று வருடகாலமாக கொவிட் தொற்று, மற்றும் நாட்டு நிலைமைகள் காரணமாக பெருநாள் பண்டிகைகள் சோபை இழந்திருந்த நிலையில் தற்போதய நாட்டின் நிலை காரணமாக இம்முறை நோன்புப் பெருநாளையும் மகிழ்ச்சிப் பிரவாகத்துடனும், குதூகலத்துடனும் கொண்டாடும் சூழ்நிலை தோற்றம் பெற்றிருந்தது.

இதேவேளை, நோன்புப் பெருநாளை முன்னிட்டு முஸ்லிம் பள்ளிவாசல்கள் தொடர்பில் பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை பொலிஸார் அமுல்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் நோன்புப் பெருநாள் களை கட்டியிருந்தது.

குறிப்பாக பள்ளிவாசல்கள், பொது மைதானங்கள் மற்றும் திடல்களில் இடம்பெற்ற நோன்புப் பெருநாள் தொழுகையிலும், பெருநாள் குத்பாவிலும் பெருமளவான முஸ்லிம்களும், விசேடமாக பெண்களும் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் ஜாமிஉத்தௌஹீத் ஜும்ஆபள்ளிவாசலின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் தொழுகையும் பெருநாள் குத்பாவும், பெருமளவு ஆண், பெண்களின் பங்குபற்றுதலுடன் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

மேற்படி பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் மௌலவி. இத்ரீஸ் ஹஸன் (ஸஹ்வி) பெருநாள் தொழுகையை நடத்தியதுடன் பெருநாள் குத்பா பிரசங்கத்தையும் நிகழ்த்தினர். (அ-06)



# ஈஸ்டர் தாக்குதல் பின்னணியிலுள்ள உண்மைகள் தொடர்ந்தும் தவிர்ப்பு!

## அப்போஸ்தலிக்க தூதுவர் பிரையன் உதய்க்வே

கொழும்பு, ஏப். 23

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மைகள் தொடர்ந்தும் தவிர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என இலங்கையின் அப்போஸ்தலிக்க தூதுவர் வணக்கத்திற்குரிய பிரையன் உதய்க்வே தெரிவித்தார்.**



2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வில் அவ உரையாற்றியபோதே இதனைக் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தை சர்வதேச மட்டத்தில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளால் மட்டுமே எதிர்கொள்ள முடியும்.

பயங்கரவாதத்திற்கு எல்லையே தெரியாது என்பதால், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பயங்கரவாதிகளுக்கு இணைய தொழில்நுட்பங்களை அணுகுவதை சர்வதேச சமூகம் தடுக்க வேண்டும் என்றும் பிரையன் உதய்க்வே கோரினார்.

4 ஆண்டுகளுக்கு முன்னர் மரணத்தையும் பெரும் துன்பத்தையும் பலி கொடுத்த அந்த துரதிர்ஷ்டவசமான காலையின் சோகமான நிகழ்வு, மக்கள் குறிப்பாக நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் மனதில் இன்னும் பசுமையாக இருக்கின்றது.

எனினும் அதன் பின்னணியில் உள்ள உண்மை இன்னும் தவிர்க்கப்பட்டு வருகின்றமை கவலையளிப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மருந்துகளின் தரம் குறித்து மீளாய்வு செய்ய வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஏப். 23

மருந்துகளின் தரம் குறித்து சுகாதாரத்துறையினர் மீளாய்வு செய்யவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய கண் வைத்தியசாலையில், சத்திர சிகிச்சை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்டபோது, அந்த சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே இதனைத் தெரிவித்தார்.

நாளை திங்கட்கிழமை முதல், தேசிய கண் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைகளை வழமை போன்று முன்னெடுக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# இந்திய வர்த்தக அமைச்சரை சந்தித்த மிலிந்த மொரகொட



புதுடில்லி, ஏப். 23

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட இந்திய மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயலை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த பெப்ரவரியில் அவர்கள் இருவரும் கலந்துரையாடிய விடயங்களின் மேம்பட்ட சந்திப்பாகவே இது அமைந்திருந்தது.

இருதரப்பு வர்த்தகத்தின் விரிவாக்கம், இலங்கை இடையே ரூபாய் வர்த்தகத்தை நிறுவுதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியா, இலங்கையின் பொருளாதார மீட்சியில் வகிக்கக்கூடிய முக்கிய பங்கை தூதுவர் மொரகொட மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# வவுனியாவில் பல பகுதிகளிலும் நோன்புப் பெருநாள் தொழுகை



வவுனியா, ஏப். 23

வவுனியாவில் நகர பள்ளிவாசல் உட்பட பல்வேறு பகுதிகளில் நேற்று நோன்பு பெருநாள் விசேட தொழுகை இடம்பெற்றது.

இஸ்லாமியர்களின் விசேட தினமான ரமழான் நோன்பு பெருநாளான நேற்று, வவுனியா பட்டானிச்சூர் முஹிய்யத்தீன் பள்ளிவாசலில் காலை 7.10 மணிக்கு விசேட தொழுகை இடம்பெற்றது.

பள்ளிவாசலின் பிரதான மௌளவி அலாவுதீனால் விசேட தொழுகை மேற்கொள்ளப்பட்டது.

பெருந்திரளான இஸ்லாமியர்கள் தொழுகையில் கலந்து கொண்டிருந்துடன், பெருநாள் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

வவுனியாவில் உள் அனைத்து பள்ளிவாசல்களிலும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (அ)

# முட்டை மாபியாக்களை கட்டுப்படுத்தவேண்டும்

கொழும்பு, ஏப். 23

நிறை அடிப்படையில், முட்டைகள் விற்பனை செய்யப்படுவதன் மூலம், நடைமுறை ரீதியான பல பிரச்சினைகளுக்கு முகக்கொடுப்பதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

சில வர்த்தகர்கள் பயன்படுத்தும் தராசுகள் உரிய தரத்தில் இல்லாமையால், கட்டுப்பாட்டு விலையை விடவும், அதிக விலைக்கு முட்டையைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ளதாக, அந்த அமைப்பின் தலைவர் ரஞ்சித் வித்தானகே தெரிவித்தார்.

முட்டையை நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ள மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

முட்டை மாபியாவினைக் கட்டுப்படுத்தி, நுகர்வோருக்கு நன்மையைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ)

# நீண்ட காலம் மாடு களவாடிய கும்பலின் முக்கிய நபர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளில் மாடுகளைக் களவாடி இறைச்சியாக்கி விற்பனை செய்த கும்பலின் முக்கிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுக் கும்பலிடம் இறைச்சியை வாங்கி விற்பனை செய்தவரும் கைது செய்யப்பட்டார் என்று கூறிய பொலிஸார், மேலும் நால்வர் தேடப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த 24, 26 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் மாநகர், வட்டுக்கோட்டை, அளவெட்டி, தெல்லிப்பழை, வடமராட்சி உள்ளிட்ட பிரதேசங்களில் 25 இற்கும் மேற்பட்ட மாடுகளைத் திருடு இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

5 பேர் கொண்ட கும்பல், பகலில் மோட்டார் சைக்கிளில் சென்று மாடுகளை நோட்டமிட்டு வந்து இரவில் வாகனத்தில் சென்று இரும்புச் சங் கிலி போட்டு மாடுகளை ஏற்றி வந்து கப்பூது வெளி யில் வைத்து இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளது.

இறைச்சியாக்கப்பட்ட மாடுகளின் எச்சங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.



திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம், இரும்புச் சங்கிலி மற்றும் வாள் என்பன சந்தேக நபரிடம் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர். (அ)

# மோ.சைக்கிளில் சென்ற ஸ்பெய்ன் பிரஜை கொங்கிறீட் கம்பத்தில் மோதி உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 23

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஸ்பெய்ன் பிரஜை ஒருவர், அஹுங்கம அஞ்சல் நிலையத்திற்கு முன்பாக உள்ள கொங்கிறீட் கம்பம் ஒன்றில் மோதி உயிரிழந்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில், அவர் மதுபோதையில் இருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் அஹுங்கமவில் இருந்து காலி நோக்கிப் பயணித்தபோது, விபத்துக்குள்ளான குறித்த ஸ்பெய்ன் பிரஜை, அபராதுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

31 வயதான குறித்த வெளிநாட்டவர் ஒன்றரை மாதங்களாக, அஹுங்கம பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றில், தங்கி இருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
23.04.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மறைந்திருக்கும் தந்திரத்தை அறியுங்கள்?

சில மாதங்களுக்கு முன்னர் அனைவரும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசினர். பௌத்த பிக்குகள் 13ஆவது திருத்தச் சட்டத்தின் நகலை எரித்து எதிர்ப்பில் ஈடுபட்டனர். விவாதத்தை ஆரம்பித்து வைத்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ, அமைதியாக இருந்தார். இப்போது அனைவரும் புதிய பயங்கரவாதத்திற்கு எதிரான சட்ட வரைவு தொடர்பில் விவாதிக்கின்றனர். இது நாட்டுக்கு பேராபத்து, அரசாங்கம் சர்வாதிகாரத்தை நிறுவ முற்படுகின்றது - என்றவாறு அனைவருமே பேசுகின்றனர். இப்போதும் ரணில் அமைதியாக இருக்கின்றார். இது தொடர்பில் பேசி இறுதி முடிவெடுக்கலாமென்று, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகின்றார்.

ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசாங்கம் முன்மொழிந்திருக்கின்றது. இது இருப்பதை விடவும் மோசமானதென்பதே - தற்போது அனைவரும் முன்வைக்கும் குற்றச்சாட்டாகும். இங்கு கவனிக்கவேண்டிய விடயம் ஒன்றுண்டு. இதுவரை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீங்குமாறு தமிழ் தலைமைகளே கோரி வந்திருக்கின்றனர். ஏனெனில் பயங்கரவாத தடைச்சட்டம் என்பது, தமிழ் மக்களுக்கு எதிரானதொரு சட்டமாகவே இதுவரையில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

ஆனால் தற்போது அரசாங்கம் முன்வைத்திருக்கும் யோசனையை சிங்கள சிவில் சமூக அமைப்புக்கள், சட்டத்தரணிகள் சங்கம், சிங்கள அரசியல் கட்சிகள் - என அனைவருமே தீவிரமாக எதிர்க்கின்றனர். என்ன காரணம்? இந்த யோசனை நடைமுறைக்கு வருமாயின் எதிர்காலத்தில், தாங்களும் பாதிக்கப்படுமோம் என்னும் அச்சத்தின் அடிப்படையிலேயே அனைவரும் இதற்கு எதிராக பேசிவருகின்றனர். ஆனால் இதே அரசியல் வாதிகள், தென்னிலங்கை சிவில் சமூக குழுக்கள், 40 வருடங்களாக தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டு வந்த பயங்கரவாதச் தடைச்சட்டத்தை நீக்குமாறு குரல் கொடுத்ததில்லை. ஏனெனில் அவர்கள் அதனால் பாதிக்கப் படவில்லை. ஆனால் புதிய பயங்கரவாதச் சட்டம் தங்களை நோக்கியும் திரும்பிவிடலாமென்னும் அச்சத்தின் காரணமாகவே குரலெழுப்புகின்றனர்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தங்கள் ஏற்படும் அல்லது தற்போது இருக்கின்ற பயங்கரவாதச் தடைச் சட்டம் அப்படியே தொடர அனுமதிக்கப்படும். ஒருவேளை தற்போது இருப்பதை தொடரட்டும் என்னும் நிலைமை ஏற்படுமாக இருந்தால் தற்போது, இந்த யோசனையை எதிர்க்கும் தென்னிலங்கைக் கட்சிகளும் சிவில் சமூகக் குழுக்களும், சட்டத்தரணிகளும் அமைதியாக கலைந்துவிடுவர். அதே போன்றுதான் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முயற்சிக்கும்போது, பௌத்த பிக்குகள் வீதிக்கு வருவதை காரணம் காண்பித்து, தேவைப்பட்டால் அதனையும் பிற்போடலாம். நாடு குழப்பத்திற்குள் சிக்குவதைத் தவிர்க்க வேண்டியிருக்கின்றது என்றவாறு அரசாங்கம் ஒரு காரணத்தை கூற முற்படலாம். இந்த தந்திரோபாயங்களை விளங்கிக் கொள்வது அவசியம்.

இந்த விடயத்தின் அடிப்படையில் தமிழ் அரசியல் தலைவர்கள் என்போர் சிந்திக்கவும், செயற்படவும் வேண்டும். இது தொடர்பில் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கவேண்டும். தமிழ் தலைவர்கள் என்போர், எப்போதாவது, தாங்கள் ஒரு தனித்தரப்பு, எங்களுடைய மக்களின் பிரச்னைகள் தனித்தன்மையானது - என்னும் அடிப்படையில் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளை தூதரங்களுக்கு வெளியில் அழைத்ததுண்டா? அவ்வாறான தொரு அதிசயம் இதுவரையில் நடந்ததில்லை. சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக இருந்தபோது, இதனைச் செய்திருக்கலாம். ஆனால் சம்பந்தன் செய்யவில்லை. அவர் செய்யவும் மாட்டார் - ஏனெனில் அவ்வாறு செய்தால், சிங்களவர்கள் கோபிப்பார்கள் என்பார். உலகின் மிகவும் சக்திவாய்ந்த நபர்களில் ஒருவராகக் கருதப்படும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதைத் தவிர்ப்பதற்கு, மாவை சேனாதிராசாவின் மகனின் திருமணத்தைக் காரணம் கூறிய பெருந்தலைவர். தமிழ் மிதவாதிகளுக்கு ராஜதந்திரம் என்றால், என்னவென்றே தெரியாதென்பதற்கு, இது ஒரு சிறந்த உதாரணமாகும். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தை இந்த மிதவாதிகளின் வரிசையில் சேர்க்க முடியாது.

# நெடுந்தீவில் சிவனார் ஆலயம் இன்று கும்பாபிஷேகம்

**மாலி**

சிவனின் அடிமுடி தேடிய வரலாற்றுடன் அழைக்கப்பெறும் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்க தலங்களுள், தென்னகத்தின் ஒரேயொரு தலமாக திகழ்வது இராமேஸ்வரம் இராமநாதஸ்வாமி திருத்தலம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்களால் இத் தலம் பெருமளவில் விஸ்தரித்து அமைக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்தை ஆண்ட ஜயவீர சிங்கை ஆரியனும், அவனுக்குப் பின்னர் குணவீர சிங்கை ஆரியனும் ஆலயத்தின் பிரதான கர்ப்பக்கரகத்தை புனரமைத்தனர். இவர்களின் ஆட்சிக் காலத்தில், இராமநாத சுவாமியின் அபிஷேகத்துக்காக நெடுந்தீவிலிருந்து தினமும் பாலும் அனுப்பினர்.

முதல் அபிஷேகம் தினமும் நெடுந்தீவிலிருந்து வந்த பாலிலேயே நடைபெறுவதென்பது இப்போதும் பேசப்படுகையில், நெடுந்தீவின் தென்கிழக்குக் கோடி ‘குயிந்தா’ (Queen Tower) துறைக்கு பாற்குடங்களை பெண்கள் மாறிமாறி சுமந்து சென்றதை, இப்போது எண்பது வயதைத் தாண்டி, தங்கள் பேரர், பேர்த்திகளின் அனுபவங்களாகச் சொல்பவரகள் இருக்கிறார்கள்.

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட தென்னிந்திய பெருங்கற் பண்பாட்டு மக்களுடன் தொடர்புபட்ட யாழ்ப்பாண குடாநாட்டின்ஆதிக் குடியிருப்பின் தலைவாயிலொன்றாக விளங்கிய நெடுந்தீவில் சோழப் பேரரசிலும், பாண்டிய மன்னர் ஆட்சியிலும் உருவாகிய ஆலய அமைப்பு முறைகளையும் வழிபாட்டு நெறிகளையும் அடிப்படையாகக்கொண்ட நாயன்மார் காட்டிய பக்திநெறியும், மெய்கண்ட தேவர் முதலானோர் வகுத்தருளிய சைவசித்தாந்த நெறியும் இணைந்த பாரம்பரியம் இங்கு பரவியது. எனினும், இங்கு சிவாலயம் எதுவும் காணப்படவில்லை.

போர்த்துக்கேயர்கள் பொதுவாக சைவ மதத்துக்கு எதிரான நடவடிக்கைளிலும், தங்களுடைய மதத்தைப் பரப்புவதிலும் தீவிரம் கொண்டிருந்தவர்கள். ஆகவே, அவர்களுடைய காலத்துக்குப் பின்னரான ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேதான் பொதுவாக இப்போது இங்குள்ள ஆலயங்கள் தோற்றின.

ஆனால், அண்மையிலே மேற்கு பகுதியிலே அமைந்த பிடாரி அம்மன் ஆலயத்திலே அகழ்ந்தெடுக்கப்பட்ட சோழர் காலத்து சிவலிங்கம், இந்த ஊரின் வரலாற்றுத் தொன்மையையும், இங்கு நிலவிய சைவ, தமிழ்ப் பண்பாட்டையும் உணர்த்தி, தொல்லியல் ஆய்வாளர்களை விழிப்புறவைத்திருக்கையில், இப்பகுதியில் வாழும் மக்கள் இதுவரை காலமும் இதனை அறிந்திராமை, போர்த்துகேயரால் இச் சிவலிங்கம் மறைக்கப்பட்டிருக்கக்கூடிய ஐயத்தையும் தோற்றுவிக்கிறது.

ஆக, இந்த பின்புலத்தில், முதல் சிவாலயம் ‘திருச்சுரேஷ்வரம்’, இந்த வரலாற்றுக் காலத்தில் நெடுந்தீவில் தோன்றுகிறது. எவரையுமே பிணித்து, ஈடுபாட்டுடன் மூழ்கவைக்கும் ஈசுவர நாமம், ஓர் ஈஸ்வர ஈர்ப்பை ஏற்படுத்துகிறது.

நெடுந்தீவில் பிறந்த சுரேஷ் செல்வரத்தினம், லண்டனில் வாழ்ந்தவர். தன்னுடைய வாழ்வின் சொற்ப காலத்தில், தன்னுடைய ஊர் மக்களுக்கும், ஊர் பேர் அறியாத இடங்களில் கஷ்டங்களோடு வாழ்ந்தவர்களுக்கும், அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாடுகளில் அவாவோடு பணிசெய்து, அவர்களின் வாழ்வில் ஒளியூட்ட முனைந்தவர், தன்னுடைய மறைவின் பின்னர் இம் மக்களுக்கு ஆன்மீக ஒளியைக்காட்டி, அவர்களின் எல்லையில்லா பேரானந்த பெருவாழ்வுக்கு சித்தமுற்றமையே, இந்த நாமகரணத்துடனான இந்த ஆலயத்தின் தோற்றுவாய் எனலாம்.

# இந்தியாவுக்கு உதவ வேண்டியது இலங்கையின் பொறுப்பாகும்

## கூறுகின்றார் எஸ்.பி. திஸாநாயக்க

கொழும்பு, ஏப். 23


“உலக சனத்தொகையில் இந்தியா முதலிடத்துக்கு வந்துள்ள நிலையில், அந்நாட்டுக்கு சில நெருக்கடிகள் ஏற்படக்கூடும். எனவே, இந்திய மாணவர்கள் இலங்கையில் உயர் கல்வியை தொடர்வதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்க வேண்டியது இலங்கையின் பொறுப்பாகும்.” - என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனாவில் அதிக நிலப்பரப்பு உள்ளது. இந்தியாவில் அதைவிடவும் குறைவு. ஆனால் உலக சனத்தொகையில் இந்தியா முதலிடத்துக்கு வந்துள்ளது. குறிப்பாக மும்பையில் மாத்திரம் 22 மில்லியன் பேர் வாழ்கின்றனர். இது இலங்கையின் முழு சனத்தொகை அளவாகும். செல்வந்தர்கள், பிரபலமான கலைஞர்கள் உள்ளிட்டோர் மும்பையில்தான் வாழ்கின்றனர். அங்கு சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வளி மாசடைந்துள்ளது. இது எமக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, இந்திய மாணவர்கள் இலங்கையில் உயர் கல்வியை தொடர்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதும், சுதந்திரமாக சுற்றுலா வருவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியதும் இலங்கையின் பொறுப்பாகும். ஏனெனில் இலங்கைக்கு நெருக்கடி ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் இந்தியாவே உதவியுள்ளது - என்றார்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -75

# குடும்பத்தில் நிதி நிலைமையைப் பேண...

**கணபதி சர்வானந்தா**

விலைவாசி ஏற்றத்தால் செலவுகள் அதிகரித்துவிட்டன. வருமானமும் அதற்கேற்றவாறு இல்லை. என்ன செய்யலாம்? என்று அங்கலாய்த்துக் கொள்ளுகிறவர்களைத்தான் நாம் அன்றாட வாழ்க்கையில் அதிகம் பார்க்கிறோம். அவ்வாறு அவதியும் மனிதர்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுள் அடிப்படைக் கல்வி அறிவு உள்ளவர்கள் அதிகம்.அப்போது ஏன் அவர்களால் நிதியைத் திட்டமிட முடிவதில்லை என ஒருவர் கேட்டார்.

வரவுக்கேற்றவாறு திட்டமிட்டுச் செலவு செய்ய வேண்டும் என்ற பழக்கம் இல்லாதவர்கள் நாம். நிதியை மட்டுமல்ல நாம் எதனையும் திட்டமிட்டுச் செய்வதில்லை. “முதலில் செய்வோம், வரும்போது பார்க்கலாம்” என்பது எமது வழமை. திட்டமிடல் என்ற ஒன்றை நாம் கற்றுக் கொண்டதுமில்லை. பிறருக்குக் கற்றுக் கொடுத்ததுமில்லை.

மேற்கத்தைய நாடுகளில் அவர்கள் எதனையும் திட்டமிடுகிறார்கள். அங்கேதான் மக்கள் பெரும்பாலும் கடனில் சீவிக்கிறார்கள். இருந்தும் அவர்கள் திட்டமி டுவதால் தான் வாழ்க்கையைச் சீரழிவில்லாமல் முன் கொண்டு செல்ல முடிகிறது.

திட்டமிடல் என்றால் என்ன? ஏன் திட்டமிட வேண்டும்? திட்டமிடல் என்பது ஒரு விரும்பிய இலக்கை அடைய எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி எண்ணுவது, அதனைச் செயல்படுத்துவது. திட்டமிடல் உங்கள் செயல் திறனை அடைய உதவுகின்றது.

திட்டமிடல் மூலம் தவறவிடப்பட்ட விடயங்களை உணர்ந்து கொள்வதுடன் இன்னுமொரு தடவை தவறு ஏற்படாது தடுக்கலாம். எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கவும் வேலைகளைத் திறன்பட ஒழுங்காக்கவும் மேற்கொள்ளவும் அது உதவுகின்றது. உரிய நேரத்தில் வேலைகளைச் செய்து முடிக்கவும் திட்டமிடல் அவசியமாகின்றது.

எல்லாத் துறைகளைப் போன்று கல்வியிலும் திட்டமிடல் அவசியமாகின்றது. அதனால் தான் அரசு கல்வியில் எல்லாவற்றையும் திட்டமிடுகின்றது.போட்டிகள் நிறைந்த இக் காலகட்டத்தில் மாணவர்கள் தமது திறனை வளர்த்துக் கொள்ளத் தமது கல்வியைத் திட்டமிடல் வேண்டும். வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளத் தகுந்த துறையைத் தேர்ந்தெடுப்பது அவசியம். அதற்கு அவர்கள் தமது பாதையைத் திட்டமிட வேண்டும்.திட்டமிடல் அவர்கள் தமது இலக்கை எளிதில் அடைய ஏதுவாக இருக்கும்.

அது போலத்தான் வாழ்க்கையும். வாழ்க்கையில் அது அவசியம்? எதனைத் தவிர்க்கலாம்? எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? என்ற அனைத்தையும் அறியத் திட்டமிடல் அவசியம் என்கிறார் வைத்திய கலாநிதி நர்மதா. அவர் முகநூலில் இருந்து ஒரு சிறு குறிப்பை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஒரு குடும்பத்தின் நிதி நிலைமை சீரழிவதற்கான மிக முதன்மையான பத்துக் காரணங்களைக் கீழ்கண்டவாறு அவர் குறிப்பிடுகிறார்.

1. குடும்பத்தில் உள்ள அனைவரின் கைகளில் தவழும் தொடுதிரைக் கைபேசிகள்...

2. சமூக மதிப்பிற்காக மேற்கொள்ளப்படும் விடுமுறைச் சுற்றுலாக்கள்...

3. வாகனங்கள் மற்றும் மின்னணுப் பொருட்கள் சமூக மதிப்பின் அடையாளமாக மாறிப்போனது...

4. வீட்டில் சமைக்கப்பட்ட உணவைத் தவிர்த்து, வார இறுதி மற்றும் பிற நாட்களிலும் தேவையில்லாமல் வெளியே சாப்பிடுவதை முதன்மையாகவும், உயர்வாகவும், மகிழ்ச்சியாகவும், தங்கள் மேன்மையைப் பறைசாற்றும் வடிகாலாகவும் நினைக்கத் தொடங்கியது...

5. சீரழிந்த வாழ்க்கைமுறை – நோய்களைக் கொண்டுவந்தது -மருத்துவச் செலவுகளை அதிகரிக்கச் செய்தது.

6. சலூன்கள், பார்லர்கள் மற்றும் ஆடைகளை சமூக மதிப்பிற்கான பெரு நிறுவன தயாரிப்பினைக் (BRAND VALUE) குறியீட்டு உணர்வாக வளர்த்துக் கொண்டது...

7. ஒன்றாக நேரத்தைச் செலவழிப்பதை விட, அதிக பணத்தைப் பிறந்தநாள் மற்றும் ஆண்டுவிழாவைச் சிறப்பாக்கச் செலவழிப்பதன் மூலம் ஏற்படும் கடன் தொல்லை.

8. பிரமாண்டத் திருமணங்கள் மற்றும் குடும்ப விழாக்கள்... அதற்காகப் பணம் செலவழித்து உள் மற்றும் வெளி அலங்காரம் செய்வது... அதன் மூலம் பராமரிப்புச் செலவுகளை அதிகரிக்கச் செய்வது..

9. வணிகமயமாக்கப்பட்ட உணவுகள், மருத்துவமனைகள், பள்ளிகள், பயிற்சிகள் மற்றும் கல்வி போன்றவற்றினால் ஏற்பட்ட மேலதிக செலவுகள்...

10. தங்கள் வருமானத்தில் அனுபவிக்க இயலாததைக் குறித்த காலத்தில் – குறைந்த காலத்தில் அடைந்துவிடக் கடன் மற்றும் கடன் அட்டைகள் இன்றியமையாதது எனக் கருதுவதால் ஏற்பட்ட ....

பெரும்பாலும் நமது தேவைகளையும் வருமானத்தையும் புரிந்து கொள்ளாமல் மற்றவர்களின் வாழ்க்கை முறையை நகலெடுக்கிறோம். அது போன்ற பழக்க வழக்கங்களைக் குறைக்காவிட்டால், அது பல ஆண்டுகள் கழித்து அது நோயாக மாறி அதிக மன அழுத்தம் மற்றும் பதட்டத்திற்கு வழிவகுக்கலாம்.

இது சிந்திக்க விரும்புபவர்களுக்கு மிக நுட்பமான செய்தி. நம்மில் பெரும்பாலானோருக்கு இவை பொருந்தும் என்கிறார் அவர். •

# இந்தவார ராசிபலன் 23.04.2023 - 29.04.2023



ஏப்ரல் 23 ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 10

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

தொழிலில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவீர்கள். சொத்துகளை வாங்குவீர்கள். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் வளர்ச்சியைக் காண்பார்கள். வியாபாரிகளுக்கு சுமாரான லாபமே கிடைக்கும். விவசாயிகள் நீர்பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வார்கள். அரசியல்வாதிகள் பழைய பிரச்னைகளில் இருந்து தப்பிப்பார்கள். கலைத்துறையினருக்கு பயணம் செய்ய வாய்ப்பு உண்டு.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

புது உற்சாகத்துடன் செயலாற்றுவீர்கள். உடல் ஆரோக்கியம், மனவளம் மேம்பட யோகா, பிராணாயாமம் செய்வீர்கள். மரியாதை உயரும். உத்தியோகஸ்தர்கள் ஓய்வில்லாமல் பணியாற்றுவீர்கள். வியாபாரிகள் புதிய முயற்சிகளில் அளவோடு முயற்சிப்பார்கள். விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும். அரசியல்வாதிகள் சமூக அக்கறையுடன் பணிபுரிவார்கள். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பெண்கள் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி அடைவார்கள். முயற்சிகள் பலிதமாகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பொருளாதார வளம் உயரும். பூர்வீக சொத்துகள் கைவந்து சேரும். தொழிலில் மாற்றம் கொண்டுவருவீர்கள். புதிய நட்பு கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் வேறு வேலைகளுக்கு மாறுவார்கள். வியாபாரிகள் புதிய அனுபவத்தைப் பெறுவார்கள். விவசாயிகள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வார்கள். அரசியல்வாதிகளுக்கு தொண்டர்களின் ஆதரவு கிடைக்கும். கலைத்துறையினருக்கு பிறரிடம் கருத்துவேறுபாடுகள் மறையும். பெண்கள்குடும்பப் பிரச்னைகளைச் சமாளிப்பார்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

வருமானத்தில் உயர்வைக் காண்பீர்கள். புதிய சேமிப்பில் ஈடுபடுவீர்கள். தொழிலை விரிவுபடுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணியை முடிக்கச் சிறிது தாமதம் நேரிடும். வியாபாரிகளின் செயல்திறன்அதிகரிக்கும். விவசாயிகளுக்கு உடன் உழைப்போரின் ஆதரவு கூடும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் ஆதரவைப் பெறுவார்கள். கலைத்துறையினருக்கு பிறரின் உதவிகள் கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

புதிய முயற்சிகளைச் செயல்படுத்துவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகவே இருக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு இடமுண்டு. பெற்றோருடன் உறவு மேன்மையாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். விவசாயிகள் விளைபொருள்களை வெளியூர் சந்தை களில் விற்று நல்ல லாபம் காண்பார்கள். கலைத்துறையினருக்கு இரட்டிப்பு வருவாய் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

தொழிலில் வளர்ச்சியைக் காண்பீர்கள். ஆரவாரமின்றி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உடனிருப்போருக்கு உதவிகளைச் செய்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு ஆதரவான சூழ்நிலை ஏற்படும். வியாபாரிகள் கொடுக்கல் வாங்கலில் கவனத்துடன் ஈடுபடுவார்கள். விவசாயிகள் திடீர் தனவரவைக் காண்பார்கள். அரசியல்வாதிகளின் எண்ணங்களில் புதுவித மாற்றம் உண்டாகும். கலைத்துறையினருக்கு அனுகூலமான போக்கு தென்படும். பெண்கள் உடன்பிறந்தோரிடம் கனிவாக இருப்பார்கள். மாணவர்கள் பாராட்டுகளைப் பெறுவார்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

காரியங்களில் முழு கவனம் செலுத்தி வெற்றி பெறுவீர்கள். பிறரிடம் அன்பைக் காட்டுவீர்கள். புதிய பதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் உதவிகளைச் செய்வார்கள். வியாபாரிகள் இழுபறியான செயல்களைத் திறம்பட செய்துவிடுவர். விவசாயிகள் புதிய குத்தகைகளைப் பெறுவார்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தின் உத்தரவைச் செயல்படுத்துவீர்கள். கலைத்துறையினர் நன்முறையில் பிறரிடம் பழகுவார்கள். பெண்களுக்கு கணவரிடம் பாசம் அதிகரிக்கும். மாணவர்களின் குணநலன்களில் மாற்றம் உண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

புதிய வாகனங்களை வாங்குவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகஸ்தர்கள் உயரதிகாரிகளை அனுசரித்து நடப்பார்கள். வியாபாரிகள் புதிய பொருள்களை வாங்கி விற்பார்கள். விவசாயிகள் கால்நடைகள் மூலம் வருமானம் ஈட்டுவார்கள். அரசியல்வாதிகள் வெளியூர் பயணங்களால் சாதனைகளைச் செய்வார்கள். கலைத்துறையினரின் புகழ் உயரும். புதிய நிலங்களை வாங்கி வீடு கட்ட முயற்சிப்பீர்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பெரிய திட்டங்களைச் செயல்படுத்துவீர்கள். பிறரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் புதிய நுட்பங்களைச் செயல்படுத்தி வெற்றி பெறுவார்கள். விவசாயிகள் பாசன வசதிகளில் கவனம் செலுத்துவீர்கள். கலைத்துறையினர் நிகழ்ச்சிகளில் பங்கேற்பார்கள். பெண்கள் கணவர் குடும்பத்துடன் இணக்கமாக இருப்பார்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

தொழிலை மேம்படுத்துவீர்கள். வருமானம் சீராகவே இருக்கும். அநாவசிய செலவுகளைச் செய்ய வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் புதிய மாற்றங்களைக் காண்பார்கள். வியாபாரிகள் கொடுக்கல் வாங்கலில் உயர்வான நிலையை எட்டுவார்கள். விவசாயிகளுக்கு அரசு சலுகைகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் தங்கள் எண்ணங்களைச் செயல்படுத்துவார்கள்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உறவினர்கள் இல்லம் தேடி வருவார்கள். குழந்தைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வீர்கள். புதிய முயற்சிகளில் திறமைகள் வெளிப்படும். உத்தியோகஸ்தர்கள் அலுவலக வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள். வியாபாரிகள் கடன் கொடுக்க வேண்டாம். விவசாயிகள் பழைய பாக்கிகளைத் திரும்ப செலுத்துவார்கள். அரசியல்வாதிகளுக்கு எடுத்த காரியங்களில் வெற்றி உண்டு. கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்கள் சேமிப்புகளில் ஈடுபடுவார்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

நெடுநாளைய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். பங்குவர்த்தகத்தின் மூலம் உபரி வருமானம் பெறுவீர்கள். போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகள் பாராட்டும்படி நடப்பார்கள். வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. விவசாயிகள் பிரச்னைகளுக்கு சாதகமான சூழல் நிலவும். அரசியல்வாதிகள் தொண்டர்களால் உதவி பெறுவார்கள். கலைத்துறையினர் தனித்திறன்களை மேம்படுத்துவார்கள். பெண்கள் குழந்தைகளின் வளர்ச்சியில் கருத்தாய் இருப்பார்கள். மாணவர்கள் பெற்றோர் பேச்சை கேட்பார்கள்.

# சனத்தொகையில் சீனாவை விஞ்சுவது இந்தியாவுக்கு நன்மை அளிக்குமா...?



சென்னை மடல்
-பகவான் சிங்-

செய்தி கண்டிருப்பீர்; சனத்தொகையில் சீனாவை முந்திக் கொண்டது இந்தியா. சந்தோஷத்தில் மிதப்பேனா? கவலையில் குன்றிப்போவேனா? வியாழனன்று காலை, "த ரைம்ஸ் ஒவ் இந்தியா" நாளிதழ் தனது வாசகர்களுக்கு வழங்கிய காலை வணக்கச் செய்தி, "மக்கள் தொகையில் சீனாவை முந்தும் இந்தியா: ஐ. நா. கணிப்பு" என்பது தான். ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் (ருக்ஷீயு)இன் "2023 உலக மக்கள்தொகை நிலை அறிக்கை'யில் ஆண்டின் மத்தியில் சீனாவின் மக்கள் தொகை 142.57 கோடியாகவும் இந்தியாவின் மக்கள் தொகை 142.86 கோடியாகவும் இருக்கும் என்று கணித்துள்ளது.

இந்தியாவின் மக்கள் தொகை, ஆண்டுக்கு 1.6 முதல் 1.7 கோடி வரை அதிகரித்து வருகிறது. ஜூன் இறுதிக்கு இன்னும் பத்து வாரங்களே உள்ள நிலையில், ஏற்கெனவே இந்தியா சீனாவை முந்தியிருக்கலாம் அல்லது இனி எப்போது வேண்டுமானாலும் அது நடக்கலாம். இதில் ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், இந்தியாவின் மக்கள் தொகையில் 65 சதவிகிதம், 35 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுதான். தனது மக்கள் தொகையில் 26 சதவிகிதம், 10-24 வயதுக்குட்பட்டவர்களுடன் உலகின் மிகப்பெரிய இளைஞர் கூட்டத்தைக் கொண்டுள்ளது இந்தியா. 2030 வரை இளம் மக்களை அதிகம் கொண்ட மிகப்பெரிய நாடாக இந்தியா இருக்கும் என்றும் 2025 வரை இந்த இளைஞர் படையுடன்




வாய்ப்புகளுக்கான வழி திறந்திருப்ப தாகவும் யூ. என். எவ். பி. ஏ. கூறுகிறது.

ஜனவரியில், குடியரசு தின அணிவகுப்பில் பங்கு பெறத் தயாராகிக் கொண்டிருந்த தேசிய மாணவர் படையினரிடையே உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா தனது அமுத காலத்தில் இருப்பதாகவும் இந்தியாவின் வளர்ச்சிப் பயனைப் பெருமளவில் அனுபவிக்கப்போவது இளைஞர்களே என்றும் குறிப்பிட்டிருந்தார். கல்வியிலும் அதிகாரமளித்தலிலும் அதிக கவனம் செலுத்துவதால் அனைத்துத் துறைகளி

## கல்வித் துறையில் உலக்குக்கு பாடம் கற்று தருகிறது சீனா

லும் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டு, படித்த இளைஞர்களின் கிராமங்களை நோக்கிய மீள் புலம்பெயர்வு சாத்தியமாகும் என்று அவர் உறுதியான நம்பிக்கை தெரிவித்திருந்தார். ஆனால், கவலையளிக்கும் உண்மை ஒன்று உள்ளது. உலகக் கல்வியறிவு 9 0வீதமாக இருக்கும் நிலையில், இந்தியாவின் மக்கள் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 77 வீதத்தினர்தான் உள்ளனர். சீனாவில் இது 99.83 வீதமாக இருக்கிறது. அதாவது, இத்தனை ஆண்டுகளாக, நாட்டை ஆளும் அரசியல்வாதிகள், கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யப் போதுமான முயற்சிகளை எடுக்கக் கவனம் செலுத்தவில்லை என்பது தெரிகிறது. நாட்டின் ஒரு சில பகுதிகளில் மட்டும் படிப்பறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்றால், அதற்கு, ஆள்பவர்கள் தங்கள் பொன்னான நேரத்தையும் ஆற்றலையும் இதை நோகிச் செலுத்துகிறார்கள் என்பதைவிட, கல்வி பெறவேண்டும் என்ற மக்களின் ஆர்வமே காரணமாக இருந்து வருகிறது. கல்விக்கும் படிப்பறிவுக்கும் சிறு வித்தியாசம் இருப்பதை நாம் நன்கறிவோம். படிப்பறிவு என்பதைவிட மிகச் சிறப்பானது கல்வி பெறுவது. ஒருவர் தொடக்கப் பள்ளிக்குச் சென்று எண்ணையும் எழுத்தையும் கற்று, எழுதப் படிக்க அறிந்திருந்தால் அவர் படிப்பறிவு பெற்றவாராகிறார். இதைத் தாண்டி மேலே வளர்வது கல்வி.

படிப்பறிவில் இந்தியாவை விடச் சீனா வெகுவாக முன்னேறியிருக்கிறது. ஆனால், உற்பத்தித் திறனை மேம்படுத்தக்கூடிய வேலைவாய்ப்பை உறுதிசெய்யக் கூடிய திறன் சார்ந்த கல்வி பெற்ற மக்கள் எண்ணிக்கை இந்தியாவில் இன்னுமே மோசமாக உள்ளது வேதனையான விஷயம். ஒரு நாட்டின் மக்கள் தொகையால் பெறக்கூடிய பலனை மதிப்பிடும்போது, எண்ணிக்கையை மட்டுமல்லாமல் தரத்தையும் பார்க்க வேண்டியது அவசியம். எண்ணிக்கையும் முக்கியம் ஆனால், அதை விட முக்கியம் வளமான திறன். மக்கள் தொகையில் இந்தியா, சீனாவை முந்துகிறது என்ற ஐ. நா. அறிக்கை குறித்துப் பேசிய சீன வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் ஒருவர், "1.4 பில்லியன் சீனர்களில் 900 மில்லியன் பேர் பணியாற்றும் வயதிலும் சராசரியாக 10.9 ஆண்டுகள் கல்வி பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இப்போது புதிதாகப் பணியில் சேருவோரின் சராசரிக் கல்விக் காலம் 14 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது" என்று தெரிவித்தார்.

சீன அரசிடமிருந்து வெளியான அதிகாரபூர்வ அறிக்கைகளின் உண்மைத் தன்மை குறித்த என் ஐயம் காரணமாக -பொதுவாக அதை, தன் சர்வாதிகார ஆட்சிக்கு ஆதரவாகச் செய்யப்படும் கம்யூனிஸ்ட் பிரசாரம் என்று புறந்தள்ளினாலும் சீனாவின் கல்வி கற்ற பணிக்குத் தகுதியான மக்கள் தொகை குறித்த அயலுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளரின் கருத்து நியாயமானதாகவும் நாட்டின் பெருமைக்குரியதாகவுமே படுகிறது. சீனா குறித்து, நான் கவனித்த மற்றொரு நல்ல விஷயம், ஆண்கள் அளவுக்குக் கல்வியும் பணித் தகுதி யும் பெற்ற பெண்களும் இருப்பதுதான். சீனாவில், 2021ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பின்படி, பெண்கள், ஆண்கள் மாணவர் விகிதம் தொடக்கப்பள்ளி அளவில், 1.01 வீதமாக இருந்தது. அதாவது, ஒரு பள்ளியில் அல்லது ஒரு வகுப்பில் 100 பெண் குழந்தைகளுக்கு 101 ஆண் குழந்தைகள் இருந்தனர். இது, 0.99 விகிதம் என்ற சர்வதேச விகிதாசாரத்தை விட மேம்பட்டதாகத் தெரிகிறது. அதே காலகட்டத்தில், இந்திய அளவில் இது 1.05 விகிதமாக இருந்தது. எனினும், நாம் இந்தப் புள்ளி விவரத்தால் ஏமாந்துவிடக்கூடாது. காரணம், இந்தியா வில் படிப்பறிவு என்பது, பெண்களுக்கு 77 சதவிகிதமா கவும் ஆண்களுக்கு 85 சதவிகிதமா கவும் இருப்பதாக உலக வங்கி இந்தியா அறிக்கை - மார்ச் 2023 தெரிவிக்கிறது.

சீன மக்கள் தொகையை இந்தியா முந்துவது குறித்த மற்றோர் அம்சத்தையும் நான் இங்கு குறிப்பிடவேண்டும். இந்தியாவில் நிலவும் மக்கள் தொகை அடர்த்தி மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது. சீனாவின் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியே இருக்கும் இந்தியா, சீனாவுடன் மக்கள் தொகையில் முந்துவது நல்லதன்று. இந்திய அரசும் பல்வேறு மாநில அரசுகளும் இணைந்து அனைத்துத் துறைகளிலும்- குறிப்பாக கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் வளர்ச்சியை எட்ட முயற்சிகளை அதிகரிக்காத வரை வெறும் மக்களின் எண்ணிக்கையில் மட்டும் உயர்வு என்பது, நேர்மறை அதிகாரமளித்தல் மறுக்கப்பட்டு, வறுமைக்கும் பட்டினிக்கும் மக்கள் தள்ளப்படும்போது ஒழுங்கீனத்துக்கும் வன்முறைக்கும்தான் வழி வகுக்கும்.

கொள்ளைக்கார ஆங்கிலேய ஏகாதிபத்திய காலத்தில், 11 பெண்களில் ஒருவர்தான் படிப்பறிவு பெற்றிருந்த நிலையிலிருந்து, அதாவது 9வீத பெண் கல்வி என்ற நிலையிலிருந்து, இன்றைய நிலை மிகப்பெரிய முன்னேற்றம்தான். மத்திய அரசும் மாநில அரசுகளும் அறிமுகப்படுத்திய பல்வேறு சிறந்த திட்டங்கள் மூலம் தொடக்கக் கல்வி மட்டுமல்லாமல் உயர் கல்வி வரை பெண்களைத் தொடர வைப்பதில் பங்காற்றியுள்ளன. இருப்பினும், பயணிக்க வேண்டிய தூரம் இன்னும் நிறைய இருக்கிறது.

94வீத படிப்பறிவுடன், இந்தியாவின் மிகச் சிறந்த மாநிலமாகத் திகழும் கேரளாவுடன் ஒப்பிடும்போது, வெறும் 62வீதம் மட்டுமே படிப்பறிவு பெற்ற பீஹாரின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்திய ஆட்சியாளர்களுக்குக் கல்வி என்பது எவ்வளவு முக்கியமில்லாத விஷயமாக இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான். மக்களின் வரிப்பணத்தைக் கொண்டே அவர்களை ஊழல்வாதிகளாகவும் சோம்பேறிகளாகவும் ஆக்கும் இலவசங்களைக் கொடுத்து, வாக்கு வேட்டையாடுவதில் காட்டும் கவனத்தை மத்திய, மாநில அரசுகள், தரமான கல்வியளித்து விளிம்பு நிலை மக்களுக்கு அதிகாரமளித்துப் பணித் தகுதி பெறச் செய்வதில் காட்டவில்லை. மத்திய அரசு, ஆயுதக் கொள்முதலிலும் மாநில அரசுகள் தேர்தல்களின்போது வாக்குகளை வாங்க நலத்திட்டங்களை அறிவிப்பதிலும் மிகப் பெரிய தொகைகளைச் செலவிடுகின்றன.

இந்நிலை, சீனாவில் இல்லை. காரணம், அங்கு வாக்கு வங்கி அரசியல் இல்லை. கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒற்றைக் கட்சி ஆட்சி முறை கொண்ட நாட்டின் தேர்தலில் மக்களுக்குப் பெரிய பங்கு ஒன்றும் இல்லை. கருத்து சுதந்திரமும் இல்லை. ஊடகங்களும்

## வாக்கு வங்கி அரசியல் நமக்கு தந்தவை என்ன?

அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனவே, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் சிறந்து விண்ணைத் தொடும் கட்டடங்களின் வளர்ச்சி, புல்லட் ரயில்களின் வேகம், அறிவியல் தொழில்நுட்பத்தில் மேம்பாடு, இவற்றுடன், அமெரிக்க - நேட்டோ சக்திகளுக்கு இணையாக ஓர் ஆற்றல்மிக்க சக்தியாக உருவாகிக்கொண்டிருக்கும் சீனாவில் வாழ விரும்புகிறீர்களா என்று என்னைக் கேட்டால், என் உடனடி பதில் உறுதியாக "இல்லை" என்பதாகத்தான் இருக்கும். எனது சுதந்திரக் காற்று இதமானது.

இலங்கையில் உள்ள படிப்பறிவு மற்றும் கல்வியின் நிலை குறித்து நான் எதுவும் கூறவிரும்பவில்லை. என் இனிய ஈழநாடு வாசகர்கள் அதில் நிபுணர்கள். கதிரவனைப் பார்க்கக் கை விளக்கு எதற்கு? ஆனால், 1983 முதல் - உங்கள் சங்கடமான காலம் தொடங்கி உங்கள் நாட்டின் விவகாரங்களைச் செய்திகளாகத் திரட்டி வழங்கி வந்த ஒரு பத்திரிகையாளனாக இரண்டு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நாட்டில் கல்வித் தரத்தையும் பணித் தகுதியையும் உயர்த்த அரசியல் தலைவர்கள் கணிசமான பங்காற்றவில்லை என்று நான் கூறுவதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள்.

இந்த இனிய ஞாயிறு காலை உங்களிடமிருந்து விடை பெறும் முன், சீனாவின் கல்வியும் அதிகாரமும் பெற்ற மக்கள் குறித்து அந்நாட்டின் அயலுறவு துறைச் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட பெருமையான மொழிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன். அவரது பெருமையில் நியாயம் இருக்கிறது. ஆனாலும், அந்த மக்களின் உள்மனம் மற்றும் ஆன்ம ஆரோக்கியம் குறித்த அச்சமும் எழுகின்றது. சீனர்கள், தங்கள் வாழ்க்கையில் உண்மையான மனநிம்மதியும் மகிழ்ச்சியும் பெற்றிருக்கிறார்களா? நமது நாட்டின் ஷொப்பிங் மால்களிலும் பூங்காக்களிலும் மற்ற பொது இடங்களிலும் அவர்கள் மகிழ்ச்சியுடன் சிரித்து வலம் வருவதைப் பார்க்கிறோம். அந்த மகிழ்ச்சியும் சிரிப்பும் கருத்து சுதந்திரத்தை ஒடுக்கி - ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்கும் 'கம்யூனிஸ சர்வாதிகாரம்' என்ற சோதனை சாலையில் உருவாக்கப்பட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது. ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், சில இடங்களின் நவீன வாழ்க்கை முறையும் நகரமயமாக்கலின் செழுமையும் மட்டுமே ஒரு நாட்டின் உண்மையான வளர்ச்சியையோ மக்களின் மன மகிழ்ச்சியையோ பிரதிபலிப்பதாகாது. கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் சீனாவின் வளர்ச்சி நாம் பொறாமைப் படக்கூடிய அளவில் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. அதற்காக நாம் சீனாவைப் பாராட்ட வேண்டியதுதான், வளர்ச்சியடைந்த மேற்குலகைவிட முன்னணியில் இருக்கும் அந்தப் போக்கு நமக்கும் பாடமாகும். அத்துடன், விரைவில், அவர்களது சிரிப்பில் உயிர்ப்பும் கலந்தொலிக்க நாம் வாழ்த்துவோம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# செய்திகளை ஆக்கிரமிக்கும் குரங்குக் கூட்டம்





வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையில் அண்மைய நாட்களாக குரங்குகள் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்துக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியிருப்பதாக வெளியான செய்திகளை அடுத்து கட்சி தாவும் அரசியல்வாதிகளை கேலிசெய்து கார்ட்டூன்களை பிரசுரிப்பதில் பத்திரிகைகளும் ஒருவித சந்தோசத்தை அனுபவிக்கின்ற அதேவேளை சில சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் அரசியல்வாதிகளைப் போன்று குரங்குகள் நாட்டுக்கு எந்த தீமையையும் செய்யவில்லை. குரங்குகளை வெளிநாட்டுக்கு அனுப்புவதை விடுத்து அரசியல்வாதிகளை அனுப்பலாம் என்று கேலி பேசுகிறார்கள்.

இந்த “குரங்கு விவகாரம்” தொடர்பில் கிளம்பிய சர்ச்சைக்கு ஊடகங்கள் சில வேளைகளில் மனிதர்களின் பிரச்சினைகளுக்கு கொடுக்காத முக்கியத்துவத்தை கூட கொடுக்கின்றன.

எமது நாட்டில் பொதுவாக காணப்படுபவை பொன் மண்ணிறமுடைய சிறியவகை குரங்குகளே. அவற்றின் தலையில் தொப்பி போன்று மயிர் வளர்ந்திருக்கும். அதனால் அவற்றை ஆங்கிலத்தில் Toque monkeys என்று அழைக்கிறார்கள்.

சீனாவில் உள்ள மிருகக்காட்சி சாலைகளுக்கு ஒரு இலட்சம் இலங்கை குரங்குகளை வழங்குமாறு சீன பிரதிநிதிகள் குழுவொன்று வேண்டுகோள் விடுத்ததாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர சிங்கள- தமிழ் புத்தாண்டுக்கு ஓரிரு நாட்கள் முன்னதாக அறிவித்ததை அடுத்தே சர்ச்சை மூண்டது. இந்த வேண்டுகோள் குறித்து விவசாய அமைச்சில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாகவும் குரங்குகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில் எழக்கூடிய சட்ட விவகாரங்களை ஆராய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் குழுவொன்றை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட விருப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் மேற்கூறப்பட்ட வகை குரங்குகளின் குடித்தொகை சுமார் 30 இலட்சம் என்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி இவையே பயிர்களுக்கு பாரிய சேதத்தை விழைவிப்பதாகவும் குடித்தொகையைக் குறைப்பதற்கு இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் பயன் ஏற்படவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பயிர்களுக்கு குரங்குகளினால் ஏற்படும் சேதத்தை கருத்திற்கொண்டு நோக்கும்போது இன்னொரு நாடு அந்த குரங்குகளை பெரும் எண்ணிக்கையில் வாங்குவதற்கு முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்று விவசாய அமைச்சு கலந்துரையாடலில் கூறப்பட்டதாம்.

விவசாய அமைச்சரிடம் மேற்படி ஆராய்ச்சி நிலையத்தினால் கையளிக்கப்பட்ட ஆய்வு அறிக்கையொன்று நாட்டில் வன விலங்குகளின் குடித்தொகை தற்போதைய வனங்களின் அடர்த்தியுடன் ஒப்பிடும்போது தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு பெருகிவிட்டது என்று கூறுவதாகவும் விவசாய அமைச்சு அறிவித்தது.

குரங்குகளினாலும் பெரிய அணில்களினாலும் ஒவ்வொரு வருடமும் சுமார் பத்து கோடி தேங்காய்கள் நாசமாக்கப்படுவதாகவும் இதனால் ஒரு கோடி 93 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்படுவதாகவும் அறிக்கையை மேற்கோள் காட்டி அமைச்சர் கூறினார். வன விலங்குகளினால் பயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களின் விளைவான இழப்புகளை மொத்தமாக பார்த்தால் அது 8 கோடி 75 இலட்சம் டொலர்களுக்கு சமமானதாகும் என்று அறிக்கை கூறுகிறது.

பயிர்களுக்கு பெரும் சேதத்தை விளைவிக்கும் குரங்குகள் உட்பட வேறு ஐந்து வன விலங்குகளை ஒழித்துக்கட்டவேண்டும் என்று முன்னர் ஒரு தடவை அமரவீர கூறியிருந்தார். மயில்கள், பெரிய அணில்கள், முள்ளம்பன்றி மற்றும் காட்டுப் பன்றி ஆகியவை இந்த பட்டியலில் அடங்குகின்றன.

இவற்றை கொலை செய்வதற்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று பெப்ரவரியில் அமைச்சர் கூறியிருந்த போதிலும் அது தொடர்பில் கிளம்பிய சர்ச்சையை அடுத்து அவ்வாறு கொலைக்கு அனுமதிப்பது குறித்து அரசாங்கம் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை என்று பின்வாங்கிக் கொண்டார்.

ஆனால், பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை தடுப்பதை மாத்திரம் காரணமாகக் காட்டி மிருகங்களை ஏற்றுமதி செய்வதை சாதாரணமான ஒரு விடயமாக எடுக்கமுடியாது என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு நலன்களில் அக்கறை கொண்ட அமைப்புகளிடம் இருந்து மறுநாளே எதிர்ப்புக் கிளம்பியது.

ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி ஏற்றுமதி செய்வது குறித்து ஆராய குழுவொன்றை நியமிப்பதற்கான ஏற்பாடு குறித்து கேள்வியெழுப்பிய சுற்றுச்சூழல் விவகார சட்டத்தரணி கலாநிதி ஜகத் குணவர்தன தற்போதைய சட்ட ஏற்பாடுகள் மிருகங்களை ஏற்றுமதி செய்வதை அனுமதிக்கவில்லை என்று சுட்டிக் காட்டினார். எந்த அடிப்படையில் பெரும் எண்ணிக்கையான குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது? இலங்கையின் குரங்குகளுக்கு பொருத்தமான சீதோஷ்ணநிலை சீனாவில் இருக்கிறதா? அந்த நாட்டில் உள்ள மிருகக்காட்சி சாலைகளுக்கு இந்தளவு பெரிய எண்ணிக்கையில் ஏன் எமது குரங்குகள் தேவைப்படுகின்றன? என்ற கேள்விகள் குறித்து ஆராய வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.




தற்போதைய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இயற்கைப் பாதுகாப்பு நோக்கங்களுக்காகவும் பரிமாற்றத் திட்டங்களின் அடிப்படையிலும் மாத்திரமே வெளிநாடுகளுக்கு எமது விலங்குகளை ஏற்றுமதி செய்யமுடியும் என்று கலாநிதி குணவர்தன சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஒரு இலட்சம் இலங்கை குரங்குகளினதும் பயணம் சீனாவில் உள்ள ஆய்வுகூடங்களில் போய்முடிவடையக்கூடும் என்று சந்தேகம் வெளியிட்ட சுற்றுச்சூழல் நீதிக்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஹேமந்த விதானகே அவை மருத்துவ மற்றும் அழகுசாதன உற்பத்திப் பொருட்களின் பரிசோதனைகளுக்கு பயன்படுத்தப்படலாம் என்று கூறியிருக்கிறார்.

மிருகக்காட்சி சாலைகள் பற்றிய வரைவிலக்கணத்தைப் பொறுத்தவரை, உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரமாணத்திற்கு அமைவாக சீனாவில் 18 மிருகக்காட்சி சாலைகளே இருக்கின்றன. இலங்கையில் இருந்து அனுப்பப்படக்கூடிய ஒரு இலட்சம் குரங்குகளை அந்த அந்த மிருகக்காட்சி சாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதானால் ஒவ்வொரு பூங்காவுக்கும் 5000க்கும் அதிகமான குரங்குகள் வழங்கப்படும். இது நம்பகத்தன்மை வாய்ந்ததாக இல்லை. எதற்காக மிருகக்காட்சி சாலைகளுக்கு இந்தளவு எண்ணிக்கையில் குரங்குகள் ? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

“இந்த குரங்குகளை சீனாவின் மிருகக்காட்சி சாலைகளுக்கு அனுப்புவதாக இருந்தால் அவை இலங்கையில் மிருகக்காட்சி சாலை மிருகங்களாக பராமரிக்கப்பட்டிருக்கவேண்டும். அங்கேயே பிறந்து வளர்ந்திருக்கவேண்டும். எமது மிருகக்காட்சி சாலைகளில் ஒரு இலட்சம் குரங்குகள் இல்லை. அதனால் எமது நாட்டின் சட்டத்தின் கீழ் இந்த ஏற்றுமதி முயற்சியை நியாயப்படுத்த முடியாது.

“சிறி தலதா மாளிகை, அநுராதபுரம் மற்றும் மிகிந்தலை போன்ற ஆலயப் பகுதிகளில் இருந்தே குரங்குகளை பிடிக்கவேண்டியிருக்கும். மனிதர்களாகிய எம்மைப் போன்று இந்த பகுதிகளில் வாழ்வதற்கான உரிமை குரங்குகளுக்கு இருக்கிறது. அதனால் மதத்தலங்களில் இருந்து அவற்றை சீன ஆய்வுகூடங்களுக்கு அனுப்புவதை எதுவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தனது சொந்த விருப்பின்பேரில் அமைச்சர் மிருகங்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது குறித்து தீர்மானிக்கமுடியாது. அவர் இந்த முயற்சியை கைவிட வேண்டும். அவ்வாறு அவர் செய்யாவிட்டால் சுற்றுச்சூழல் நீதிக்கான நிலையம் தற்போதைய வனவிலங்கு சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கும் ” என்று விதானகே கூறினார்.

முன்னாள் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சரான நவின் திசாநாயக்கவும் இலங்கை குரங்குகள் சீனாவின் ஆய்வுகூடங்களை சென்றடையக்கூடிய சாத்தியம் இருப்பதால் இந்த ஏற்றுமதி முயற்சியை தான் கடுமையாக எதிர்ப்பதாகவும் மிருகக்காட்சி சாலைகளுக்கு இடையிலான பரிமாற்றத் திட்டங்களின் அடிப்படையில் மாத்திரமே மிருகங்களை வெளிநாடுகளுக்கு அனுப்பமுடியும் என்று குரல் கொடுத்தார். அவற்றின் இயற்கையான வாழ்விடங்களில் சுற்றித்திரிந்து முழு வாழ்நாளையும் கழிப்பதற்கு இந்த மிருகங்களுக்கு சகல உரிமையும் இருக்கிறது என்றும் அவர் வாதிட்டார்.

வன விலங்குகளின் குடித்தொகையை குறைப்பதற்கு வகைதொகையின்றி அறிவியல்பூர்வமற்ற முறையில் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள். குரங்குகள் பெரும் சேதத்தை ஏற்படுத்துபவையாக இருந்தாலும் அவை சூழல்தொகுதி சமநிலையைப் பேணுவதில் பயனுடைய பங்கை வகிப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலரும் மருத்துவருமான முரளி வல்லிபுரநாதன் “கொழும்பு ரெலிகிராவுக்கு” எழுதிய கட்டுரையொன்றில் குரங்குகளின் குடித்தொகையை பெருமளவில் குறைப்பதற்கு

**இறுதியாக சீனத்தூதரகம் வெளியிட்ட அறிக்கையை அடுத்து இலங்கையின் ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் தொடர்பான சர்ச்சை முடிவுக்கு வருமா? விவசாய அமைச்சர் கூறிதெல்லாம் பொய்யா?**

மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களை விளக்கிக் கூறியிருக்கிறார்.

“விவசாய அமைச்சர் கூறுவது போன்று இலங்கையில் மேற்குறிப்பிட்ட வகை குரங்குகளின் குடித்தொகை 30 இலட்சமாக இருக்கமுடியாது. அது மிகைப்படுத்தப்பட்ட ஒரு எண்ணிக்கை. இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான குரங்குகளே இருக்கக்கூடும். ஒரு இலட்சம் குரங்குகளை வெளிநாட்டுக்கு அனுப்பினால் இலங்கையில் அவற்றின் தொகை அரைவாசியாகக் குறையும். அதனால் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்” என்று அவர் கூறியிருக்கிறார்.

குரங்குகளுக்கான சீன கிராக்கி ஒன்றும் புதிய விடயமல்ல. சர்வதேச ரீதியில் சட்டபூர்வமாகவும் சட்ட விரோதமாகவும் குரங்கு வியாபாரம் பரந்தளவில் இடம்பெறுகின்றது. இலங்கையில் காணப்படுவதைப் போன்ற குரங்கு வகைகளை மேற்குநாடுகள் பிரதானமாக மருந்து ஆராய்ச்சி நோக்கத்துக்காகவே இறக்குமதி செய்கின்றன.இந்த குரங்குகளின் மரபணுக்கூறும் வேறு பல அம்சங்களும் மனிதர்களினதை ஒத்ததாக இருக்கிறது. இந்த நூற்றாண்டின் முதல் இருபது வருடங்களில் அமெரிக்கா மாத்திரம் பரிசோதனை நோக்கங்களுக்காக 482, 000 குரங்குகளை இற்குமதி செய்ததாக வல்லிபுரநாதன் கூறுகிறார்.காடழித்தலை தடுப்பதே குரங்குப் பிரச்சினையை கையாள்வதற்கு அர்த்தபுஷ்டியான வழி என்பது அவரது நிலைப்பாடு.

இது இவ்வாறிருக்க, இன்னொரு சுற்றுச்சூழல் ஆர்வலரான நயனக்க ரண்வெல்ல தாங்கள்

(18ஆம் பக்கம் பார்க்க)



# தென்னிலங்கை குரங்குகளும் யாழ்ப்பாண தெருநாய்களும்!

**பனங்காட்டான்**





**ஒரு லட்சம் குரங்குகளை இலங்கை அரசு சீன நாட்டுக்கு ஏற்றுமதி செய்யவுள்ளது என்பதுவே இன்றைய நாட்களில் பரபரப்பான செய்தி. இதனால் ஒரு குரங்குக்கு 25,000 ரூபா வரை அரசுக்குக் கிடைக்குமாம். யாழ்ப்பாணத்தில் அறுபதுகளின் பிற்பகுதியில் தெரு (கட்டாக்காலி) நாய்களைப் பிடிப்பதற்கு சம்பளத்துக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவ்வாறு பிழைப்பு நடத்தினார்கள் என்பதைத் தெரிந்து கொண்டால் குரங்கு பிடிப்பவர்களைக் கண்காணிக்க உதவும். தவறினால், குரங்கு பிடிப்பவர்களுக்கு நிகர லாபம்.**

இந்தப் பத்தியின் தலைப்பைப் பார்த்ததும் எவரும் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாது. ஆனால், இந்தத் தலைப்புக்குரிய விடயம் உண்மையானது. கடந்த காலத்தையும் வளரும் காலத்தையும் இணைத்துப் பார்க்கும் ஒரு சமாசாரம் இது.

அந்த விடயத்துக்குள் போவதற்கு முன்னர் இலங்கையின் சமகாலப் போக்கினை நோக்குவது அவசியம். ஒரு விடயத்தை ஆரம்பித்துவிட்டு அதனை மக்கள் எதிர்க்க ஆரம்பிக்கையில், இன்னொரு பிரச்சனையை தொடக்கிவிட்டு அதன் பின்னால் மக்களை ஓடவைத்து பிரச்சனைகளுக்கூடாக தங்கள் காரியங்களை நிறைவேற்றுவதை ஒரு பயிற்சிக் களமாக ரணில் அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த வருடம் ஜூலை 20ம் திகதி ஜனாதிபதியாகத் தெரிவான ரணில் விக்கிரமசிங்க கடந்த பத்து மாத ஆட்சிக்காலத்தில் இவ்வாறான பல அரசியல் சித்து விளையாட்டுகளை நடத்தி அனைவரையும் ஏமாற்றி வருகின்றார். இதனைப் புரிந்து கொண்டாலும் எதுவும் செய்ய முடியாதவர்களாக அரசியல் கட்சிகள் உள்ளன.

இதற்கான மூலகாரணம், சகல அரசியல் கட்சிகளும் அரசியல் கூட்டுகளும் அரசியல் குழுக்களும் தங்களுக்குள் பிளவுபட்டு பிரிந்து நிற்பதே. இதுவும்கூட ரணிலின் கைங்கரியம்தான்.

தமது கட்சிக்காரர்கள் ஆட்சித்தரப்புக்கு பாய்ந்து செல்லாமல் தடுப்பதற்கு ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து தாஜா பண்ணுவதிலும், கூட்டாக இராப்போசன விருந்து வைப்பதிலும் சஜித் பிரேமதாசவின் காலம் போகிறது. போதாக்குறைக்கு இரண்டு பெண்மணிகள் - அவரது சகோதரியும் மனைவியும் கட்சி அரசியலுக்குள் தலையீடு செய்வதே கட்சியின் எம்.பிக்களை எரிச்சலடையச் செய்வதாக புகார் கிளம்பியுள்ளது.

கோதபாய மற்றும் பசில் ஆகியோரின் எதேச்சாதிகாரப் போக்கினால் பெரமுனவின் கூட்டிலிருந்து வெளியேறியவர்களை தம்முடன் மீள இணைக்கும் முயற்சியில் வெற்றிபெற முடியாதவராக மகிந்த காணப்படுகிறார். முக்கியமாக இவர் நம்பிக்கையுடன் எதிர்பார்த்த விமல் வீரவன்ச, உதய கம்மன்பில அணியினர் தங்களுக்குக் கொள்கைதான் முக்கியம் எனக் கூறி மகிந்த தலைமையில் இணைய மறுத்துள்ளனர்.

ஜி.எல்.பீரிஸ் - டலஸ் அழகப்பெரும அணியினர் தங்கள் எதிர்காலம் பற்றி நிச்சயமற்றவர்களாக அங்குமிங்கும் அலைந்து திரிகின்றனர். தமிழர் தேசிய பரப்புப் பற்றி சொல்லத் தேவையில்லை. உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல் இல்லாமற் போனதால் அவர்கள் அறிக்கைகளுடனும் குழுக்கூட்டங்களுடனும் ஆங்காங்கு தலைகாட்டுவதுடனும் காலத்தைப் போக்கும் நிலையிலுள்ளனர்.

இந்த மாதம் 25ம் திகதி நடைபெறுமென தேர்தல் ஆணையம் அறிவித்திருந்த 340 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெறாது என்று அதிகாரபூர்வமான அறிவித்தல் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது ரணில் விக்கிரமசிங்கவின் தனித்துவ தலைமைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி எனலாம்.

8,325 உறுப்பினர்களைத் தெரிவு செய்யவென 87,000 வரையான வேட்பாளர்கள் செலுத்திய கட்டுப்பணம் 13 கோடி 60 லட்சம் ரூபா அரசாங்க உண்டியலுக்குச் சென்றது. தேர்தல் இல்லையென்பதால் அந்தப் பணத்தை வேட்பாளர்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென உதய கம்மன்பில கேட்டுள்ளார். ஆனால், அரச தரப்பிலிருந்து மௌனமே பதிலாக உள்ளது.

இத்தேர்தல் நடைபெற்றிருக்க வேண்டிய இந்த மாதம் 25ம் திகதி ரணில் தரப்புக்கு முக்கியமான நாள். பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக தயாரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் தாக்கலாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் இன மத வேறுபாடற்ற வகையில் புதிய சட்டத்துக்கு எதிர்ப்புள்ளது. மனித உரிமைக் குழுக்கள், சர்வதேச அமைப்புகள், அமெரிக்க தூதுவர் மற்றும் பௌத்த மகாசங்கங்களும் தங்கள் ஆட்சேபனையை வெளிப்படுத்தியுள்ளன. மக்களைப் பாதுகாக்கவே இப்புதிய சட்டமென்று விளக்கமளிக்கும் அரச தரப்பு, மக்கள் இதனை விரும்பவில்லையென்றால் முன்னைய பயங்கரவாத சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்குமென்று கூறி அச்சுறுத்துகின்றது. இதுதான் ரணில் பாணி அரசியல் என்பது.

இந்த மாதம் 25ம் திகதி சர்வதேச நாணய வங்கியுடன் இலங்கை அரசு செய்த உடன்பாடு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். எவ்வகையிலாவது இதனை நிறைவேற்றுவது அரசின் இலக்கு. இதற்காக 3 நாட்களுக்கு தொடர்ந்து விவாதம் இடம்பெறும்.

இதனைத் தடுக்க எதிரணிகள் வீதிகளுக்கு வந்துள்ளன. நாடாளுமன்ற விவாதத்தை இவர்கள் பகிஸ்கரிக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்ற வாக்கெடுப்பில் கிடைக்கும் வாக்குகளில் அதிகப்படியானவைகளின் முடிவே தீர்மானம் என்பதால், எதிர்க்கட்சிகளின் பகிஸ்கரிப்பு அரசுக்கு சாதகமாக அமையலாம்.

நெருக்கடியான அரசியல் நகர்வுகள் ஒருபுறத்தே இவ்வாறு இடம்பெற, இவற்றுக்குச் சற்றும் குறைவில்லாத வகையில் இலங்கைக் குரங்குகளை ஏற்றுமதி செய்யும் சமாசாரம் பிரபல்யம் பெற்றுள்ளது. இலங்கை என்ற குட்டித்தீவு சிலோன் என்ற பெயரில் அழைக்கப்பட்ட காலத்தில் தேயிலை ஏற்றுமதியால் புகழ்பெற்றது மட்டுமன்றி பொருளாதார பலமும் கண்டிருந்தது. சிறிலங்கா என்று பெயர் மாறிய பின்னர் ஈழத்தமிழர் அகதிகளாக ஏற்றுமதி செய்யப்பட்டது முதலிடம் பெற்றது. இப்போது குரங்குகளை ஏற்றுமதி செய்வதால் இலங்கை சர்வதேச புகழ் பெறப்போகிறது.

முதற்கட்டமாக ஒரு லட்சம் குரங்குகளை சீனாவுக்கு அனுப்ப ஏற்பாடாகிறது. சீன அரசின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த ஏற்பாடு என்ற தகவலை சீனத் தூதரகம் மறுத்துள்ளது. சீனாவிலுள்ள நிறுவனம் ஒன்றின் வேண்டுகோளுக்கிணங்கவே குரங்குகள் அனுப்பப்படவுள்ளதாக பின்னர் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு அனுப்பப்படும் குரங்குகளின் முதற்தொகுதி அங்குள்ள பரிசோதனைக்கூடமொன்றுக்கு என்று ஒரு தகவல் வர, இறைச்சிக்காகவே சீன நிறுவனம் கேட்டதாக மற்றொரு தகவல் வந்தது. சீனாவிலுள்ள தனியார் மிருகக்காட்சிச் சாலை ஒன்றுக்கு இவற்றை அனுப்பப் போவதாக இன்னொரு தகவல் வந்தது.

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணான தகவல் வந்து கொண்டிருக்க, அமைச்சரவை நியமித்த குழு பரிந்துரைத்தால் மட்டுமே குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படுமென பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் கூறினார். அதேசமயம் வேறு இரண்டு அமைச்சர்கள் வெவ்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர். ஆயிரக்கணக்கான விவசாயக் காணிகளை குரங்குகள் அழித்து பயிர்ச் செய்கைகளை நாசம் செய்வதால் ஒரு தொகுதி குரங்குகளை ஏற்றுமதி செய்ய வேண்டியிருப்பதாக விவசாய அமைச்சர் கூற, குரங்குகள் தேங்காய்களை அழிப்பதாகவும் - 2022ல் மட்டும் 200 மில்லியன் தேங்காய்களை குரங்குகள் அழித்ததாகவும் சம்பந்தப்பட்ட ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு குரங்கை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதால் 25,000 ரூபா வரை நாட்டுக்குக் கிடைக்குமென புள்ளிவிபரம் ஒன்றை இன்னொரு அமைச்சர் வெளியிட்டார். இவ்வாறு அரச தரப்பிலிருந்து ஒவ்வொருவரும் தம்மிஷ்டப்படி வியாக்கியானம் செய்வதனூடாக குரங்குகள் ஏற்றுமதி நிச்சயம் என்பது தெரிய வருகிறது.

குரங்குகள் ஏற்றுமதி திட்டமிட்டவாறு நடக்குமானால் அனுராதபுரம் வழியாக தெற்கே பயணம் செய்பவர்கள் இன்றுபோல் மரக்கொப்புகளால் தாவித் திரியும் குரங்குகளை காண முடியாது போகலாம். உலக மகா கடன்காரனாகத் திகழும் இலங்கைக்கு குரங்குகள் ஒரு வரப்பிரசாதமாகியுள்ளன.

இதனைக் குறிப்பிடும்போது 1960களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் நகர எல்லைக்குள் தெரு நாய்களை (கட்டாக்காலிகள்) பிடிக்க எடுக்கப்பட்ட ஒரு முயற்சி ஞாபகத்துக்கு வருகிறது. அந்த நாட்களில் வீடுகளின் வளர்ப்பு நாய்களைவிட தெருநாய்களே யாழ்ப்பாணத்தில் அதிகம். விசர் நாய்களும்கூட வீதிகளிலேயே திரியும். இதனால் பலர் நாய்க்கடிக்கு உள்ளாகினர். இரவு வேளைகளில் இந்த நாய்கள் வீதிகளில் படுத்திருக்கும். இதனால் ஏற்படும் விபத்துகள் அதிகம்.

இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண நாய் பிடிகாரர்களை யாழ்ப்பாணம் மாநகர சபை நியமித்தது. இவர்களுக்கு வண்டில் கூடு வழங்கப்பட்டது. பிடிக்கும் நாய்களை கூண்டுக்குள் ஏற்றி குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டு சென்று அழிக்க வேண்டும்.

அழிக்கப்பட்ட நாய்களின் வால் நுனிப்பகுதியை வெட்டியெடுத்து நகர நிர்வாகத்திடம் ஒப்படைத்தால் ஒரு வாலுக்கு இத்தனை ரூபா என்று சன்மானமாக சம்பளம் வழங்கப்படும். சில நாய்பிடிகாரர் நாளொன்றுக்கு 30,40 வரையான நாய் வால்களை ஒப்படைத்து பெரும் பணம் பெற்றனர்.

வாரங்கள் பலவாகியும் வீதிகளில் நாய்கள் தொகை குறையவில்லை. நகர நிர்வாகம் மேலதிக ஊழியர்களை நியமித்து நிலைமையைக் கண்காணித்தது. பல நூற்றுக்கணக்கான நாய்கள் வாலின் நுனிப்பகுதி இல்லாமல் தெருக்களில் காணப்பட்டன. நாய்களைப் பிடிக்காமல் அதன் வாலின் நுனிப்பகுதியை ஒருவாறு வெட்டியெடுத்து பணம் பெற்றவரின் சாதுரியம் பின்னரே தெரிய வந்தது.

இப்படியான ஒரு நிலைமை தென்னிலங்கைக் குரங்குகளுக்கு வராமல் இருக்குமா? அல்லது ஊழல் அரசாங்கமே இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளுமா?

# வரலாற்றை திரும்பிப் பார்த்தல்

# தமிழர் விடுதலை கூட்டணியும் தலைவர் அமிர்தலிங்கமும் இந்திய இலங்கை ஒப்பந்தமும்!




பகீரதன் அமிர்தலிங்கம்

**1987இல்** யூலை 29ம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும், ஜே.. ஆர் ஜெயவர்த்தனவுக்கும் ராஜீவ் காந்திக்குமிடையில் கையெழுத்தான இந்திய இலங்கை ஒப்பந்தம் ஆரம்பத்தில் அன்று களத்திலிருந்த அனைத்து தமிழ் அமைப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருந்தது. விடுதலை புலிகளின் தலைவர் திரு பிரபாகரனை இலங்கையிலிருந்து விசேட விமானத்தில் அழைத்து வந்து அவர் புது டெல்லிக்கு பயணிக்கும் முன்னர் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கொடுத்த பேட்டியில் இதற்கு ஆதரவு வழங்குவதாகவே குறிப்பிட்டார். பின்னர் புதுடெல்லி சென்றபோது ஏனைய இயக்கங்களையும் அழைத்து அவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை அறிந்த போது விடுதலை புலிகள் சிறிது பின்னடித்தாலும் இந்திய அரசின் அழுத்தத்தால் அதனை ஏற்றுக் கொண்டனர். தமிழர் விடுதலை கூட்டணி உட்பட ஏனைய இயக்கங்களும் சில தயக்கங்களும் வேற்றுமைகளும் இருந்தாலும் கூட அந்த ஒப்பந்தத்தை ஏற்று இந்திய அரசாங்கத்துடன் வேலை செய்து அந்த ஒப்பந்தம் மூலம் கிடைக்கும் உரிமைகளை மேலும் பலமாக்க உறுதி கொண்டிருந்தன, ஏற்றுக் கொண்டிருந்தன.

இந்தியாவை பொறுத்த வரை இலங்கை தமிழர் பிரச்னைக்கு இதை ஒரு ஆரம்ப தீர்வாகவே கருதினார்கள். ஆனால் அதே நேரத்தில் இதை விரைவில் முடிவுக்கு கொண்டுவரவும் விரும்பினார்கள்.

அதைவிட இந்த ஒப்பந்தத்தை தமிழர்கள் தரப்புக்கள் ஏற்றுக்கொண்டலென்ன இல்லாவிட்டால் என்ன இந்த ஒப்பந்தத்தை முன்னெடுத்து செல்வதிலேயே இந்திய அரசாங்கம் பூரண கவனம் செலுத்தியது. மறைமுகமாக எல்லா ஆயுத இயக்கங்களுக்கும் இதை ஏற்றுக் கொள்ளாவிடில் இந்திய மண்ணில் அவர்கள் வருங்காலத்தில் தங்கியிருப்பதுவோ, செயல்படுவதுவோ சிரமமானது எனவும் கூறப்பட்டது.

திரு அமிர்தலிங்கத்தின் தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணியை பொறுத்த வரை இது முடிந்த முடிவாக இல்லாவிட்டாலும்கூட இதை ஏற்றுக்கொண்டு



இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து முழுமையாக செயல்படவே முற்பட்டது. இந்த ஒப்பந்தம் உருவானதை தொடர்ந்து நடந்த கடற்படை அணிவகுப்பில் தாக்கப்பட்ட இந்திய பிரதமருடன் உடனடியாக திரு அமிர்தலிங்கம் தொடர்பு கொண்டு அவரது உடல்நலத்தை அறிந்ததுடன் தங்கள் விசனத்தையும் பதிவு செய்தார். அத்துடன் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் நேரடியாக சென்னை வந்த ராஜீவ் காந்தி அவர்கள் சென்னையில் மரீனா கடற்கரையில் அன்றைய தமிழக முதலமைச்சர் திரு எம்ஜி. இராமச்சந்திரனுடன் சேர்ந்து பங்கு பற்றி பேசிய கூட்டத்தில் திரு அமிர்தலிங்கம் அவர்கள் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் இந்தியப் பிரதமருக்கு மாலை அணிவித்து தமது பூரண ஆதரவை தெரியப்படுத்தியிருந்தார். மிதவாத தலைமையானது ஒரு விடயத்தை நன்கு புரிந்து கொண்டிருந்தனர். 1983 - 84 அன்னை இந்திரா உயிருடன் இருந்த வேளையில் இருந்த புது டெல்லியில், இந்திய அரசாங்கத்திற்கு ஈழத்தமிழர் நலனில் இருந்த அக்கறைக்கும் 1986 - 87 காலப்பகுதியில் ராஜீவ் காந்தி காலத்தில்



இருந்த அக்கறைக்கும் இடையில் இருந்த வித்தியாசமே அதுவாகும். அன்னை இந்திராவின் காலத்தில் இந்த பேச்சுவார்த்தைகளின் பிரதான செயல்பாட்டாளராக கடமையாற்றிய திரு ஜீ. பாரத்தசாரதி அவர்கள் ஓரங்கட்டப்பட்டு, வட இந்திய ஆலோசகர்கள் அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். திரு எம்.ஜி. இராமச்சந்திரனும், பண்டுருட்டி இராமச்சந்திரனும், மத்திய அமைச்சர் திரு ப. சிதம்பரமும் இதில் முக்கிய பங்கு வகித்தாலும்கூட அவர்கள் எல்லோரும் அரசியல்வாதிகளே. ஒரு பக்கம் திம்பு பேச்சுவார்த்தை காலத்தில் எமது பிரச்சனையை கையாள நியமிக்கப்பட்ட மத்திய அரசு அதிகாரி திரு ரொமேஷ் பண்டாரி அவர்கள் கூறியிருந்தார் “இந்த பிரச்னையை ஓர் அண்டை நாட்டு பிரச்னையாக பார்க்க வேண்டுமே தவிர தமிழர் பிரச்னை என்பதற்கு அப்பால் பார்க்க வேண்டும்” என. இதைப்பற்றி பின்னர் தான் எழுதிய புத்தகத்தில் திரு டிக்சித் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். எந்த தீவிரவாத இயக்கமோ மிதவாத இயக்கமோ இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தாலும் கூட இந்திய அரசை பொறுத்தவரை தமிழீழ விடுதலை புலிகளை தம்முடன் இந்த விடயத்தில் சேர்த்து பயணிக்க வேண்டியதன் முக்கியத்தை உணர்ந்திருந்தது. அதனால்தான் அமைக்கப்படவிருந்த இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் இடைக்கால நிர்வாகத்தின் பெரும்பான்மை பிரதிநித்துவத்தை புலிகளிடமே கொடுக்க தீர்மானித்தனர். பதினொரு பிரதிநிதிகள் கொண்ட இடைக்கால நிர்வாகத்தில் ஏழு இடங்களை விடுதலை புலிகளுக்கும் மற்றைய இயக்கங்களான தமிழர் விடுதலை கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் மற்றும் ஈழபுரட்சி கர மாணவர் இயக்கம் போன்றவற்றிற்கு ஒவ்வொரு இடத்தையும் அளித்திருந்தனர். இந்த விடயத்தை யிட்டு சென்னையில் அன்றைய கட்டத்தில் நடந்த தமிழர் விடுதலை கூட்டணியின் பொலிற்பியுரோ கூட்டத்தில் மிகவும் காரசாரமாக விவாதிக்கப் பட்டது. ஜனநாயக அரசியல் இயக்கத்திற்கு ஒரு இடத்தை தருவதை எப்படி ஏற்றுக் கொள்வது என தர்க்கம் ஏற்பட்டது. இதையிட்டு திரு அமிர்தலிங் கம் பதிலளிக்கையில் எமக்கு ஒரு இடம் கூட இல்லா விட்டாலும் கூட பரவாயில்லை இந்த ஒப்பந்தத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டு பயணிக்க இந்த நட வடிக்கை உதவும் என்றால் அதை ஏற்றுக்கொள்ள நான் தயார் என கூறியதுடன், பின்னர் தேர்தலில் மக்கள் தீர்மானிக்கட்டும் யார் தங்களது ஜனநாயக பிரதிநிதிகள் என கூறி அந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். பின்னர் தமிழீழ மக்கள் விடுதலை கழகம் தாங்கள் பங்கு பற்ற விரும்பாமல் அந்த இடத்தையும் தமிழர் விடுதலை கூட்டணிக்கு வழங்க முற்பட்டது. ஜெயவர்தனாவின் நரித்தனமான செயல்பாட்டால் தலைமைக்கு விடுதலை புலிகள் கொடுத்த மூன்று பெயர்களில் தனக்கு நெருக்கமான ஒருவரை நியமிக்க முயற்சிக்க இடைக்கால நிருவாகம் கிடப்பில் போடப்பட்டது.

வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட நேரத்தில் விடுதலை புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையே உரசல்கள் ஏற்பட்டு பின்னர் முறுகலாகி தாக்குதல்கள் நடைபெற ஆரம்பித்திருந்தன. இந்த நிலையில் இந்திய தூதுவர் திரு டிக்சித் அவர்கள் தமிழர் விடுதலை கூட்டணியை அந்த தேர்தலில் பங்கு பற்றி இணைந்த மாகாண சபையை பொறுப்பெடுத்து ஒப்பந்தத்திற்கு பூரண ஆதரவை வழங்கும் படி அழுத்தம் கொடுத்த வண்ணமிருந்தார். ஏற்கனவே உள்நாட்டிலும் வெளி நாட்டிலும், பல இடங்களிலும் இந்த ஒப்பந்தத்திற்கான பூரண ஆதரவை பதிவு செய்த தமிழர் விடுதலை கூட்டணி இந்த ஒப்பந்தம் பற்றிய தமது ஆதரவை “செல்வா ஈட்டிய செல்வம்” என்ற புத்தகத்தின் மூலம் எழுத்திலும் பதிந்திருந்தது. இந்தியாவிலும் இலங்கையிலும் இருந்த தூதரகங்களை சந்தித்தும் தாம் இந்த ஒப்பந்தத்திற்கான பூரண ஆதரவை வழங்குவதாக கூறியிருந்தனர். தேர்தலில் பங்கு பற்றுவது பற்றி விவாதம் எழுந்த போது ஆயுதமேந்தாத மிதவாத இயக்கமான தமிழர் விடுதலை கூட்டணிக்கு மிக அதிக தெரிவுகள் இருக்கவில்லை. ஒன்றில் தேர்தலில் முழுமையாக பங்கு பற்றி வேட்பாளர்களை அறிவித்து அந்த வேட்பாளர்கள் தமிழீழ விடுதலை புலிகளால் ஒவ்வொருவராக வேட்டையாடப்படுவதை, கொலை செய்யப்படுவதை பார்த்து அனுதாபக் கூட்டம் வைத்தபடி இருக்க வேண்டும் இல்லா விட்டால் அந்த தேர்தலில் நேரடியாக பங்கு பற்றாமல் இருக்க வேண்டும். அன்று வட கிழக்கிலிருந்து கொழும்பில் நடை பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் விடுதலை கூட்டணியின் செயல்பாட்டாளர்கள் அனைவரும் தேர்தலில் பங்கு பற்றுவதில் இருந்த பிரச்சனைகளையும், தேர்தலில் பங்கு பற்றினால் தாங்கள் உயிரிழப்பது உறுதி எனவும் கருத்து வெளி யிட்டனர். சென்னையிலிருந்து வந்து கொழும்பிலிருந்து செயல்பட்டு கொண்டிருந்த தமிழர் விடுதலை கூட்டணி



தலைமையானது இந்த கருத்தை ஏற்று தமது செயல்பாட்டாளர்களதும் ஆதரவாளர்களதும் உயிரை பணயம் வைக்காமல் மாகாண சபை தேர்தலில் பங்கு பற்றுவதில்லை என்ற முடிவை எடுத்தது. இதனால் பல பாதிப்புகள் இருந்தாலும் கூட அன்றைய கால கட்டத்தில் தாங்கள் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புடன் கொழும்பிலிருந்து கொண்டு தமது செயல்பாட்டாளர்களின் உயிர்களை பணயம் வைக்க விரும்பாமலேயே இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டது. இதை இந்திய தூதுவருக்கு தெரிவித்த போது அவர் இந்த முடிவு பற்றி தனது அதிருப்தியை தெரிவித்ததுடன் தாங்கள் அமைதிப்படையின் பாதுகாப்பை வேட்பாளர்களுக்கு தருவதற்கு முன்வந்தார். சரியோ பிழையோ இந்திய இராணுவத்துடன் எமது இளைஞர்கள் யுத்தம் செய்த படி இருக்கையில் இந்திய அமைதிப்படையினரின் பாதுகாப்புடன் தமது வேட்பாளர்கள் தேர்தலில் பங்கு பற்றுவதையும் தமிழர் விடுதலை கூட்டணி விரும்பவில்லை.

அது மட்டுமல்ல ஏற்கனவே நிராயுதபாணிகளாக மக்களுடன் இருந்து யாழ்ப்பாணத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான தலைவர்கள் தருமலிங்கம், ஆலால சுந்தரம் போன்றவர்களையும் ஏனைய பலரையும் அநியாயமாக நம்மவர்களின் துப்பாக்கிகளுக்கே பலி கொடுத்த சம்பவங்களும் நடந்த நிலையில் இந்த முடிவே சிறந்ததாகப்பட்டது.

இன்று முப்பத்தைந்து வருடங்களின் பின்னர் ஏன் தமிழர் விடுதலை கூட்டணி அன்று தேர்தலில் பங்கு கொள்ளவில்லை என்பதற்கு இதுவே விளக்கமாகும். அன்றைய நிலையில் இருந்து சிந்திப்பதே சிறந்த நிலைப்பாடாகும்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்: கிளம்பும் எதிர்ப்புகள்...!

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஆயுத வழியான தைத் தொடர்ந்து தற்காலிக ஏற்பாடாகக் கொண்டு வரப்பட் டது பயங்கரவாத தடை சட்டம். கடந்த 43 வருடங்களில் இந்தச் சட்டம் சிறுபான்மையினரை - குறிப்பாக தமிழ் மக்களையே இலக்கு வைத்தது இந்தச் சட் டம். இதனால், தமிழ் மக்கள் நீதியற்ற சிறை வைப்பு - கொடுமைகள் - சித்திரவதைகள் - இழப்புகள் - இவ்வளவும் ஏன் மரணங்களைக் கூட சந்தித்தனர். போர் முடிந்து 14 வருடங்களை கடக்கும் இன் றைய நிலையிலும்கூட தமிழ் அரசியல் கைதிகளின் சிறை வாசத் துக்கும் - அவர்கள் - அவர்களின் குடும்பங்கள் சந்திக்கும் துன்ப, துயரங்களுக்கும் பயங்கரவாத சட்டமே ஒரே காரணம். இந்த சட்டத்தை சர்வதேச - மேற்குலக நாடுகளுக்கு நிகரானதாக மாற்றப் படும் என்று அரசாங்கம் கடந்த காலங்களில் உறுதியளித்தது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்ற பெயரில் உத்தேச சட்டம் வெளியானது. ஆனால், அது மக்கள் எதிர்பார்த்ததாக உள்ளதா...?

மக்களில் சிலர் இங்கே மனம் திறக்கிறார்கள்...!

## சிங்கள மக்கள் இப்போதே உணர்கின்றனர்!



**சிறீரங்கன்,**
கல்வியங்காடு.

கடந்த 40 வருடங்களாக பயங்கரவாத சட்டத்தால் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு - கஷ்டப்பட்டு இருக்கின்றார்கள். சித்திரவதைகள் - சிறைவாசங்களை அனுபவித்திருக்கின்றார்கள். நானும் இந்த பயங்கரவாத சட்டத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றேன்.

இந்த சட்டத்தை அகற்றுவதற்கு இப்போது உகந்த தருணம். இதனை நீக்க அல்லது வலுவற்றதாக்க தென் பகுதியில் உள்ள சிங்கள மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். எனினும், இந்தச் சட்டத்தின் விளைவு எவ்வாறானது என்பதை சிங்கள மக்கள் ஓரளவுக்குத்தான் உணர தொடங்கியுள்ளார்கள். ஆனால், நாங்கள் - தமிழ் மக்கள் கடந்த 40 வருடங்களாக இந்த சட்டத்தை அனுபவித்து விட்டோம். எனவே, சிங்கள மக்கள் இந்த சட்டத்தை நீக்குவதற்கு முனையும் போது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ் மக்களும் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

**அறிக்கையிடல்**
**REPORTING**
**என். குகராஜ்**

## அடக்குமுறைக்கு வழிவகுக்கும்!



**கிஷோர்குமார்,**
சாவகச்சேரி.

பயங்கரவாத தடைச் சட்டம் என்பது தமிழ் மக்களுக்கு பழக்கமான ஒரு சட்டமாகும். ஆனால், அந்த சட்டத்தை மாற்றுவதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு தமிழ் மக்கள் மாத்திரம் முயற்சித்து சாத்தியப்படாமல் போனது. ஆனால், தற்போது சிங்கள மக்களும் இந்த சட்டத்தை நீக்குமாறு கோரி போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற போர்வையில், அடக்குமுறையை பிரயோகிப்பதற்காக இந்த சட்டம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் தருணத்தில் சிங்கள மக்கள் இந்த சட்டத்தை நீக்குவதற்கு அவர்களுடன் இணைந்து நாமும் இந்த சட்டத்தை நீக்க முயற்சிக்க வேண்டும்.

## அபாயகரமான சட்டம்!



**க. நாவலன்,**
புங்குடுதீவு.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத சட்டத்தை நீக்குமாறு கோரிக்கை விடுக்கின்றபோது, அரசாங்கத்தால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட உள்ளது.

இது ஓர் அபாயகரமான சட்டமாகும். இதனை முழுமையாக நாங்கள் எதிர்க்க வேண்டும். இந்த சட்டத்தை நீக்குவதன் மூலமே எதிர்காலத்தில் நாங்கள் நிம்மதியாக நாட்டில் வாழ முடியும் என்பது எனது கருத்து. இதற்கு பொதுமக்கள் மற்றும் ஏனைய தரப்புகள் இணைந்து இந்த சட்டத்தை எதிர்க்கவேண்டும்.

## மனித குலத்துக்கே விரோதமான சட்டம்



**த. சிவகுமார்,**
அச்சுவேலி.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி (நாளை மறுதினம்) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தற்போதைய நிலையில், சமர்ப்பிக்கப் படுமா இல்லையா என்பது கேள்விக்குறியான விடயமே. எனினும், நீதி அமைச்சர் கட்டாயமாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும் என அறிவித்திருக்கின்றார். அங்கு சட்டம் நிறைவேற்றப்படுமாக இருந்தால், இலங்கையில் உள்ள மக்கள் அனைவருக்கும் பேரிடரான சட்டமாக - முதல் இருந்த சட்டத்தைவிட - பல மடங்கு ஆபத்தான சட்டமாகத் தான் இது இருக்கும்.

இந்த சட்டத்தால் நிம்மதியாக நாங்கள் எந்த ஒரு வசனத்தைக்கூட பேச முடியாத நிலை ஏற்படும். உதாரணத்துக்கு முகப்புத்தகத்தில் வரக்கூடிய அரசுக்கு எதிரான விடயங்களுக்குக்கூட நாங்கள் கருத்துக்கூற முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்படுவோம். அத்துடன், அவ்வாறு கருத்துத் தெரிவித்தால் எங்களை கைது செய்வதற்கான முழு அதிகாரம் சட்டத்தின் மூலம் கிடைக்கப் போகின்றது.

அத்துடன், எமது பாரம்பரிய நில அபகரிப்பு எதிரான போராட்டங்கள், சம்பள பிரச்னைகள் மற்றும் அரசுக்கு எதிரான ஏனைய போராட்டங்களைத் தடுக்கின்ற - போராடுவோர் கைது செய்யப்படும் நிலைக்கும் இந்தச் சட்டம் தள்ளும். இந்த சட்டத்தில் மேலும் பல உள்ளார்ந்த கருத்துகள் காணப்படுகின்றன. ஒட்டுமொத்தத்தில் பார்க்கப் போனால் மனித குலத்துக்கு விரோதமான ஒரு சட்டமாகும்.



## பலரின் வாழ்வை தொலைத்த சட்டம்!

**குகநேசன்,**
கொக்குவில்.

தமிழ் மக்கள் இந்த பயங்கரவாத சட்டத்தால் ஏற்கனவே, பல பாதிப்புகளை எதிர்நோக்கி விட்டார்கள். தமிழ் மக்கள், இளைஞர்கள், யுவதிகள் பயங்கரவாதத் தடை சட்டத்தின் மூலம் தமது வாழ்க்கையை தொலைத்து விட்டார்கள். பலர் தற்போதும் பாதிக்கப்பட்டு கொண்டிருக்கின்றார்கள்.

சிங்கள மக்களுக்கு தற்போதுதான் இதன் தார்ப்பரியம் தெரியக்கூடியதாக இருக்கின்றது. நாங்கள், சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்து ஒற்றுமையாக இந்த தடைச் சட்டத்தை எதிர்த்து நிறுத்த வேண்டும்.

## ஒன்றாக போராடுவோம்



**க. உதயகுமார்,**
கோப்பாய்.

இலங்கையில் பயங்கரவாத சட்டம் என்பது - நம் மக்களைப் பாதித்த ஒரு சட்டமாகவே காணப்படுகின்றது. தமிழ் மக்களை மிகவும் பாதித்த ஒரு சட்டமாக உள்ளது. இந்த சட்டத்தால் தமிழ் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்திருந்தார்கள். ஆனால், தற்போது சிங்கள மக்களும் இந்த சட்டத்தால் பாதிக்கப்படுகின்றார்கள்.

எனவே, தற்போது இந்த சட்டத்தை நீக்குவதற்கு அனைவரும் ஒற்றுமையாகப் போராட வேண்டும்.

## நாங்கள் எதிர்க்க வேண்டும்!




**க. உதயசிறீ,**
யாழ்ப்பாணம்.

அரசாங்கம்அறிமுகப்படுத்த முனைகின்ற பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பது பயங்கரவாத தடை சட்டத்தின் மறுவடிவம் என்றே கூற முடியும். அதாவது, பெயர் மாற்றப்பட்ட ஒரு சட்டமாக உருவாக்கப் படுகிறது.

பயங்கரவாத சட்டத்தைவிட மிகமிகக் கடுமையான சட்டமாக இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அணுக வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்த சட்டத்தை மக்களின் பேச்சுரிமையை - ஜனநாயக உரிமையை தடுக்கின்ற - அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் சட்டமாகவே பார்க்க வேண்டும்.

சாதாரணமாக அரசாங்கத்துக்கு எதிராகக் கருத்து கூறினால்கூட அவரை கைது செய்வதற்கான அதிகாரம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. நான்கு பேர்கூடி ஜனநாயக ரீதியாக தங்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதை இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் முற்றுமுழுதாக தடை செய்கின்றது. எனவே, இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நாங்கள் கட்டாயமாக எதிர்க்க வேண்டும் - அரசியல்வாதிகளும் எதிர்த்து வாக்களிக்க வேண்டும்.



## வியக்க வைக்கும் சூரி!

'விடுதலை' படத்தின் வெற்றி, சூரியை அடுத்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறது. ராம் இயக்கத்தில் நிவின் பாலியுடன் சூரி இணைந்து நடிக்கும் 'ஏழு கடல் ஏழு மலை', சிவகார்த்திகேயன் தயாரிப்பில் 'கூழாங்கல்', விநோத் இயக்கும் 'கொட்டுக்காளி' படங்களை முடித்தி ருக்கும் சூரி, அடுத்து நடிக்கப்போவதும் வெற்றிமாறன் கதையில்தான். ஆனால், அதை இயக்கப்போவது வெற்றிமாறன் அல்ல. வெற்றிமாறனின் கதையை துரை செந்தில்குமார் இயக்குகிறார். இதைத் தொடர்ந்து அமீர், விக்ரம் சுகுமாறன் என சூரியின் அடுத்தகட்டமும் ஆச்சரியமளிக்கிறது.

## போர்த் தொழில்

அசோக் செல்வன் நடிக்கும் புதிய படத்தின் தலைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. படத்திற்கு 'போர்த் தொழில்' என பெயரிடபட்டுள்ளது. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் விக்னேஷ்ராஜா இயக்குகிறார்.

கடந்த ஆண்டு ரா.கார்த்திக் இயக்கத்தில் அசோக் செல்வன் நடித்த 'நித்தம் ஒரு வானம்' படம் கலவை யான விமர்சனங்களைப் பெற்றது. இந்தப் படத்தைத் தொடர்ந்து அசோக் செல்வன் அறிமுக இயக்குநர் விக்னேஷ் ராஜாவுடன் இணைகிறார்.

இந்தப் படத்தில் சரத்குமார், நிகிலா விமல் உள்ளிட்ட பலர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர்.






## '60' நாயகர்களுக்கு பரிசு

பொலிவூட் சுப்பர் ஸ்ரார்களாக விளங்கும் சல்மான் கானும், ஷாருக் கானும் இணைந்து 30 ஆண்டுகளுக்கு முன்பு ஹகரன் அர்ஜுன்" படத்தில் நடித்தனர். அதன் பிறகு இருவரும் சேர்ந்து நடித்திருந்தாலும் இருவருக்கும் சம வாய்ப்பு இருக்கும் படங்களில் நடித்தது கிடை யாது. ஒருவர் படத்தில் மற்றொருவர் கௌரவ வேடத் தில் மட்டுமே நடித்திருக்கின்றனர்.

ஷாருக்கும் சல்மானும் வரும் 2025ஆம் ஆண்டு 60 வயதில் அடியெடுத்து வைக்கின்றனர். 60 வயது அவர் களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்க வேண்டும் என்பதற்காக, இருவரும் இணைந்து நடிக்கும் படத்தைத் தயாரிக்க யஷ்ராஜ் ஸ்டுடியோ முடிவு செய்துள்ளது.



## மஞ்சு வாரியரின் துணிவு

மலையாள நடிகை மஞ்சு வாரியர் தமிழில் அசுரன் படத்தை தொடர்ந்து அடுத்ததாக அஜித்துடன் துணிவு என்கிற படத்தில் இணைந்து நடித்தார்.

அந்தப் படப்பிடிப்பின்போது அஜித், படத்தில் நடித்த நண்பர்களுடன் 1,000 கி. மீற்றர் மோட்டார் சைக்கிள் பய ணம் சென்றார். அடுத்த முறை அஜித்துடன் இதுபோன்ற ஒரு பயணத்தில் கலந்து கொள்ளும்போது தானே மோட் டார் சைக்கிள் ஓட்டுவதற்காக மஞ்சு வாரியர் பயிற்சி பெற்று வருகிறார். இதற்காக அவர் பி. எம். டபிள்யூ. மோட்டார் சைக்கிள் ஒன்றையும் வாங்கி பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

## விஷ்ணுவுடன் அதிதி

விஷ்ணு விஷால் - இயக்குநர் ராம்குமார் இயக்கத்தில் புதிய படத்தில் நடிக்கவுள் ளார். இதற்கு முன்பு இவர்கள் கூட்டணியில் முண்டாசுபட்டி, ராட்ச சன் போன்ற படங்கள் வெளியாகின.

தற்போது உருவாகும் இந்த படம் காதல், நகைச்சுவை கலந்த கதைக்களமாக உரு வாக்க உள்ளனர். இந் நிலையில் இந்த படத் தில் கதாநாயகியாக நடிக்க நடிகை அதிதி சங்கர் ஒப்பந்தம் ஆகி யுள்ளார்.



## செப்ரெம்பரில் ஜெயிலர்

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் நடிகர் ரஜினி காந்த் நடிப்பில் தயாராகி வரும் திரைப்படம் ஜெயி லர். அனிருத் இசையமைக்கி றார்.

இதில் மோகன்லால், சிவராஜ் குமார், ஜாக்கி ஷெ ராப், சுனில், தமன்னா, ரம்யா கிருஷ்ணன் ஆகி யோர் முக்கிய கதாபாத்தி ரத்தில் நடித்து வருகின்ற னர். விரைவில் இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைய உள்ளது.

இந்நிலையில் இந்த படத்தை செப்ரெம்பர் மாதத்தில் வரும் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியிட முடிவு செய்துள் ளதாக கூறப்படுகிறது.






**திரைப்படம் - யாத்திசை**
**இயக்கம் - தரணி ராசேந்திரன்**
**இசை - சக்கரவர்த்தி**
**நடிப்பு - சக்தி மித்ரன், சேயோன், ராஜலட்சுமி**

அதிகாரத்தை அடைய பேரரசை எதிர்க்கத் துணியு ம் சிறு இனக்குழு நடத்தும் போராட்டத்தின் இரத்த வாடைதான் 'யாத்திசை'.

7ஆம் நூற்றாண்டின் பாண்டிய அரசன் அரிகேசரி. இவரின் மகன் ரணதீரன் (சக்தி மித்ரன்). இந்த பாண் டிய பேரரசுக்கு எதிராக சேரர்கள் போரிடுகிறார்கள். அவர்களுடன் சோழர்கள் மற்றும் எயினர்கள் உள்ளிட்ட சிறுகுழுக்களும் இணைந்து உதவி புரிய, போரை வழிநடத்தும் ரணதீரன் தலைமையிலான பாண்டியர் படை வெற்றிபெறுகிறது. இதன் எதிரொலியாக சேரர்கள் நாடு கடத்தப்பட, உதவியாக வந்த சோழர்கள் காட்டுக்குள் தலைமறைவாகின்றனர். இதில் பாண்டியர்களால் பாலை நிலத்துக்கு விரட் டப்பட்ட எயினர் குழுவைச் சேர்ந்த வீரன் கொதி (சேயோன் ) தனது குழுவைத் திரட்டி, சோழர்கள் உதவியுடன் ரணதீரனை வெல்ல முடிவு செய்கிறான். இறுதியில் ரணதீரனை கொதி வென்றானா? பாண்டிய பேரரசு வீழ்ந்ததா? - இதுவே திரைக்கதை.




பேரரசுக்குள் அதிகாரத்தை அடைய நிகழும் சூழ்ச்சி களும் துரோகங்களாகவும் - இரு பெரும் பலம்பொருந் திய அரசர் படைகளுக்கு இடையிலான சண்டைகளாக வுமே வரலாற்று புனைவு படங்கள் காட்சிப்படுத் தப்பட்டுள்ளன. ஆனால், எயினர் குடி என்ற சிறிய இனக்குழு ஒன்று அதிகாரம் பொருந்திய பேரரசை எதிர்த்து 'அதிகாரம்' பெற்றதா என்ற சுவாரசியமான ஒரு வரியை பிரமாண்ட காட்சி அமைப்புகளுடன் படமாக்கியிருக்கிறார் அறிமுக இயக்குநர் தரணி ராசேந்திரன்.

மூளும் போர்களுக்கும் வீழும் உயிர்களுக்கும் அரச மமதைக்கும் அடிப்படை 'அதிகாரம்'தான். அரசுகள் மாறக்கூடியது. அதிகாரம் மட்டுமே நிலையானது என்பதை நிறுவுகிறது படம். கதைக்கேற்ற பிரமாண் டத்தையும், அதற்கேற்ற காட்சியமைப்பையும் எந்த சமரசமுமின்றி பதிவு செய்த விதம் களத்தை விறுவிறுப் பாக்குகிறது.

பல்வேறு இனக்குழுவைச் சேர்ந்தவர்களின் தனித்து வமான பழக்கவழக்கங்கள், அவர்களின் கலாசார வழிபாட்டு முறைகளின் சித்தரிப்பு, அவர்கள் வாழும் நிலப்பரப்பு, வீட்டு அமைப்பு, மண்பாத்திரங்கள், உணவுமுறைகள் உள்ளிட்டவற்றின் மூலம் அவர்களின் உலகில் நாமும் பிரவேசிக்கும் உணர்வு, காட்சிகளுக் குள் ஒன்ற உதவுகிறது.

குறிப்பாக, எயினர் குல கடவுள் கொற்றவைக்கான சடங்குகளும் உயிர் பலி கொடுக்கும் முறையும் சுவாரசி யம் கூட்டுகின்றன. பழந்தமிழரின் மொழியை கூடுதல் சிரத்தையுடன் பதிவு செய்தமை, மக்களில் பெரும் பாலானோர் தங்கள் உடலை துணிக்கு பதிலாக ஆப ரணம் மற்றும் நகைகளால் மூடியிருப்பது, தேவரடி யார் முறையின் அவலம், பேரரசு தொடங்கி சிறு இனக்குழு வரை ஆணாதிக்க சமூகமாக இருந்ததை காட்சிப்படுத்தியிருந்த நுணுக்கமான அணுகுமுறை கவனிக்க வைக்கிறது.

சக்தி மித்ரன், சேயோன் இருவரின் அழுத்தமான ஆக்ரோஷமான நடிப்பும், அவர்களின் இறுதி சண் டைக்காட்சியும் அறிமுக நடிகர்கள் என்ற சாயலிலி ருந்து விலகி நிற்கின்றன. ராஜலட்சுமி, குரு சோமசுந் தரம், சுபத்ரா, சமர், வைதேகி அமர்நாத் உள்ளிட்டோ ரின் கதாபாத்திரத்துக்குத் தேவையான யதார்த்த நடிப்பு படத்துக்கு பெரும் பலம். இதேபோன்று இசையும் ஒளிப்பதிவும் படத்துக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளன.

படத்தில் எயினர் சமூகத்துக்கான வழக்கொழிந்த மொழியை பதிவு செய்திருப்பது கதைக்கு எந்த அள வுக்கு பயனளிக்கிறது என்பது கேள்விக்குறி. காரணம் அவர்கள் பேசும் காட்சிகளில் ஒவ்வொருமுறையும் உபதலைப்புகளை பார்க்கும் உணர்வு மேலோங்கு கிறது. 'அதிகாரம்'தான் எல்லாவற்றுக்கும் அடிப்படை என்பதை வெறும் வசனங்களாக சொல்லியிருந்ததும் அதற்கான அழுத்தமான காட்சிகள் இல்லாததும் பலவீனம்.

இப்படி சில குறைகள் இருப்பினும் புது வகையான திரையனுபவத்தை யதார்த்தமான காட்சிகளுடன் சொல்லியுள்ளது யாத்திசை.




# இந்தியர்களுக்கு அதிர்ஷ்டம்!

16ஆவது ஐ. பி. எல். இருபது - 20 தொடர் நடக்கிறது. இதில், தாக்கத்தை ஏற்படுத்தும் வீரர் (இம்பேக்ட்) என்ற புதிய விதிமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஓர் ஆட்டத்தில் (இன்னிங்ஸில்) அரைவாசியில் ஒரு வீரரை வெளியேற்றி விட்டு அவருக்குப் பதிலாக மாற்று வீரரை சேர்க்க முடியும். அந்த மாற்று வீரர் துடுப்பாட்டமும் செய்யலாம். பந்தும் வீசலாம்.

இதனால் 2ஆவது துடுப்பாட்டம் செய்யும் அணியினர் கூடுதலாக ஒரு துடுப்பாட்ட வீரரையும் பந்து வீசும் அணி கூடுதலாக ஒரு பந்து வீச்சாளரையும் சேர்த்துக் கொள்கின்றன.

‘புதிய விதியால் இப்போது நாம் 11 வீரருக்கு பதிலாக 12 வீரர்களுடன் விளையாடுவது போல் உணர்கிறோம்’ என்கிறார், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் துடுப்பாட்ட பயிற்றுநர் மைக் ஹசி.

‘எப்படியும் கூடுதலாக ஒரு துடுப்பாட்ட வீரர் வந்து விடுவதால், வழக்கத்தை விட 10-15 ஓட்டங்கள் அதிகமாக எடுக்க வேண்டியது அவசியமாகிறது’ என்கிறார், பெங்களூர் அணியின் தலைவர் டு பிளசிஸ்.

இன்னொரு பக்கம் தாக்கத்தை ஏற்படுத்தும் விதியால் இந்திய வீரர்களுக்கு நல்ல பலன் கிட்டியுள்ளது. இந்தத் தொடரில் முதல் 24 ஆட்டங்களில் 10 அணிகளையும் சேர்த்து மொத்தம் 107 இந்திய வீரர்கள் களமிறங்கியுள்ளனர். இதுவே 2022ஆம் ஆண்டு ஐ. பி. எல். தொடரில் முதல் 24 போட்டிகளில் பயன்படுத்தப்பட்ட இந்திய வீரர்களின் எண்ணிக்கை 91. அதற்கு முந்தைய ஆண்டு 76.

பெரும்பாலான அணிகள் தாக்கத்தை ஏற்படுத்தும் விதியில் இந்தியர்களையே பயன்படுத்துவதால் இளம் வீரர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது. அது மட்டுமின்றி மூத்த வீரர்களையும் தொடர்ந்து விளையாடி களைப்படையும் வீரர்களையும் ஓர் ஆட்டத்தில் பயன்படுத்தி விட்டு அடுத்த ஆட்டத்தில் ஓய்வு அளிப்பதற்கும் இந்த விதி உதவுகிறது.

(ஐ)

# வெறித்தனம் காட்டும் கோலி

2021ஆம் ஆண்டுக்கு பிறகு, பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் பெங்களூர் அணியின் தலைவராக களமிறங்கினார் விராட் கோலி.

556 நாட்களுக்கு பிறகு, ஆர்.சி.பி அணியின் தலைவராக தனது முதல் வெற்றியை விராட் கோலி பதிவு செய்துள்ளார். மேலும் இந்தப் போட்டியில் 47 பந்துகளில் 59 ஓட்டங்கள் அடித்தார். இதன் மூலம், ஐபிஎல் தொடரில் தலைவராக 6,500 ஓட்டங்கள் எடுத்த முதல் வீரர் என்ற சாதனையை விராட் கோலி படைத்துள்ளார்.

ஐபிஎல் தொடரில் இதுவரை 600 பௌண்ட்ரிகளையும் விளாசியுள்ளார். இது மட்டுமில்லாமல், ஐ. பி. எல். தொடரில் 30 ஓட்டங்களுக்கு மேல் அடித்த முதல் வீரர் என்ற பெருமையையும் கோலி பெற்றுள்ளார். ஐ. பி. எல். தொடரில் 221 போட்டிகளில் விளையாடியுள்ள இவர், 100ஆவது முறையாக 30 ஓட்டங்களுக்கு மேல் அடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மீள்வருகை



கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக களமிறங்கினார் இஷாந்த் சர்மா. கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்கு பிறகு ஐ. பி. எல். தொடரில் கடந்த வியாழக்கிழமை விளையாடியுள்ளார்.

இந்தப் போட்டியில் 4 ஓவர்களை வீசியதில், 19 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து இரண்டு விக்கெட்களை வீழ்த்தினார். மேலும், இந்த மீள் வருகை போட்டியில் போட்டி நாயகன் விருதையும் வென்று கலக்கியுள்ளார். இதன் மூலம், மீண்டும் ஐ. பி. எல். தொடரில் இனிய தொடக்கத்தை அமைத்துள்ளார் இஷாந்த் சர்மா.

# கனவு பலித்தது




நடப்பு ஐ. பி. எல். தொடரில், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி பஞ்சாப் கிங்ஸ் அணியை தோற்கடித்து வெற்றி வாகை சூடியது. இந்த ஆட்டத்தில் பந்துவீசிய பெங்களூர் அணிக்கு முகமது சிராஜ் தனது சிறப்பான பங்களிப்பை அளித்திருந்தார். பவர்பிளே ஓவர்களிலேயே 2 விக்கெட்களைக் கைப்பற்றி அசத்தி இருந்தார்.

4 விக்கெட்களைக் கைப்பற்றிய சிராஜ், போட்டி நாயகனாகத் தெரிவாக அதிக விக்கெட்கள் வீழ்த்திய வீரர்களுக்கான ஊதா தொப்பியை கைப்பற்றி இருக்கிறார். இதேபோன்று, டு பிளேசிஸ் 84 ஓட்டங்களை எடுத்து, செம்மஞ்சள் (ஒரேஞ்) தொப்பியை கைப்பற்றி இருக்கிறார்.

இந்நிலையில் முகமது சிராஜ் ஊதா தொப்பி தொடர்பாக ஒரு விசயத்தை பகிர்ந்திருக்கிறார். “ 2016இல் நடைப்பெற்ற ஐ. பி. எல். போட்டியில் புவனேஷ்வர் குமார் ஊதா தொப்பியை வென்றபோது, அவர் சார்பாக அதனை வாங்க நான் சென்றேன். அப்போது நானும் ஒரு நாள் இந்தத் தொப்பியை வெல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டேன். தற்போது இந்த ஊதா தொப்பியை வென்று அதனை என் கையில் வைத்திருப்பது எனக்கு மிகவும் நெகிழ்ச்சியாக இருக்கிறது” என்று கூறியிருக்கிறார்.

# கடைசிக் கட்டம்...!

சேப்பாக்கத்தில் நடைபெற்ற போட்டியில் சன்ரைசர்ஸ் அணியை சென்னை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்தப் போட்டி முடிந்த பிறகு நடந்த பரிசளிப்பு நிகழ்வில் டோனி சில முக்கியமான விசயங்களை பற்றி பேசியிருக்கிறார். குறிப்பாக, டோனி தனது ஓய்வு குறித்தும் சூசகமாகக் கூறியிருக்கிறார்.

வழக்கமான உரையாடல்களைக்கூட தனது புன்னகைமிக்க கேள்விகளால் சுவாரசியமாக மாற்றிவிடும் ஹர்ஷா போக்லே தான் டோனியிடம் கேள்விகளை கேட்டார். அதனாலயே என்னவோ டோனி கொஞ்சம் கூடுதல் மகிழ்ச்சியுடன் பதிலளித்தார். ‘போட்டி முடிந்த பின்னரும் உங்களை பார்க்கத்தான் இவ்வளவு (மக்கள்) கூட்டமும் காத்திருக்கிறார்கள்...”, என டோனியை வரவேற்றார் ஹர்ஷா.

‘எனக்கெல்லாம் சிறந்த பிடியெடுப்பு விருது தரமாட்டீங்களே?’ என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டே பேசத் தொடங்கினார் டோனி, ‘இரண்டு வருடங்களுக்குப் பிறகு போட்டியை நேரில் பார்க்கும் வாய்ப்பை ரசிகர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்தத் தருணத்தில் ரசிகர்கள் முன்பு இப்படி நிற்பதில் பெரும் மகிழ்ச்சி. எனது கிரிக்கெட் வாழ்வின் கடைசிக் கட்டத்தில் இருக்கிறேன். இன்னும் எவ்வளவு காலம் ஆடுகிறேனோ அவ்வளவு காலமும் மகிழ்ச்சியாக அனுபவித்து ஆடுவதே முக்கியம். எனக்கு துடுப்பாட்டம் ஆட பெரிதாக வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், அதைப் பற்றி முறைப்பாடுகூற எதுவும் இல்லை. மற்ற வீரர்கள் மிகச்சிறப்பாக ஆடுகிறார்கள். இந்த ரசிகர் கூட்டம் எனக்கும் அணிக்கும் பெரும் அன்பையும் அரவணைப்பையும் கொடுத்திருக்கிறார்கள்.’ என நெகிழ்ந்தார்.

டோனியின் வயதைப் பற்றி ஹர்ஷா ஒரு கேள்வியை வீச அதற்கு டோனி, ‘ஆம். வயதாகிவிட்டதுதான். அதை ஒத்துக்கொள்வதில் எந்த வெட்கமும் இல்லை. வயது ஏறஏறத்தான் அனுபவமும் ஏறும்’ என்றார்.

இறுதியில் முடித்துவிட்டு செல்லும்போதும் ‘எனக்கெல்லாம் விருது தரமாட்டீங்களே...’ என கலாய்த்தபடியே டோனி விடைபெற்றார்.

(ஐ)



# தமிழ்ப் பிராந்திய செய்தியாளர்களை சர்வதேச ஊடகங்கள் தேடிவரவைத்த முன்னோடி மாணிக்கவாசகம்

**வீரகத்தி தனபாலசிங்கம்**



கடந்த வாரம் வவுனியாவில் பொன்னையா மாணிக்கவாசகத்தின் மறைவு பலதிற ஆற்றலும் ஆளுமையும் தொழில்சார் அர்ப்பணிப்பும் கொண்ட மூத்த ஒரு பத்திரிகையாளரை எம்மிடம் இருந்து அபகரித்துச் சென்றுவிட்டது.

உண்மையில் அவரது மறைவை ஈடுசெய்யமுடியாதது என்பதை விடவும் ஈடுசெய்யப்பட வேண்டியது என்றே கூறவேண்டும். ஊடகத்துறைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல தசாப்தங்களாக பயனுறுதியுடைய மாபெரும் பணியைச் செய்த அவரைப் போன்றவர்கள் எம்மத்தியில் அவசியம்.

நான் மாணிக்கவாசகத்தை முழுப்பெயர் சொல்லி அழைப்பதில்லை. ' மாணிக்கம்' என்றே அழைப்பேன். அவருடனான எனது ஊடாட்டம் 1980 களின் நடுப்பகுதியில் இருந்து தொடங்கியது. 1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு தமிழ் தீவிரவாத இயக்கங்களின் ஆயுதப்போராட்டம் உள்நாட்டுப் போராக மாறத் தொடங்கிய காலப்பகுதியில் தான் அவர் வீரகேசரியின் வவுனியா செய்தியாளராக பணியாற்றத் தொடங்கினார். அதற்கு முதல் அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு தினசரியின் செய்தியாளராக குறுகிய காலம் பணிபரிந்தார் என்று அறிகிறேன்.

அண்மைய வருடங்களாக மாணிக்கம் சுகவீனமுற்றிருந்த போதிலும் தனது வாழ்நாளுடன் வரித்துக் கொண்ட ஊடக சேவையை அவர் கைவிடவில்லை. கைவிடவும் அவரால் முடிந்திருக்காது. சில வாரங்களுக்கு முன்னர் வரை எழுதிக் கொண்டிருந்தார்.

கடுமையாக சுகவீனமுற்றிருந்த கடைசி நாட்களில் கூட மடிக்கணனியைக் கொண்டு வருமாறு கேட்டு ஏதோ ஒரு வேலையை செய்ய அவர் முயன்றதாக மரணமடைவதற்கு ஒரு சில தினங்கள் முன்னதாக அவரைச் சந்தித்த ஊடக நண்பர்களிடம் மனைவி கூறியதாக அறிந்தேன்.

மாணிக்கத்தை வெறுமனே ஒரு செய்தியாளராக மாத்திரம் நோக்கமுடியாது. ஊடகத்துறையின் பல வேறு அம்சங்களிலும் திறமையை வெளிக்காட்டிய அவர் நவீன தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி ஊடகத்துறையில் ஏற்படுத்திய - சில தசாப்தங்களுக்கு முன்னர் கற்பனை கூட செய்து பார்த்திருக்கமுடியாத - மாற்றங்களுக்கு தன்னை மிகவும் எளிதாகவே இசைவாக்கிக்கிக்கொண்டு செய்த பணிக்கு தமிழ் ஊடகத்துறையில் தனித்துவமான ஒரு இடம் இருக்கிறது.

உள்நாட்டுப் போர் தவிர்க்கமுடியாமல் வவுனியா பிரதேசத்துக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்தது. வடக்கின் போர்க்களத்துக்கும் தென்னி லங்கைக்கும் இடையிலான ஒரு 'இடைத் தடுப்பு" வலயமாக விளங்கிய வவுனியா பல வருடகாலமாக உள்நாட்டு செய்தியாளர்களுக்கு மாத்திரமல்ல சர்வதேச செய்தியாளர்களுக்கும் ஒரு கேந்திரமாக மாறியது.

அந்த கேந்திரத்தில் தமிழ் பத்திரிகையின் செய்தியாளராக இருந்த மாணிக்கம் ஒரு பிராந்திய செய்தியாளர் என்ற நிலையில் இருந்து காலம் வேண்டி நின்றதன் பிரகாரம் தன்னை தேசிய பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் மாத்திரமல்ல, சர்வதேச ஊடகங்களுக்கும் மிகவும் தேவையானவராக மாற்றிக்கொள்வதில் காட்டிய திறமையும் துணிச்சலுடனான உழைப்பும் முன்னுதாரணமானவையாகும். அதை தமிழ் ஊடக சமூகம் என்றென்றைக்கும் பெருமையுடன் நினைவுகூரும்.

நம்பகமான போர்ச் செய்திகளுக்கு பெருமளவு ஊடகங்கள் வவுனியாவையும் மாணிக்கத்தையும் நம்பியிருந்த காலகட்டம் ஒன்று இருந்தது. பல சர்வதேச ஊடகங்கள் தேடிவந்து அவரை பணிக்கு அமர்த்தியதை நாம் கண்டோம். குறிப்பாக பி.பி.சி. வெரித்தாஸ் போன்ற சேவைகளில் போர் நிலைவரங்கள் பற்றி மாணிக்கம் என்ன சொல்கிறார் என்பதை கேட்பதற்காக இரவில் வானொலி சாதனங்களுக்கு அருகில் காத்திருந்தவர்கள் ஏராளம்.

மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பற்றிய விபரங்களை மாத்திரமல்ல, குடிமக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புக்களையும் தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை பொருட்படுத்தாமல் வெளியிட்டு தன்னை ஒரு நம்பகமான செய்தியாளராக மாணிக்கம் அன்று நிலைநிறுத்திக்கொண்டார். அந்த காலகட்டத்தில் வீரகேசரி ஆசிரியபீடத்தில் பணியாற்றியவன் என்பதால் அவரின் செய்திப்பணியின் பெறுமதியை முழுமையாக நான் அறிவேன்.

உள்நாட்டுப் போர் வடக்கு, கிழக்கில் கொழும்பு ஊடகங்களின் பிராந்திய செய்தியாளர்கள் பலரை தேசிய மட்டத்திலும் வெளிநாடுகளிலும் தெரிய வைத்தது. அதற்கு முன்னோடியாக அமைந்தவர் மாணிக்கம் எனபதை எவரும் மறுக்கமுடியாது. வவுனியாவின் அன்றைய கேந்திர முக்கியத்துவமே அதற்கு பிரதான காரணமாக இருந்தது என்றாலும் நிலைவரம் வேண்டிநிற்கும் ஆற்றலையும் செயற்துணிச்சலையும் வெளிப்படுத்த முடியாத ஒருவரினால் அதற்கு ஈடுகொடுத்திருக்க முடியாது. மாணிக்கத்திடம் அவை இருந்தன.

போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கில் குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார மற்றும் மனிதாபிமான பிரச்சினைகளை வெளியுலகிற்கு கொண்டுவருவதற்கு மாணிக்கம் பெருவாரியான கட்டுரைகளை எழுதிக் குவித்தார். அவற்றில் தெரிந்தெடுத்த பல கட்டுரைகளை தொகுத்து நூல்களாகவும் அவர் வெளியிட்டார்.

சில வருடங்களுக்கு முன்னர் அத்தகைய நூல் ஒன்றின் வெளியீட்டு விழாவில் மாணிக்கத்தின் அழைப்பின்பேரில் வவுனியாவுக்கு சென்று கலந்துகொண்டேன். அதற்கு பிறகு அவரை ஒரிரு தடவைகள் தான் நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் தொலைபேசியில் அடிக்கடி தொடர்புகொண்டு நாட்டு நிலைவரங்கள், ஊடகத்துறை செயற்பாடுகள் மற்றும் எனது நலன்கள் குறித்து பேசுவதற்கு அவர் தவறியதில்லை. எனது எழுத்துக்கள் குறித்து காய்தல் உவத்தல் இன்றி மாணிக்கம் கருத்துக்களை கூறுவார். அதை நினைக்கும்போது கண்கள் பனிக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் வரை மாணிக்கம் தனது ஊடகத்துறை வாழ்வு குறித்து வீரகேசரியில் தொடர்ச்சியாக எழுதிவந்தார். கடுமையாக சுகவீனமடைவதற்கு முன்னதாக அந்த தொடரை அவர் நிறைவுசெய்தாரோ என்று எனக்கு தெரியவில்லை. அந்த கட்டுரைகள் எல்லாவற்றையும் தொகுத்து அவரது ஊடக வாழ்வை நூல் வடிவில் கொண்டு வரவேண்டியது மிக மிக அவசியமானதாகும். மாணிக்கத்துக்கு செய்யக்கூடிய மிகவும் பொருத்தமான அஞ்சலியாக அமையக்கூடிய அந்த பணியை செய்ய அவர் பணியாற்றிய தமிழ் ஊடக நிறுவனங்கள் அல்லது ஊடகவியலாளர்கள் அமைப்புகள் முன்வரவேண்டும்.

அவரை சில வருடங்களாக நேரில் சந்தித்து பேசும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை என்பது பெரும் கவலை தருகிறது. இனிமேல் அவரிடமிருந்து அழைப்பு வராது என்பது வேதனையை மேலும் அதிகரிக்கிறது. ஆனால், வாழ்வின் யதார்த்தத்துக்கு நாம் முகங்கொடுத்தேயாக வேண்டும். மாணிக்கத்தின் ஊடகப்பணிகளும் எழுத்துக்களும் என்றென்றைக்கும் எம்முடன் உறவாடிக் கொண்டேயிருக்கும்.

இந்த மண்ணில் பிறந்த சகலரையும் மரணம் ஒரு நாள் தழுவத்தான் செய்யும். ஆனால் வாழும் காலத்தில் எமது செயற்பாடுகள் மூலமாக எத்தகைய மரபை நாம் விட்டுச்செல்கிறோம் என்பதே முக்கியமானது. வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுக்கும் அந்த அம்சத்தைப் பொறுத்தவரை மாணிக்கம் வளமான ஒரு மரபை விட்டுச் செல்கிறார். அது குறித்து அவரின் குடும்பத்தவர்களும் ஊடகத்துறை நண்பர்களும் என்றென்றைக்கும் பெருமையடைய முடியும். அன்பு நண்பரே சென்று வாருங்கள்!

மாணிக்கத்தின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

---




## வியுக்தியார் பதில்கள்

**அ.ரவீந்திரன், வதிரி, கரவெட்டி.**

**கேள்வி:** வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு, தொல்பொருள் சின்னங்கள் - மரபுரிமைகள் அழிப்பு, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கு,கிழக்கு தழுவிய கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதே. அப்படியெனில் 26ம் திகதி உங்கள் பத்திரிகை வெளிவராதா?

**வியுக்தியார்:** 25ஆம் திகதி ஈழநாடு அலுவலகமும் மூடப்படுமானால் மறுநாள் பத்திரிகை வெளிவராது தானே என்ற எண்ணத்தில்தான் நீங்கள் இப்படிக் கேட்கின்றீர்கள் என்பது புரிகின்றது. நாங்களும் அலுவலகங்களைப் பூட்டிவிட்டால், கதவடைப்பு நடைபெற்றது என்ற செய்தியைக் கூட வெளியில் கொண்டுபோகமுடியாமல் போய்விடுமே. போராட்டம் நடாத்துவதே அப்படியொரு கதவடைப்பு போராட்டம் நடைபெற்றது என்பதை சொல்வதற்காகத்தானே. அதுவும் செய்தியாக வெளிவராவிட்டால் எதற்குத்தான் போராட்டத்தை நடத்துவது?

---

**பி. காந்தன், களுவாங்சிக்குடி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழுள்ள மாகாண சபை முறைமை ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு வாய்ப்பாகும் என்று ஈழநாடு திரும்பத்திரும்ப எழுதிக்கொண்டிருக்கின்றது. ஆனாலும் அந்த தீர்வை நோக்கி தமிழ் அரசியல்கட்சிகள் ஒரே குரலில் இன்னமும் குரல்கொடுக்கத் தயாராக இல்லை. அதாவது அதனை எமது பிரச்சினைக்கு தீர்வாக ஏற்க தமிழர்கள் தயாராக இல்லை. ஆனால் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தினால் மீண்டும் பாரிய இனக்கலவரம் வெடிக்கும் என்று விமல் வீரவன்ச தெரிவித்திருக்கிறாரே. எதற்காக அவர் இப்படி கூக்குரலெழுப்புகிறார்?

**வியுக்தியார்:** அடுத்த தேர்தலில் அவர் தனித்து போட்டியிட்டால் அரசியலிலிருந்து காணாமலே போய்விடுவார் என்றே தெற்கில் பரவலாக கூறுகின்றார்கள். அவரோ எப்படியும் வென்றுவிடவேண்டும் என்று பார்க்கிறார். தனக்கு வாக்களித்த சிங்கள இனவாதிகளின் வாக்குகளை தொடர்ந்து தக்கவைக்க அவருக்கு வேறு மார்க்கம் இருப்பதாக அவருக்குத் தெரியவில்லையோ என்னவோ.

---

**ஆர். பிரதாப், கோயில்குளம், வவுனியா.**

**கேள்வி:** இலங்கைக்கு சீனா கடன் வழங்கியுள்ளது என்பதற்காக வடக்கு-கிழக்கிலுள்ள காணிகளை அபகரிக்கும் செயல்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளாரே, இனி சீனா காணிகளை அபகரிக்காது என்றே நினைக்கின்றேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:** அவர் எங்கே வலியுறுத்தியுள்ளார். அவர் சீனாவுக்கு உத்தரவு அல்லவா விடுத்திருக்கிறார். இனி காணிகளை அபகரிக்க சீனா பயப்படும் என்றுதான் நினைக்கின்றேன். அவரது எச்சரிக்கையையும் மீறி, இனி வடக்கு கிழக்கில் காணிகளை அரசாங்கம் கொடுத்தாலும் சீனா வாங்காது என்றுதான் நினைக்கின்றேன்.

---

**த. செல்லத்துரை, பொற்பதி வீதி, கொக்குவில்**

**கேள்வி:** '2005 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு கடன்கள் முறையான முதலீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டன. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்கு இறுதி தீர்வாக அமையாது" என்று பொதுஜன பெரமுனவின் செயலாளர் தெரிவித்திருக்கிறாரே. நான் என்னவோ சர்வதேச நாணய நிதியக் கடன் கிடைத்துவிட்டதால் இனி பிரச்சினை இல்லை என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தேன்.?

**வியுக்தியார்:** ஓமோம், அம்பாந்தோட்டையில் முதலிட்ட வெளிநாட்டுக்கடனுக்குத்தான் அம்பாந்தோட்டையையே சீனாவுக்கு எழுதிக்கொடுத்தார்கள். மாத்தளே விமான நிலையத்திற்கு முதலிட்ட கடனுக்கு இன்னமும் வட்டி ஏறிக் கொண்டிருக்கின்றது. இவையெல்லாம்தான் அந்தக் காலப்பகுதியில் செய்யப்பட்ட முதலீடுகள். இந்த முதலீடுகளால்தான் நாடு இன்று இந்த நெருக்கடியில் இருக்கின்றது என்பது அவருக்கு தெரியாததல்ல. நாணய நிதியத்திடம் போவதில்லை என்று அடம்பிடித்தவர்கள் அவர்கள், அப்படித்தானே சொல்லவேண்டும்.

# ‘சின்னம்மாவின் ‘அவர்’

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

சிவா தனது மனைவி கலாவின் சின்னம்மா தேவராணியை அன்று பின்னேரம் சென்று பார்ப்பதாக முடிவு கட்டிய விடயம் அவனது நண்பன் ஒருத்தனின் எதிர்பாராத வருகையால் தடைபட்டுக் கொண்டிருக்கிறது.

வந்திருந்த நண்பனுக்குத் தேனீர் கொண்டு வந்த கலாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைச் சிவா அவதானித்தபோது தர்மசங்கடமாகவிருக்கிறது.கலா, இலங்கைக்கு விடுதலைக்கு வரத்திட்டமிட்ட உடனேயே இந்தத் தடவையாவது தனது சின்னம்மாவைப் போய்ப் பார்க்கவேண்டும் என்ற கோரிக்கையைத் தனது கணவனிடம் மிகவும் அழுத்தமாகச் சொல்லி விட்டாள்.

சிவா தனது குடும்பத்துடன் நீண்ட நாளைக்குப் பின் லண்டனிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கிறான். தனது இளவயதில் சின்னம்மா தன்னை அன்புடன் பார்த்துக் கொண்டதை, கலா பல தடவைகள் அவனுக்குச் சொல்லியிருக்கிறாள். தங்கள் தகப்பன் லண்டனுக்கு வந்த காலத்தில் தங்களுடன் வாழ்ந்த தனது சின்னம்மா கலாவின் இளவயது ஞாபகங்களுடன் இணைந்திருப்பது சிவாவுக்குத் தெரியும்.

கலாவின் தாய் ஓர்ஆசிரியை, அப்போது தங்களைத் தங்கள் சின்னம்மா தனது குழந்தைகள் மாதிரிப் பராமரித்த விடயத்தைக் கலா சிவாவுக்குச் சொல்லும்போது அவள் கண்களின் நீர் கட்டும்.

கலா, இலங்கையின் போர் காலத்தில் பிறந்து வளர்ந்தவள். சாதாரண வாழ்க்கைமுறை தெரியாத அசாதாரண வாழக்கையுடன் வளர்ந்த தமிழ்க் குழந்தைகளில் ஒருத்தி.

இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கை ஒட்டு மொத்தமாக வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் ஊசலாடிக் கொண்டிருந்த கால கட்டமது.போருக்காகப் பல இளவயதுத் தமிழ்க் குழந்தைகளின் எதிர்காலம் சூறையாடப்பட்ட கொடிய நேரமது. உலகம் புரியாத வயதில், எதிரியுடன் போராட துப்பாக்கி தூக்கி இறப்பதை விட அன்னிய நாட்டில் கடினவேலை செய்து பிழைக்க ஓடிவந்தவர்கள் பலர்.

அப்படி வெளியில் தங்கள் பெண்பிளைளைகளை அனுப்ப விருப்பமற்ற அல்லது அனுப்ப வசதியற்ற பல பெற்றோர் தங்கள் இளம் மகள்களை எப்படியும் திருமணம் கொடுத்து ,அவர்கள் போர்முனைக்கு இழுத்துச் செல்லப்படாமல் காப்பாற்றப் பார்த்தார்கள். கலாவின் குடும்பம் அவர்களின் தந்தை வழிச் சொந்தம் வெளிநாட்டில் இருந்ததால் வெளியில் சென்ற முயன்று கொண்டிருந்தார்கள்.ஆனால் கலாவின் தாயின் குடும்பத்தில் வெளிநாட்டில் அப்போது யாரும் இருக்கவில்லை.

அதனால் கலாவின் சின்னம்மா, தேவராணிக்குப் பதினெட்டு வயதாக இருக்கும்போது அவளுக்குத் திருமணம் நடந்ததாம். தேவராணியின் மேற்படிப்பு படிக்க வேண்டும், டாக்டராக வரவேண்டும் என்ற ஆசை தவிடுபொடியானது.

இலங்கை அரசாங்கம் ஒரு பக்கம், விடுதலைப் புலி ள் இன்னொரு பக்கம் ‘இயக்கப்’ பிரச்சினைகளைக் காரணம் காட்டி தமிழ் இளைஞர்களை வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள்.

தேவராணியின் கணவர்,அவர்களுக்குத் தூரத்து உறவினரான மாதவன் என்ற இருபத்தி ஐந்து வயது ஆசிரியர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இயக்கத்துடன் தொடர்பிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு பாடசாலையிலிருந்து வீடு திரும்பும்போது கொலை செய்யப்பட்டார்கள். அப்போது தேவராணிக்குப் பத்தொன்பது வயது. வயிற்றில் மூன்று மாதக்குழந்தை. கண்மூடித் தியப்பற்குள் ஒரு தமிழ் உயிர் குண்டடிபட்டுத் தெருவில் சுருண்டு விழுந்தது. தேவராணி விதவையாக்கப் பட்டாள்.

அதன் பின் தேவராணி தனது தமயன்,தமக்கையின் உதவியில் வாழ்ந்ததாகவும் அவளின் மகனுக்குப் பதினெட்டு வயதாக இருக்கும்போது வெளி நாட்டில் வாழும் ஒரு மாமாவின் உதவியுடன் அவன் சென்று விட்டதாகவும்,சின்னம்மா தனியாக வாழ்வதாகவும் கலா அவனுக்குச் சொல்லியிருக்கிறாள்.

சிவாவுக்கு இந்தக் கதையெல்லாம் அவன் மனைவி சொல்லக் காரணம் என்னவென்றால்,அவனும் கலாவும் உறவினர்களல்லர். ஒருத்தரின் குடும்பத்தினரை மற்றக் குடும்பத்திற்குத் தெரியாது. அவனின் குடும்பம் லண்டனிலிருக்கிறது.அவளின் குடும்பம் ஸ்கொட்லாந்தில் இருக்கிறது.அத்துடன் அவர்கள் இலங்கையின் வெவ்வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள்.

கலா ஸ்காட்லாந்திலிருந்து லண்டனுக்குப் படிக்க வந்தவள். சிவாவை லண்டனில் அவளுடன் படிக்கும் சினேகிதியின் பிறந்த தின விழாவில் சந்தித்த தொடர்பால் காதல் பிறந்தது. வளர்ந்தது. அவர்களின் பெற்றோர்களான இரு வீட்டாரும் இதை எதிர்பார்த்தார்களா என்பதை அவர்கள் பெரிதாக ஆய்வு செய்து கொண்டிருக்கவில்லை.

தாங்கள் இருவரும் திருமணம் செய்துகொள்ளப் போகிறோம் என்ற தங்கள் விருப்பத்தை இருவீட்டாருக்கும் அறிவித்தார்கள்.’எந்த ஊர்?’ (என்ன சமயம் என



அறிந்து கொள்ள உதவும் கேள்வியது.) ‘ஊரில் எந்தப் பகுதி?’(சாதியைத் தெரிந்து கொள்வதற்கான கேள்வி அது) என்ற கேள்விகள் கலா வீட்டாரிடமிருந்து வந்தபோது,’அவன் இலங்கைப் பூர்வீகத்தைக் கொண்ட தமிழ்ப் பையன்’என்று கலா தனது தாய் தகப்பனுக்குச் சொன்னாள்.

ஏனென்றால் ‘ நாங்கள் பார்க்கும் மாம்பிள்ளையை நீ செய்தால் சந்தோசப் படுவோம். அப்படியில்லை என்றால்,எப்படியும் எங்கள் மொழி பேசும் பையனைப் பார்’ என்று தாய் தகப்பன் அவளிடம் சாடையாக வற்புறுத்திச் சொல்லி வைத்திருந்தார்கள். அவள் ஒரு கறுப்பனையோ,வெள்ளையனையோ காதலித்திருந்தால் அவர்களால் அதைத் தாங்க முடியாது என்றும் வெளிப்படையாகச் சொல்லியிருந்தார்கள்.

அவனின் குடும்பம் அவனிடம்’ நீ சந்தோசமாகவிருந்தால் அதுபோதும்.அதற்கேற்றாற்போல் ஒரு துணையைப் பார்’ என்று சொல்லி விட்டார்கள்.அவனின் தகப்பன் பகுத்தறிவுவாதி,மகனுக்குத் தன் எதிர்காலத்தைக் கொண்டு நடத்தும் அறிவைச் சொல்லிக் கொடுத்திருந்தார்.

லண்டனில் அவர்களின் திருமணம் நடந்ததால் அவர்களுடைய ஒட்டு மொத்தச் சொந்தங்களும் திருமணத்திற்கு வரமுடியவில்லை இருவரினதும் குடும்பங்களும் பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் மாதிரி,இலங்கை கனடா, ஐரோப்பா லண்டன் என்று பல நாடுகளில் சிதறி வாழ்கிறார்கள்.

அவர்களுக்குத் திருமணமான காலத்தில் இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்தது.அதன் பின் சிவா தனது மேல்படிப்பு காரணமாக சில வருடங்கள் பெரிய பிரயாணங்களைத் தவிர்த்தான்.அதன்பின் அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தன.

இப்போது இலங்கை வந்தபோது, கலா யாழ்ப்பாணத்திலுள்ள தனது உறவினர்களைப் பார்க்கப் போவது அவளுக்கு மிக முக்கியமான விடயமாகவிருந்தது. இருவரும் இளவயதில் இலங்கையை விட்டுப் போனவர்கள். ஆனால் அவர்களின் குடும்பங்கள் இலங்கையின் பல இடங்களிலும் இருக்கிறார்கள்.

சிவா, இலங்கைத் தலைநகர் கொழும்பு நகரில் பிறந்து வளர்ந்தவன். சிவா சிறு வயதில் தனது உறவினர்களைப் பார்க்க யாழ்ப்பாணம் சென்றிருக்கிறான். ஆனாலும் யாழ்ப்பாணம் அவனுக்கு அவ்வளவு பரிச்சயமில்லை.

இப்போது அவர்கள் யாழ்ப்பாணத்தில் கலாவின் தகப்பனின் சொந்தக் காரர் வீட்டில் தங்கியிருக்கிறார்கள்.லண்டனிலுள்ள சிவாவின் லண்டன் சினேகிதனும் விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்து நிற்கிறான். இன்று சிவாவைப் பார்க்கவந்தான். பேசிக் கொண்டிருந்ததால் சின்னம்மா வீட்டுக்குப் பின்னேரம் போக வேண்டியது தடைப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்திற்கு அவன் கலாவின் சின்னம்மாவைப் பார்க்க முடியாததால்,கலாவின் முகத்தில் கோபம் படர்ந்து விரிந்திருந்தது. கலா எதையும் சரியான நேரத்திற்குச் செய்யும் பெண்.வெளிநாட்டில் வாழ்வதால் வரும் பல நல்ல பழக்க வழக்கங்களில் அதுவும் ஒன்று. ஒரு இடத்திற்குச் சொன்ன நேரத்திற்குப் போகாவிட்டால் அது அவர்களை அழைத்தவர்களை அவமானம் செய்வது என்று கருத்தாகும்.

‘கலா டார்லிங் ஐயம் சாரி, உனது சின்னம்மாவுக்கு நாங்கள் ஏன் குறிப்பிட்ட நேரத்திற்கு வரமுடியவில்லை என்று சொன்னால் புரிந்து கொள்வார் இல்லையா?’ சிவா குற்ற உணர்வுடன் முணுமுணுத்தான்.

‘உங்களுக்கு எனது சின்னம்மாவைத் தெரியாது’ அவள் பட்டென்று சொன்னாள்.

‘ ஆமாம் இதுவரையும் உனது சின்னம்மாவை நான் காணவில்லை என்று உனக்குத் தெரியும்தானே’ அவனுக்கு இப்போது கோபம் வரத் தொடங்கியது.அவன் வேண்டுமென்றே நேரத்தைத் தவறவிடவில்லை என்று அவளுக்குத் தெரியும்,ஆனாலும் அவனிடம் அவள் கோபப் படுவது நியாயமாகப் படவில்லை.

கலாவுடன் தர்க்கம் செய்யாமல் தனது பார்வையை அவர்கள் சென்ற வழி நெடுகவிருந்த வானம் பார்த்த பனை, தென்னை மரங்களிலும்.கொத்தாகத் தொங்கும் மலர்க் கொடிகளிலும் தவழவிட்டான்.

இலங்கையில் போர் முடிந்து பல ஆண்டுகள் முடிந்து விட்டன. ஆனாலும் இடிந்த வீடுகளும்,மதில்களும் போரின் வடுக்களைத் தாண்டி ஆங்காங்கே தென்பட்டன.

யாழ்ப்பாண நகரத்தில் தங்கி நிற்கும்போது முடிந்தவரை நடந்து சென்றுதான் கலாவின் உறவினர்களைப் பார்ப்பேன் என்று அவன் சொல்லியிருந்தான்.யாழ் நகரின் இயற்கை. செயற்கை அழகை அவசரமான வாகன ஓட்டத்தில் தவறவிட அவன் தயாராகவில்லை. அவனின் சிறுவயதில் யாரோ ஒரு சொந்தக்காரரின் திருமணத்திற்கு யாழ்ப்பாணம் வந்தது ஞாபகமிருக்கிறது. அப்போது,யாழ்ப்பாணத்தின் மரங்கள், பூக்கள்,செடிகொடிகள் அவனைக் கவர்ந்து விட்டன.

இலங்கையின் பெரிய நகரான கொழும்பு நகரின் ஆரவாரம்,அவசரம், இடைவிடாத சத்தங்கள் என்பன யாழ் நகரிற் கிடையாது பெரும்பாலான குடியிருப்புக்களில் அமைதி நிலவும்.

அழகிய மாலைநேர இளம் தென்றல் பண்ணைக் கடற்கரைதாண்டி வந்து அவர்களின் கன்னங்களில் முத்தமிட்டுச் சென்றது. அவ்வப்போது சில வாகனங்கள் அவர்களைக் கடந்து சென்றன.

கலா அவனுடன் பேசாமல் விறுவிறுவென்று நடந்து கொண்டிருந்தாள் அவளின் கோபம் அவனுக்கு அளவுக்கு மீறியதாகவிருந்தது. அவளின் மௌனம் எரிச்சலையுண்டாக்கியது.

‘வட் இஸ் த மட்டர் கலா? நான் வேண்டுமென்றே நேரம் கடத்திமாதிரி கோபப் படுகிறாய’அவன் அவளைக் கோபத்துடன் கேட்டான்.

‘நாங்கள் போன தடவை வந்தபோது சின்னம்மாவைப் பார்க்க முடியவில்லை என்பதால் அவர் பட்ட துக்கம் எனக்குத் தெரியும்’ கலா தனக்குள் பேசுவது மாதிரி சொல்லிக் கொண்டாள்.

‘கலா போனதடவை எங்களால் யாழ்ப்பாணம் வர முடியவில்லையே’ அவனுக்குக் கலாவைப் புரியவில்லை.

‘உங்களுக்குச் சின்னம்மாவைத் தெரியாது’ அவள் எரிந்து விழுந்தாள்.

சிவா தனது மனைவியின் சின்னம்மாவை நேரில் பார்த்தது கிடையாது. பழைய படங்களில் கண்டிருக்கிறான். அந்தப் படங்களில் இளமையும் மிகவும் அழகானதுமான ஒரு இளம் பெண்ணின் சோகம் கவிழ்ந்தமுகம் அவனைத் துன்பப் படுத்தியது.தேவராணி பத்தொன்பது வயதில் விதவையாகியவள்.அதன பின்னர் தனது மகனுக்காக உழைத்து வாழ்ந்தவள். குடும்பத்திலுள்ள பெரும்பாலனவர்கள் தங்கள் உயிரைப் பாதுகாக்க வெளிநாடுகளுக்குச் சென்றபோது’அவருடன் வாழ்ந்த வீட்டை’ விட்டு விலகமாட்டேன் என்ற பிடிவாதத்துடன் அந்தப் பழைய வீட்டில் தனிமையாக இன்னும் வாழ்பவள்.

அவளின் வாழ்க்கையின் முதுமை எட்டிப் பார்க்கிறது. வெளிநாட்டிலிருக்கும் மகன் எவ்வளவோ கெஞ்சியும் ‘அவருடன் வாழ்ந்த’ வீட்டை விட்ட அகலமாட்டேன் என்று பிடிவாதமாகவிருப்பவள்.இப்படியான விடயங்களைத்தான் கலா தனது சின்னம்மா பற்றிச் சொல்லியிருந்தாள். அதற்குமேலாக அவனுக்கு எதுவும் தெரியாது. ‘எனக்குத் தெரியாத விடயங்களை நீ சொல்லியிருக்கலாமே’ அவன் முணுமுணுத்தான்.

‘இலங்கையில் நடந்த போருக்கு முன்னாலே உங்கள் குடும்பம் வெளியில் போய்விட்டது.நாங்கள் போர் நடந்துகொண்டிருந்தபோது நாட்டைவிட்டுப் போய் விட்டோம். ஆனால் ஆரம்பத்திலிருந்து போரையும் துயரையும் தவிர எதையும் காணாத சின்னம்மா போன்றவர்களின் துக்கத்தையோ மனச்சிக்கல்களையோ உங்களால் புரிந்து கொள்ளமுடியாது’ கலாவின் குரல் மிகவும் கலங்கிப்போயிருந்தது.

கலா அவளின் கைகடிகாரத்தில் நேரத்தைப் பார்த்துக்கொண்டாள். ‘ஆட்டோ எடுத்துக் கொண்டு வந்திருக்கலாம்’ கலா தர்மசங்கடத்துடன் சொன்னாள். யாழ்ப்பாணத்தில் அவர்கள் தங்கியிருக்கும் சொந்தக் காரர் விட்டுக்கும் சின்னம்மா தேவராணி வீட்டிற்கும் இருபது நிமிட நடைதான் என்று அவள் சொல்லியிருந்தாள்.

நேரம் மங்கத் தொடங்கியது. கலா கிட்டத்தட்ட ஓட்டமும் நடையுமாகச் சென்றாள். ‘கலா ஏன் இந்த அவசரமான நடை. நாங்கள் அங்கு வருவதாகச் சொன்ன நேரத்தைவிடச் கொஞ்ச நேரம் பிந்திப் போகிறோம், அதற்கான காரணத்தைச் சொன்னால் எனது சின்னம்மா கோபிக்கமாட்டார்’ அவன் அவளைச் சமாதானம் பண்ணும் தொனியிற் சொன்னான்.

அவள் பட்டென்று திரும்பினாள்.

(அடுத்த வாரமும் வரும்)

# கொடூரமான ஆர்மேனிய இனப்படுகொலை: துருக்கி ஒட்டோமான் அரசின் இனஅழிப்பு !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆர்மேனிய இனப்படுகொலையை ஏப்ரல் 24 அன்று உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக் கான ஆர்மேனியர்கள் இறந்த தங்கள் மூதாதையர்களின் இழப்பை நினைவு கூர்ந்து மதிக்கிறார்கள். ஆர்மேனிய இனப்படுகொலை இந்த நூற்றாண்டின் மிக கோரமான கொடூரங்களில் ஒன்றாகும். ஒரு நூற்றாண்டு கடந்தும் அட்டூழியங்களால் ஏற்பட்ட வடுக்கள் அழுத்தமாக பதிந்துள்ளது.



இந்த கொடூர சம்பவத்தை உலகமே இனப்படு கொலை என்று கூறியபோது, துருக்கி அதனை கடுமை யாக எதிர்த்து வருகிறது. ஆர்மேனிய இனப்படுகொலை இந்த நூற்றாண்டின் மிக கோரமான கொடூரங்களில் ஒன்றாகும். ஒரு நூற்றாண்டு கடந்தும் அட்டூழியங் களால் ஏற்பட்ட வடுக்கள் அழுத்தமாக பதியப்படுத்தப் பட்டுள்ளது.

ஒட்டோமான் படைகளால், திட்டமிட்ட வகையில், 15 லட்சம் ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டதாக ஆர்மீ னிய வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும், ஏப்ரல் 24 அன்று உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ஆர்மீனியர்கள் ஆர்மேனிய இனப்படுகொலை என்று அழைக்கப்படும் பயங்கரமான நிகழ்வில் இறந்த தங்கள் மூதாதையர்களின் இழப்பை நினைவு கூர்ந்து மதிக்கிறார்கள்.

இந்த இரத்தக்களரி நிகழ்வின் பின்னர் ஆர்மேனிய இனப்படுகொலையை உலகின் பல நாடுகள் அங்கீகாரம் அளித்தாலும், ஆர்மேனிய இனப்படுகொலையை இன்னமும் பல நாடுகள் அங்கீகரிக்க தயங்குகின்றன.

### ஆர்மேனிய இன அழிப்பு

பெரும் படுகொலைகளாகவும், சாவுக்கு இட்டுச் சென்ற வெளியேற்றங்களாகவும் இது நிகழ்ந்தது. இதில் ஒன்றரை மில்லியன் ஆர்மேனியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இக்காலப் பகுதியில் ஆர்மேனியர்களைத் தவிர அசேரியர்கள், மற்றும் கிரேக்கர்களும் ஒட்டோமான் பேரரசினால் படுகொலை செய்யப்பட்ட னர்.

இவ்வினப்படுகொலை 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் நாள் ஆரம்பமாகியது. இந்நாளில் முதலாவதாக ஆர்மேனியக் கல்விமான்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் 250 பேரை ஒட்டோமான் இராணுவத்தினர் கொன்ஸ்டண்டீனப்போல் நகரில் கைது செய்தனர்.

அதன் பின்னர் ஒட்டோமான் இராணுவத்தினர் ஆர்மீனியப் பொதுமக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றி பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பாலைநிலத்துக்கு (தற்போதைய சிரியா) நடைப்பயணமாக அழைத்துச் சென்றனர். அவர்களுக்கு உணவோ, நீரோ வழங்கப்படவில்லை. வயது, மற்றும் பால் வேறுபாடின்றிப் பலர் படுகொலை செய்யப்பட்ட னர்.

பெரும்பான்மையான ஆர்மேனியர்கள் புலம்பெயர்ந்து பல நாடுகளில் வசிப்பது இப்படுகொலைகளில் இருந்து தப்பியவர்களே.

இருபதாம் நூற்றாண்டில் முதல் இனப்படுகொலை ஒட்டோமான் பேரரசின் பின்னர் ஆட்சிக்கு வந்த துருக்கிக் குடியரசு இந்நிகழ்வை இனப்படுகொலை எனக் கூறுவதை மறுத்து வருகிறது. அண்மைக் காலத்தில், இந்த இனப்படுகொலைகளை அங்கீகரிக்கப் பல நாடுகளும் அமைப்புகளும் துருக்கியைக் கோரி வருகின்றன. இது வரையில் 20 நாடுகள் இக்காலப்பகுதியில் இடம்




பெற்ற படுகொலைகள் இனப்படுகொலைகளே என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் நடந்த இனப் படுகொலையை அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 29 அக்டோபர் 2019 அன்று ஏற்றுக் கொண்டது.

### ஆர்மேனிய இனப்படுகொலை பின்னணி

பதினைந்தாம் நூற்றாண்டு முதல், ஒட்டோமான் சாம்ராஜ்யத்திற்குள்ளேயே, ஆர்மேனிய இனத்தவர்கள் ஒரு குறிப்பிடத்தக்க சிறுபான்மை மக்கள் குழுவாக வாழ்ந்தனர். சுன்னி முஸ்லீம்கள் இருந்த ஒட்டோமான் துருக்கிய ஆட்சியாளர்களைப் போலன்றி, ஆர்மேனியர்கள் பழமைவாத கிறிஸ்தவர்கள் ஆவார். அக்காலத்தில் ஆர்மேனிய குடும்பங்கள் கடும் வரி விதிப்புக்கு உட்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒட்டோமான் ஆளும் சக்தி மற்றும் கலாச்சாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், வெவ்வேறு மதங்களின் உறுப்பினர்களுக்கிடையேயான உறவுகள் மோசமடையத் தொடங்கியது.

பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகியவற்றின் அழுத்தத்தை எதிர்கொண்ட ஒட்டோமான் அரசாங்கம் அதன் கிறிஸ்தவ பகுதிகளை கையாளுவதற்கு அழுத்தம் அதிகரித்தது. அத்துடன் இந்த விஷயங்களை மோசமாக்குவதற்கு, மற்ற கிறிஸ்தவப் பகுதிகள் முற்றிலுமாக பேரரசை விட்டு விலகிப்போயின.

குறிப்பாக கிரேக்கம், பல்கேரியா, அல்பேனியா, செர்பியா இனத்தவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபதுகளில் ஒட்டோமான் கட்டுப்பாட்டிலிருந்து பிரிந்து சென்றனர்.

ஆயினும் ஆர்மேனிய மக்கள் 1870களில் பாரிய முறையில் கடுமையான ஒட்டோமான் ஆட்சியின் கீழ் அமைதியற்றவர்களாகிவிட்டனர். ஆர்மீனியர்கள் ரஷ்யாவைப் நோக்கி செல்ல ஆரம்பித்தார்கள்.

இதன்பின்னர் அவர்கள் பல அரசியல் கட்சிகள் மற்றும் சுய பாதுகாப்புக் கழகங்களை உருவாக்கினர். ஒட்டோமான் சுல்தான் அப்துல் ஹமீத் கிழக்கு துருக்கியில் உள்ள ஆர்மேனிய பகுதிகளில் வேண்டுமென்றே வன்முறையை தூண்டியதுடன், வரிகளை உயர்த்தினான்.

1894-96 ஆம் ஆண்டில் ஹமிடான் படுகொலைகளில் உச்சக்கட்டத்தை அடைந்தன. அதில் 300,000 ஆர்மேனியர்கள் இறந்தனர்.

### ரெட் சண்டே தூக்குமேடை

கான்ஸ்டான்டிநோபில், ஒட்டோமான் அரசாங்கம் ஏறக்குறைய 250 ஆர்மேனிய தலைவர்களும் புத்திஜீவிகளும் ஏப்ரல் 23 மற்றும் 24, 1915 அன்று கைது செய்தது. அவர்கள் தலைநகரிலிருந்து நாடு கடத்தப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டனர். இது ரெட் சண்டே சம்பவம் என்று அழைக்கப்படுகிறது.

அத்துடன் அந்த நேரத்தில் காலபோலியில் படையெடுத்து வந்த நேச நாடுகளின் சக்திகளுடன் தொடர்பு படுத்து ஆர்மேனியர்களை குற்றம்சாட்டி பலர் தூக்கிலிடப்பட்டனர்.

1915 மே 27 ஆம் தேதி ஒட்டோமன் பாராளுமன்றம் தெஹ்ரிக்கர் சட்டத்தை நிறைவேற்றியது, நாடு தழுவிய முழு இன ஆர்மேனிய மக்களை கைது செய்தல் மற்றும் நாடுகடத்தலுக்கு அனுமதித்தது.

### ஆர்மேனிய இனப்படுகொலை

துருக்கிய படையால் நூறாயிரக்கணக்கான ஆர்மீனியர்கள் சிரிய பாலைவனத்தில் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றனர். உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் பலர் இறந்தும் விட்டனர்.

சிரியாவிற்கும் ஈராக்கிற்கும் இடையே துருக்கிய எல்லைகளைச் சுற்றி, தொடர்ச்சியான 25 சித்திரவதை முகாம்களில் புல், மூலிகைகள், வெட்டுக்கிளிகளையே சாப்பிட்டனர்.


அங்கே மரண விகிதம் பட்டினி மற்றும் நோய் இருந்து மிகவும் அதிகமாக இருந்தது.

இறுதியில், 600,000 முதல் 1,500,000 வரையான ஆர்மேனியர்கள், பஞ்சம், பட்டினியால் இறந்தனர். ஆயினும் துருக்கி அரசாங்கம் இதனை பதிவு செய்யவில்லை. அதனால் பாதிக்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கை அறியப்படவில்லை. ஆயினும் ஜேர்மனிய தரவுப்படி துணை கான்ஸல் மேக்ஸ் எர்வின் வான் ஸ்க்புப்னெர் ரிக்ட்டர் 1,000,000 ஆர்மீனியர்களை படுகொலை செய்ததாக மதிப்பிட்டுள்ளார்.

### இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்ற விசாரணை

ஒட்டோமான் சாம்ராஜிய படுகொலைகளுக்கு பொறுப்பாளர்களை ஒப்படைக்கும்படி செவ்ரெஸ் உடன்படிக்கையில் (1920) நேச நாடுகள் கோரின. பல ஒட்டோமான் அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் நேச நாட்டு சக்திகளிடம் சரணடைந்தனர். அவர்கள் மூன்று வருடங்களாக மால்டாவில் விசாரணை செய்யப்பட்டனர்.

போலந்தில் 1943 இல், சட்டப் பேராசிரியரான ரபேல் லெம்மிக், ஆர்மேனிய இனப்படுகொலை பற்றிய ஒரு விளக்கத்தினை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். ஆர்மேனிய இனப்படுகொலை இன்று 20 ஆம் நூற்றாண்டின் மிக கொடூரமான கொடூரங்களில் ஒன்றாகும், இந்த நூற்றாண்டின் கோர வடுக்கள் நிறைந்த அட்டூழியங்களால் பதியப்படுத்தப்பட்டுள்ளது.






## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்

# ரூ.8,000 கோடி லஞ்சம் பெற்ற சிங்கள இலங்கையர் யார்?

## அரசிடம் கோருகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, ஏப். 23

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் கடன் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச சட்டத்தின் பிரகாரம் வழக்கு தாக்கல் செய்ய இன்னும் 27 நாட்கள் மாத்திரமே மிகுதியாக உள்ளன. வழக்கு தாக்கல் செய்வதைத் தடுப்பதற்கு 8,000 ஆயிரம் கோடி ரூபா இலஞ்சம் பெற்ற சிங்கள இலங்கையர் யார் என்பதை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2021 ஆம் ஆண்டு மே மாதம் நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தற்போதைய பிரதான பேசு பொருளாக காணப்படுகிறது. இந்த கப்பல் விபத்தினால் சமுத்திர வளங்களுக்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் ஆராய்ந்து நட்டஈடு மதிப்பீடு செய்ய நியமிக்கப்பட்ட குழுவினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

கப்பல் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து 6.4 பில்லியன் டொலர் நட்டஈடு பெற்றுக் கொள்ள முடியும் என துறை சார் நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். வழக்கு தாக்கல் செய்து நட்டஈடு பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை தடுப்பதற்காக சிங்கள இலங்கையர் ஒருவருக்கு 250 மில்லியன் டொலர் அதாவது இலங்கையின் நாணய அலகின் பிரகாரம் 8,000 கோடி ரூபா இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக நீதிய மைச்சர் விஜயதாஸ குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்தி தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ள 2.9 பில்லியன் டொலரை காட்டிலும் இந்த கப்பல் நிறுவனத்திடமிருந்து 6.4 பில்லியன் டொலரை பெற்றுக்கொள்ள அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

8,000 கோடி இலஞ்சம் பெற்ற நபர் யார் என்பதை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும். நாட்டை சீரழித்து ஒரு தரப்பினர் இலாபம் பெறுவதை தேசத் துரோக செயற்பாடாக கருதவேண்டும்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்கு கப்பலில் இருந்த 7,480 கொள்கலன்கள் கடலுக்குள் மூழ்கியுள்ளன. இதனால் இயற்கை வளங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான 80 ஆயிரம் மெற்றிக் தொன் இரசாயனப் பதார்த்தங்கள் கடலுக்குள் சேமிக்கப்பட்டுள்ளன. அவற்றில் இருந்து 1,400 மெற்றிக்தொன் மாத்திரமே கரையொதுங்கியுள்ளன. மிகுதி இரசாயன பதார்த்தங்கள் இலங்கையின் கடல் வளத்துக்கு அழிவை ஏற்படுத்த கடலுக்குள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

கப்பல் விபத்தினால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச சட்டத்தின் பிரகாரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு இன்னும் 27 நாட்கள் மாத்திரமே மிகுதியாக உள்ளன.

சம்பவம் இடம்பெற்று இரண்டு வருடங்கள் நிறைவு பெற்றதன் பின்னர் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. பேராசிரியர்களின் சொத்துக்களை அரசுடமையாக்குவதாக அச்சுறுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விவகாரத்தில் சட்டத்தின் பிரகாரம் வழக்கு தாக்கல் செய்ய விசேட கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (அ)

# நலன்புரி கொடுப்பனவு ஜூலை முதல் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 23

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு, தேசிய கொள்கைகள் அமைச்சு இதனை தெரிவித்துள்ளது.

வறுமையானவர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் உள்ளடங்கலாக நான்கு பிரிவுகளின் கீழ் இந்த நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, பாதிப்பிற்குள்ளானோருக்கான பிரிவில் 4 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 2,500 ரூபா கொடுப்பனவு ஜூலை முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது.

குறிப்பிடத்தக்க அளவு பாதிப்பிற்குள்ளானோருக்கான பிரிவில் 4 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது.

வறியோருக்கான பிரிவில் 8 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 8, 500 ரூபா வீதம் 3 வருடங்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மிகவும் வறுமைக்குள்ளானோருக்கு 4 இலட்சம் குடும் பங்களுக்கு மாதாந்தம் 15,000 வீதம் 3 வருடங்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அத்துடன், உதவி பெறுகின்ற மாற்றுத் திறனாளிகள், சிறுநீரகக் கொடுப்பனவு பெறுவோர் ஆகியோருக்கு மாதாந்தம் மேலதிகமாக 5,000 ரூபாவும், முதியோருக்கான கொடுப்பனவை பெறுவோருக்கு மாதாந்தம் மேலதிகமாக 2 ,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த நலன்புரி கொடுப்பனவுகளுக்காக 37 இலட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. (அ)






# ஜே.வி.பியின் வெற்றிநடைக்கு அஞ்சியே தேர்தல் ஒத்திவைப்பு

## சுட்டிக்காட்டுகிறார் ரில்வின் சில்வா

கொழும்பு, ஏப். 23

எதிர்காலத்தில் ஆட்சியைப் பிடிப்போம் என்ற நம்பிக்கை எமக்குண்டு என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

சிறிலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளின் வேலைத்திட்டத்துக்கு எதிரான விசாலமான வேலைத்திட்டம் தேவை என்பதால் நாம் தேசிய மக்கள் சக்தியை உருவாக்கியுள்ளோம்.

அடுத்து ஆட்சியை அமைக்கும் திட்டத்தில் நாம் இருப்பதால் இந்தப் பிரதான கட்சிகள் எவற்றுடனும் நாம் சேரப் போவதில்லை.



பிரதான இரண்டு கட்சிகளும் தேவை இல்லை என்ற நிலைப்பாட்டுக்கு மக்கள் வந்துவிட்டனர். எமது கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவரும் நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர். இதனால்தான் அரசு தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கின்றது. எதிர்காலத்தில் ஆட்சியைப் பிடிப்போம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இந்தப் பொருளாதார பிரச்னையின்போது எங்களின் ஆட்சி இருந்திருந்தால் கடன் வழங்கிய நாடுகளுடன் பேசி கடன் செலுத்துவதைச் சற்றுப் பின்னுக்குப் போட்டு கொஞ்சம் கடனைப் பெற்றுக் கொண்டு டொலர் சம்பாதிக்கும் உற்பத்தி பொருளாதாரத்துக்குச் சென்றிருப்போம்.

சீனாவும் இந்தியாவும் கடன் தருவதற்கு இருந்தன. இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என்று அரசு அறிவித்ததால் அந்தக் கட னைப் பெற முடியாமல் போனது. அதனால் இறுதியில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் காலடியில் விழுந்து பிச்சை எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. - என்றார். (அ)

# ஒட்டுசுட்டானில் கடும் காற்று வீடுகள் சில சேதமடைந்தன!





முல்லைத்தீவு, ஏப். 23

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீசிய கடும் காற்றினால் நேற்று முன் தினமும் வீடுகள் சில சேதமடைந்துள்ளன.

கடந்த 20ஆம் திகதி மாலை ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட முத்துஜயன்கட்டு கிராம அலுவலர் பிரிவில் ஜீவநகர் மாதிரி கிராமத்தில் வீசிய கடும் காற்றினால் வீடுகள் சில சேதமடைந்தன.

இந்நிலையில் நேற்று முன் தினம் மாலை வீசிய காற்றினால் முத்துஜயன்கட்டு - முத்துவிநாயகபுரம் பகுதியில் மேலும் பல வீடுகள் சேதமடைந்துள்ளன

நேற்று முன்தினம் மாலை கடும் காற்றுடன் மழையும் பெய்தது. கடும் காற்றினால் வீடு ஒன்றின் கூரையில் பொருத்தப்பட்டிருந்த 12 சீற்கள் தூக்கி வீசப்பட்டதுடன் வீடு சேதமடைந்தது.

முத்துவிநாயகபுரம் பகுதியில் வசித்து வரும் தனபால சிங்கம் வசந்தாதேவி என்பவரின் வீடே இவ்வாறு காற்றினால் சேதமாகியது.

இதேவேளை, கிராமத்தில் உள்ள மேலும் சில வீடுகள் சேதமடைந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

கூரை ஓடுகள் தூக்கிவீசப் பட்டுள்ளதுடன் தற்காலிக கொட்டிலில் வசித்துவரும் குடும்பம் ஒன்றின் வீடும் காற்றினால் சேதமடைந்துள்ளது.

கடந்த நாட்களாக கடும் வெப்பம் நிலவிய நிலையில் இரண்டு தினங்களாக குறித்த பகுதியில் கடும் காற்றுடன் மழையும் பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# கத்தோலிக்க மக்களுடன் நாம் துணை நிற்கிறோம்

## முஸ்லிம் கவுன்சில் அறிக்கை

கொழும்பு, ஏப். 23

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலினால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மக்களுடன் ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் இலங்கை முஸ்லிம் மக்கள் நிற்பதாக சிறிலங்கா முஸ்லிம் கவுன்சில் தெரிவித்துள்ளது.

அரசியல் ரீதியாக தூண்டப்பட்ட வன்முறைச் சம்பவமாக பலரும் நம்புகின்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை வலியுறுத்தி கத்தோலிக்க தேவாலயங்களுடன் முஸ்லிம்களும் துணை நிற்பதாக சிறிலங்கா முஸ்லிம் கவுன்சில் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதில் ஜனாதிபதியாக செயற்பட்ட சந்தர்ப்பத்தில், 2022 ஜூலை 18 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கைக்கு அமைய, ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிஸாருடன் இணைந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளை நிறைவு செய்யவேண்டும் என முஸ்லிம் கவுன்சில் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலில் கொல்லப்பட்ட, காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு அவர்களின் இனம் மற்றும் மதத்தைப் பாராது உடனடியாக நீதியையும் நட்டஈட்டையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நான்கு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள் தொடர்பான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு பிணை வழங்கப்படவோ விடுதலை செய்யப்படவோ வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# செய்திகளை ஆக்கிரமிக்கும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட விசாரணைகளின் படி உயிருடன் இருக்கும் போதே அவற்றின் மூளைகளை உண்பதற்காகவே குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதிசெய்ய திட்டமிடப் படுவதாகவும் இந்த திட்டத்தின் பின்னணியில் தெங்கு அபிவிருத்தி சபையின் உயரதிகாரி ஒருவரின் மனைவி இருப்பதாக கூறப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த மிருகங்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று ஒரேயொரு அரசியல்வாதியே உரத்துக்குரல் கொடுத்ததை காணக்கூடியதாக இருந்தது.

குரங்குகளை மாத்திரமல்ல, சாத்தியமானால் மயில்களையும் ஏற்றுமதி செய்யவேண்டும் என்று கூறிய ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார சுற்றுச் சூழலியலாளர்கள் உட்பட குரங்குகள் ஏற்றுமதியை எதிர்ப்பவர்கள் குரங்குகளும் மயில்களும் பயிர்களுக்கு சேதத்தை விழைவித்து விவசாய சமூகத்துக்கு ஏற்படுத்தியிருக்கும் இழப்புக்களை வனாத்தவில்லு, ஆனைமடுவ மற்றும் அநுராதபுரம் போன்ற பகுதிகளுக்கு நேரடியாக சென்று பார்வையிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இந்த குரங்குகள் ஏற்றுமதி விவகாரம் குறித்து கடந்த வாரம் அமைச்சரவையில் விளக்கமளித்த அமைச்சர் அமரவீர அதன் சாத்தியத்தன்மை குறித்து ஆராய்வதற்கு விவசாய, வனவிலங்குகள், பெருந்தோட்ட மற்றும் நீதி அமைச்சுக்களின் அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு அங்கீகாரம் கோரி அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கப்போவதாக கூறினார்.

குரங்குகள் ஏற்றுமதிக்கான யோசனையை சீன தனியார் நிறுவனம் ஒன்றே சமர்ப்பித்ததாகவும் சீன அரசாங்கத்துக்கு இதில் எந்த சம்பந்தமும் கிடையாது என்று கூறிய அமைச்சர் யோசனை ஒப்பேறுமானால் ஒரு இலட்சம் குரங்குகளும் ஒரே தடவையில் அனுப்பப்படப் போவதில்லை. கட்டங் கட்டமாகவே அனுப்பப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இது இவ்வாறிருக்க, இலங்கை குரங்குகளை சீனாவுக்கு அனுப்பும் முயற்சி குறித்து இந்திய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்கும் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை கற்கைகள் நிலையம் என்ற அமைப்பு முயற்சிக்கிறது.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கும் அந்த நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ரவீந்திர காரியவாசம் குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது இலங்கையினதும் இந்தியாவினதும் கலாசாரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் இரு நாடுகளின் குரங்குகளுக்கும் இடையில் மரபணு மற்றும் கலாசாரத் தொடர்புகள் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த சர்ச்சைகளை எல்லாம் கவனத்தில் எடுத்த கொழும்பில் உள்ள சீனத்தூதரகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் தவறான தகவல்கள் வெளியிடப்படுவதாக கூறியிருக்கிறது.

இலங்கையில் இருந்து குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கு எந்தவொரு சீன தனியார் நிறுவனமும் கோரிக்கை விடுத்தது பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று சீனாவில் வனவிலங்குகள் மற்றும் தாவர வகைகளின் இறக்குமதி, ஏற்றுமதியை கண்காணித்து நிருவகிக்கும் பிரதான அரசாங்க திணைக்களமான தேசிய காடு வளர்ப்பு, மேய்ச்சல் தரை நிருவாகம் தெளிவுபடுத்தியிருப்பதாக தூதரகம் கடந்த புதன் கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. குரங்கு ஏற்றுமதி குறித்து எந்த விண்ணப்பமும் எந்தவொரு தரப்பிடம் இருந்தும் அந்த நிருவாகத்துக்கு கிடைக்கப்பெறவில்லை என்று அறிக்கை கூறுகிறது.

சீன தூதரகத்தின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது விவசாய அமைச்சர் ஏற்றுமதி குறித்து கூறியதும் அமைச்சரவைக்கு அளித்த விளக்கமும் எல்லாமே பொய்ப் பேச்சா என்ற கேள்வி எழுந்தது.

இதையடுத்து விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச அமரசிங்க குரங்குகள் இனப்பெருக்க நோக்கத்துக்காகவே சீனாவுக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் "யுடைஅயட டீசநநனநைப டுயஅவைநன"என்ற சீன கம்பனியே ஒரு இலட்சம் குரங்குகளை கேட்டதாகவும் கடந்த வெள்ளியன்று அறிவித்தார்.

சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், விவசாயிகள், பொது மக்கள், சுற்றுலாத்துறையினர், மதத்தலைவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் என்று சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்புகளும் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளை விவசாய அமைச்சு செய்திருப்பதாகவும் அவர்கள் எல்லோரினதும் கருத்துக்களில் நியாயமானவற்றையும் ஏற்புடையவற்றையும் கருத்தில் எடுத்து குரங்குகளை அனுப்புவது குறித்து சிறந்த தீர்மானம் எடுக்கப்படும என்றும் அவர் கூறினார்.

காடுகள் மற்றும் வனப்பாதுகாப்பு பகுதாகளில் இருந்து அல்ல பயார்ச்செய்கைக்கு சேதம் விறைவிக்க ின்ற பகுதிகளில் இருந்தே குரங்குகள் ஏற்றுமதிக்காக பிடிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். இந்த அளவில் குரங்குப் பிரச்சினை இப்போது இருக்கிறது.

## நெடுந்தீவு...

நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு ஆண்களும் மூன்று பெண்களும் ஒரே வீட்டில் கொடூரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டனர். ஒரு வயோதிபப் பெண் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

## ஜி.எஸ்.பி...

விஜேவர்தனவிடம் இங்கிலாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை தவிர, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் சில பிரதிநிதிகளும், இது தொடர்பில், தமது அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## நெடுந்தீவில்...

பேர் தங்கியிருந்துள்ளனர். அனைவரும் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

காலையில் அவர்கள் ஆறு பேரும் சரமாரியான வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட செய்தி ஊரில் பரவி பதற்றத்தை ஏற்படுத்தியது.

தூக்கில் தொங்கிய நிலையில் பல நாட்களின் பின்னர் மீட்கப்பட்ட ஒரு சடலம் தொடர்பான விசாரணைகளுக்காகச் சென்ற பொலிஸ் தடயவியல் அணியினரும் அதிகாரிகளும் உடனடியாக கொலை நடந்த வீட்டைச் சுற்றி வளைத்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஊரவர்கள் எவரும் உள்ளே நுழைய அனுமதிக்கப்படவில்லை.

உள்ளே வெட்டுக் காயங்களுடன் இருந்தவர்களில் ஒருவரிடம் இருந்து மட்டும் முனகல் சத்தம் வெளிப்பட்டதை அடுத்து,

அவர் உயிருடன் இருந்தமையை உறுதிப்படுத்திய அதிகாரிகள் அவரை உடனடியாக கடற்படையினரின் படகு மூலம் குறிகாட்டுவானுக்கு அனுப்பி, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸில் எடுத்துச் சென்றனர். உயிருக்குப் போராடிய நிலையில்

மீட்கப்பட்ட நபர் வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருந்த பெண். அவருக்கு 98 வயது என்று ஊரவர்கள் கூறினர்.

சுப்பிரமணியம் மகாதேவா (வயது-78), நாதி பாலசிங்கம் (வயது-75), வேலாயுதபிள்ளை நாகரத்தினம் (வயது76), நாகசுந்தரி (வயது 74), பாலசிங்கம் கண்மணி (வயது 72) ஆகியோரே கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பிற்பகலில், சம்பம் இடம்பெற்ற இடத்திற்கு ஊர்காவற்றுறை நீதவான் கஜநிதிபாலன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் தடயவியல் நிபுணர்கள் அனைவரும் நேரில் சென்று விசாரணை நடத்தினர்.

பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். எனினும் கொலைக்கான காரணமோ, கொலையாளி பற்றிய துப்புக்களோ இன்னும் துலங்கவில்லை.

கொலை நடந்த வீட்டின் முன்பாக 20 மீற்றர் தொலைவில் கடற்படை முகாம் உள்ளது. எனினும் கடற்படையினருக்கும் இந்தக் கொலை பற்றிய எந்த விவரங்களும் தெரிந்திருக்கவில்லை.

கொலையாளிகள் வீட்டில் நின்றிருந்த நாயையும் வெட்டியுள்ளனர். அந்த நாய் காயப்பட்டபோதும் உயிர் தப்பியுள்ளது. உயிருக்குப் போராடிய வயோதிபப் பெண்ணிடம் அதிகாரிகள் வினவியபோது நான்கு பேர் இந்தக் கொலையில் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்று அர்த்தப்படுத்தக்கூடிய வகையில் அவர் சைகை காண்பித்தார் என்று கூறப்படுகின்றது. எனினும் அது பற்றி பொலிஸார் உத்தியோகபூர்வ தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை. (அ)

# பூமி தினத்தில் வெப்ப அலைகளின் மூலம் பூமி எமக்கான செய்தியை அனுப்பியுள்ளது

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஏப். 23

பூமியின் வளங்களை வருங்காலச் சந்ததிகளுக்காகப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஆண்டு தோறும் ஏப்ரல் 22ஆம் திகதி பூமி தினம் கொண்டாடப்படுகிறது. பூமி தினம் மட்டுமல்ல் சுற்றுச்சூழல் தினம், உயிர்ப்பல்வகைமை தினம், தண்ணீர் தினம், மண் தினம், சமுத்திரங்கள் தினம், வனவிலங்குகள் தினம், மலைகள் தினம், காடுகள் தினம், ஓசோன் பாதுகாப்புத் தினம் என்று சர்வதேச நாட்காட்டியில் ஏனைய விடயங்கள் தொடர்பான தினங்களைவிடப் பூமியைப் பாதுகாப்பதற்கான தினங்களே அதிகம். எனினும் எமது தலைமுறைக்குக்கூட மிச்சம்மீதி எதையுமே விட்டுவைக்காத வேகத்தில் வளங்களை நாம் சுரண்டி வருகிறோம். இவற்றுக்கான எதிர்வினைகளைப் பூமி அவ்வப்போது ஆற்றிவருகின்றபோதும் நாம் கண்டுகொள்வதாக இல்லை. இந்தப் பூமி தினத்திலும் வெப்ப அலைகளின் மூலம் பூமி "இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்" என்று எமக்கான வலுவான செய்தியை அனுப்பியுள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பூமி தினம் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பூமியின் மத்திய கோட்டுப் பகுதியில் அமைந்துள்ள தென்னாசிய நாடுகளில் கோடைகாலமான மார்ச்-ஏப்ரல் மாதங்களில் அதிக வெப்பநிலை நிலவுவது வழமை ஆனால், அண்மைய வருடங்களில் இக்காலப்பகுதியில் வழமைக்கு மாறாகத் தாங்கொணாத வெப்பம் உணரப்பட்டுள்ளது. இந்தியாவில் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் கடந்த ஒரு நூற்றாண்டின் மார்ச் மாதங்களில் நிலவிய வெப்பநிலையைவிட மிகக் கூடுதலான வெப்பநிலை பதிவாகியுள்ளது. மார்ச் தொடங்கி மே மாதம் வரையில் 280 தடவைகள் வெப்ப அலைகளின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது. இந்த ஆண்டும் சித்திரையில் கடந்த ஒரு நூற்றாண்டின் சித்திரை மாதங்களைவிட கூடுதலான வெப்பநிலை பதிவாகியுள்ளது. வெப்ப அலைகளின் தாக்குதலுக்கு இலங்கையும் தப்பவில்லை.

தாக்குகின்ற வெப்பஅலைகளின் எண்ணிக்கையும் அவற்றின் சூட்டுத் திறனும் அண்மைய வருடங்களில் அதிகரித்து வருவதற்குப் பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவதே பிரதான காரணமாகும். நாம் பெற்றோலியப் பொருட்களை அளவுகணக்கின்றி எரித்துத்தள்ளுவதும், கரிக்காற்றை உறிஞ்சவேண்டிய காடுகளை வரம்பின்றி அழித்துத்தள்ளுவதுமே பூமி சூடாகி வருவதற்கான காரணங்களாகும். காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கிடையேயான குழு இன்னும் இருபது வருடங்களில் பூமியின் சராசரி வெப்பநிலை 1.5பாகை செல்சியஸ் அளவால் அதிகரிக்கும் என்று எச்சரித்திருக்கிறது. இது வருங்காலங்களில் நாம் வெப்ப அலைகளின் தாக்குதல்களுக்கு மேலும் மிகமோசமாக ஆளாகவுள்ளோம் என்பதற்கான எச்சரிக்கையாகும்.

வெப்ப அலைகள் எமது இதயம், நுரையீரல், சிறுநீரகங்களின் ஆரோக்கியத்தைப் பாதிப்பதோடு, வெப்பவாதத்துக்கு ஆட்படுத்தி மரணத்துக்கும் இட்டுச்செல்கிறது. பூமியை வெப்பப்படுத்தி எம்மில் நாமே எரிதணலைக் கொட்டுகிறோம் என்பதற்கும் அப்பால், பூமியின் ஆரோக்கியத்திலும் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறோம். பூமி சூடாகுவதால் பனி மலைகள் உருகிக் கடல் மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. சூறாவளிகளின் தாக்குதிறன் மூர்க்கமாகி வருகிறது. ஒருபுறம் வறட்சி வாட்ட இன்னொரு புறம் வெள்ளம் பெருக்கெடுக்கிறது. உயிர்ப்பல்வகைமை அழிய ஆரம்பித்துள்ளது. பூமி வெப்பஅலைகளின் மூலம் விடுத்திருக்கும் செய்தியை நாம் உணர்ந்து இயற்கையோடு இசைந்து வாழ இப்புவி தினத்திலாவது உறுதியேற்போம் தவறின், ஒட்டுமொத்தப் பூமியின் அழிவுக்கும் நாமே காரணமாகி விடுவோம் - என்றும் தெரிவித்தார் .(அ)

## கொல்லப்பட்டோரின்...

வைத்தியசாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இதன் அடிப்படையில் உயிரிழந்த ஐவரின் உடல்களும் கடற்படையின் விசேட படகு மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டன. (அ)

## பொலிஸ்...

அதிகாலைக்கு இடைப்பட்ட வரையிலான காலப்பகுதியில் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இனந்தெரியாத சிலர் இந்தக் கொலைச் சம்பவத்தை முன்னெடுத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த வீட்டிலிருந்து காயங்களுடன் மீட்கப்பட்டவரின் உடல்நிலை சீராக உள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை தரப்பினர் தெரிவிக்கின்றனர். (அ)

## பெரமுன...

கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் 2023 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கட்சி அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமானது.

பொதுஜன பெரமுனவின் தலைவராக கூட்டத்தில் பங்கேற்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்/க்கு கட்சியின் செயலாளர் கடிதம் மூலம் தெரியப்படுத்தியபோதிலும், அவர் நேற்று கூட்டத்தில் பங்கேற்க மறுத்துவிட்டார்.

இதனால் நேற்றைய கூட்டம் கட்சித் தலைவர் இன்றி நடைபெற்றது. அதன் பின், அக்கட்சிக்கு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸுக்கு பதிலாக பேராசிரியர் உத்துராவல தம்மரதன தேரர் கட்சியின் தலைவராக ஏகமனதாக நியமிக்கப்பட்டார்.

கட்சியின் ஏனைய பதவிகளில் மாற்றம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டை நாசமாக்கியதில் பஸிலுக்கு முக்கிய பங்கு!

## விமல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 23

"கோட்டாபய ராஜபக்ஷவுடன் சேர்ந்து நாட்டை நாசமாக்கியவர்களில் பஸில் ராஜபக்ஷ முக்கிய பங்கு வகிக்கின்றார்" - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் முடிவெடுத்தபோது அவர் தோல்வியடைந்த - இயலாத தலைவராக இருக்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக - நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக அவருக்குக் கொடுத்த பணிகளை வெற்றிகரமாக செய்து முடித்தார்.

ஆனால், கோட்டா ஜனாதிபதியானவுடன் பி.பி. ஜயசுந்தர, மிலிந்த மொரகொட, அமெரிக்கத் தூதுவர் மற்றும் பஸில் ராஜபக்ஷ என எல்லோரினதும் வலையிலும் வீழ்ந்துவிட்டார்.

இறுதிக் காலத்தை அமெரிக்காவில் கழிக்க வேண்டும் என்பதுதான் கோட்டாவின் திட்டம். அதற்காக அமெரிக்காவைச் சந்தோஷப்படுத்த வேண்டிய தேவை கோட்டாவுக்கு ஏற்பட்டது.

அமெரிக்கா இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைத்துக் கொடுத்து இறுதியில் நாட்டை நாசமாக்கிவிட்டார் கோட்டா. அவருடன் சேர்ந்து நாட்டை நாசமாக்கியவர்களில் சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ முக்கிய பங்கு வகிக்கின்றார் - என்றார். (அ)

## வடக்கு...

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் இந்த கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ் ஊடக சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா, ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## கொலைகாரர்...

மக்கள் குற்றவாளியை உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி அதிகாரிகளை முற்றுகையிட்டனர். இதன்போது ஊர்காவற்றுறை நீதவானும் அங்கு சென்றிருந்தார்.

விசேட பொலிஸ் படை மற்றும் தடயவியல் பொலிஸார் ஆகியோர் நெடுந்தீவுக்கு பயணித்திருந்த நிலையில் இவ்வாறு மக்கள் ஒன்றுகூடி வலியுறுத்தினர்.

அத்துடன் நெடுந்தீவின் பாதுகாப்பு எங்கே ? கொலைகாரனை உடனடியாக கைது செய்! போன்ற பாதாதைகளை தாங்கியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# ராஜபக்ஷ குடும்பத்தால் இனிமேல் ஒருபோதும் ஆட்சிக்கு வரமுடியாது

## அடித்துச் சொல்கிறார் அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு, ஏப். 23

**"இலங்கையின் அடுத்த ஜனாதிபதியை தீர்மானிக்கப்போவது நாமே. இனிமேல் ஒருபோதும் ராஜபக்ஷ குடும்பத்தால் ஆட்சிக்கு வர முடியாது. அந்தளவுக்கு ராஜபக்ஷக்களால் நாடு வீழ்ந்துள்ளது" என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்து ரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்-

ராஜபக்ஷ குடும்பத்தினர் இனி 20 வீதத்துக்கும் குறைவான வாக்கு மட்டத்தில் தான் இருப்பார்கள். அவர்களது அரசியல் ஆதிக்கம் முடிந்துவிட்டது. அவர்களால் அரசியலில் அழுத்தம் மாத்திரம் கொடுக்க முடியும். தலைவர்களாக மாற முடியாது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை எடுத்துக்கொண்டால் சவாலை ஏற்றுக்கொள்ளும் திறமை அவரிடம் இல்லை. இவர்களுக்கு வெளியே இருந்து அடுத்த ஆட்சி மலரப் போகின்றது.

நாட்டுப் பற்று தொடர்பில் சரியாக சிந்திக்கக்கூடிய எல்லா தரப்பினரையும் நான் ஒன்றிணைத்து வைத்துள்ளேன். பெரிய திட்டமே என்னிடம் உள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது நாம் அந்த திட்டத்துக்குள் நுழைவோம்.

எந்த அடிப்படையில் என்று எவரும் இப்போது கேட்கவேண்டாம். அடுத்த ஜனாதிபதியை தீர்மானிக்கும் சக்தியாக நாமே இருப்போம்.

குடும்ப அரசியலை அடிப்படையாக கொண்ட கட்சியின் பக்கம் நாம் செல்லமாட்டோம். பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு வெளியேதான் எமது அரசியல் இப்போது உள்ளது.

இதற்கமைய ரணில் எமது பேச்சை கேட்பதற்கு தயார் என்றால் அவருடன் வேலை செய்வதற்கு நாம் தயார் - என்றார். (அ)

# ஆளுநரின் தவறை சுட்டிக்காட்ட தவறிவிட்டார் விக்னேஸ்வரன்!

## சீ.வீ.கே.சிவஞானம் குற்றச்சாட்டு




யாழ்ப்பாணம், ஏப். 23

நியதி சட்ட உருவாக்கம் தொடர்பில் வட மாகாண ஆளுநரிடம் சுட்டிக்காட்ட வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தவறிவிட்டார் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

குறிப்பிட்ட கலந்துரையாடலின் போது பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரால் அண்மையில் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டம், சட்டத்துக்கு விரோதமானது என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நேரடியாக குறிப்பிட்டிருக்கவேண்டும். அவர் அங்கு அவ்வாறு குறிப்பிடவில்லை - என்றார்.

# ஐ.தே.கவின் மேதினக் கூட்டத்தில் பங்கேற்காதிருக்க ரணில் முடிவு!



கொழும்பு, ஏப். 23

ஐக்கிய தேசியக் கட்சியால் இம்முறை நடத்தப்படும் மே தின பேரணியில் பங்கேற்கப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கட்சிக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

"கட்சி சார்பற்ற ஜனாதிபதியாக செயற்படும் நோக்கிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது." என்று ஐ.தே.கவின் முகாமைத்துவக் குழுவுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்களுடன் இணைந்து மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்யுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம், கொழும்பு சுகததாச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# முன்னாள் சட்டமா அதிபருக்கு மீண்டும் பயங்கரவாத புலனாய்வு பிரிவு அழைப்பு!

கொழும்பு, ஏப். 23

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நேற்று முன்தினமும் அந்த பிரிவில் ஆஜராகவில்லை.

அதன்படி நாளை திங்கட்கிழமை மீண்டும் அவர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். அவர் நாளை திங்கட்கிழமையும் ஆஜராகத் தவறினால், அவரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்ய நீதிமன்ற உத்தரவு பெறப்படும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



இதனை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு முன்னாள் சட்டமா அதிபருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

முன்னாள் சட்டமா அதிபர் ஏப்ரல் 19 அன்று பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டார், ஆனால் அவர் அன்று ஆஜராகவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணியொருவர் முன்னிலையாகி, முன்னாள் சட்டமா அதிபரை விசாரணைக்கு அழைக்க முடியாதென்ற சட்ட ஏற்பாடுகளை சுட்டிக்காட்டியிருந்தார். (அ)

# போதை ஊசிகளுடன் யாழில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடி பகுதியில் போதை ஊசிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து போதை ஊசிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் 27 வயதுக்கு உட்பட்ட இவர்கள் நகர் பகுதியில் பழ விற்பனையில் ஈடுபடும் நபர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# கடுமையான வெப்பத்தால் கர்ப்பிணிகளுக்கு பாதிப்பு

கொழும்பு, ஏப். 23

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக கர்ப்பிணி தாய்மார்கள் அதிகம் பாதிக்கப்படலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காஸல் மருத்துவமனையின் மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ நிபுணர் வைத்தியர் பேராசிரியர் சனத் லனரோல் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கர்ப்பிணித் தாய்மார்கள் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். மதிய நேரத்தில் வீட்டை விட்டு வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

முடிந்தவரை வீட்டிலேயே இருங்கள். நீங்கள் வழக்கமாக 2 லீற்றர் தண்ணீர் குடித்தால், தற்போது சுமார் 3 முதல் 4 லீற்றர் தண்ணீர் குடியுங்கள். அதிக வெப்பம் காரணமாக நீரிழப்பு ஏற்படலாம்-என்றார். (அ)

# கள்வர்களுடன் கரம் கோர்க்க நான் ஒருபோதும் தயாரில்லை

## தேசிய அரசு குறித்து பொன்சேகா சீற்றம்



கொழும்பு, ஏப். 23

"கள்வர்களுடன் இணைந்து தேசிய அரசமைப்பதற்கு எமது கட்சி தயாரில்லை." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

"எமது பக்கமும் ஒரிரு கள்வர்கள் இருக்கக்கூடும். அவர்களும் கட்சியில் வெளியேறுவார்கள் என எதிர் பார்க்கின்றோம். அப்போதுதான் எமது கட்சி தூய்மை யாகும்.

கள்வர்களுடனம் கரம் கோர்த்து தேசிய அரசமைப்பதற்கு நாம் தயாரில்லை. தற்போதைய அரசுக்கு தூர நோக்கு சிந்தனையும் இல்லை." - என்றும் பொன்சேகா குறிப்பிட்டார். (அ)

# பொதுஜன பெரமுன நடத்திய கூட்டம் சட்டபூர்வமானதல்ல!

கொழும்பு, ஏப். 23

நேற்றுக் காலை கூடிய சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்சபை சட்டபூர்வமானது அல்ல என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதன்போது எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற கடிதத் தலைப்பின் கீழ் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் பொதுக்கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் ஆரம்பமானது.

பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளராக சிரேஷ்ட பேராசிரியர் உத்துராவல தம்மரத்ன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார் என கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.